www.tamilarangam.net

வீழ்ந்த வேங்கைக்காய்... எழுந்த வரிகள்!

விடுதலை வேதம் சொன்னீர்
வீறுடன் நடையும் போட்டீர்
படுகளம் நோக்கிச் சென்று
பாதகர் பலம் பறித்தீர்
சுடுகலம் தாழ்த்தி – உம்
சுவடுகள் துதிக்கின்றோம்

களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் 09-12-1994

அன்பளிப்பு 40P

அனைத்துலக நாடுகளில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகள் உள்ளே...

# விடுதலைப் புலிகள் அறிவிப்பு; சிறீலங்கா உறுதி செய்தால் போர்நிறுத்தம்

## நாம் ஒருதலைப்பட்ச போர்நிறுத்தத்தை பிரகடனப்படுத்தியும் இராணுவம் அட்டூழியம்

**- அன்ரன் பாலசிங்கம்**

"படையினர் கடைப்பிடிப்பார்களென சிறீலங்கா அரசு உறுதி செய்தால் போர்நிறுத்தம்". சிறீலங்காவின் அரசு, விடுதலைப் புலிகள் ஒருவாரகால போர்நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தி அறிவித்தால், தாம் இருவாரகால போர்நிறுத்தத்தை அறிவிக்கமுடியும் என விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிய கடிதத்திற்கே, விடுதலைப் புலிகள் இவ்வாறு பதிலளித்துள்ளனர்.

இது குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள், நல்லூரில் நடைபெற்ற 'புலிகளின் குரல்' ஒலிபரப்பின் 4 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் விரிவான விளக்கமொன்றை மக்களுக்கு அளித்தார். அது வருமாறு:-

"சந்திரிகா அரசு எமது தலைவர் அவர்களுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது. அதில் ஒருவாரகாலத்திற்கு போர்நிறுத்தம் ஒன்றைப் பிரகடனம்செய்து, உத்தியோகபூர்வமாக அறிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. இவ்வாறு போர்நிறுத்தம் பிரகடனப்படுத்தப்பட்டால், தாங்கள் இருவாரகால போர்நிறுத்தமொன்றை அறிவிக்கமுடியும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருதலைப்பட்சமாக நாங்கள் அறிவித்த போர்நிறுத்தம் குறித்து; தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும் கடிதத்தில் தெரிவித்திருக்கின்றார்கள். இது முற்றிலும் உண்மைக்கு மாறானது. நாங்கள் ஒருதலைப்பட்சமாக ஒருவாரகால போர்நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தியதை வெளியுலகிற்கு தெரியப்படுத்தியது நாங்கள் இல்லை; சிறீலங்காவின் ஆட்சியாளர்களே வெளிப்படுத்தினர். உண்மை இப்படியிருக்கையில், சிறீலங்கா அரசு உண்மையை மூடிமறைக்க முயல்கின்றது.

பேச்சுவார்த்தைக்கு நாங்கள் இன்னும் தயார்; எமது கதவு திறந்தே இருக்கின்றது. பேச்சுவார்த்தையை படிப்படியாக நடத்தவே சிறீலங்கா விரும்புகிறது. இதற்கு நாம் எதிர்ப்பில்லை. பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்கு தீர்வுகாணவே நாமும் விரும்புகின்றோம்.

நாம் பிரகடனப்படுத்திய ஒருதலைப்பட்சமான ஒருவாரகால போர்நிறுத்த நாட்களில், எமது பகுதிகளில் நடந்த இராணுவ அட்டூழியங்களை மக்கள் அறிவார்கள். எமது முக்கிய உறுப்பினர் மல்லி என்பவர் அநியாயமாகக் கொல்லப்பட்டிருக்கின்றார். அவரது தலையில்லாத உடலையே நாங்கள் மீட்கமுடிந்தது. இதுபோன்று வடமராட்சியில், மன்னார் அரிப்பு பகுதியில் இராணுவ அட்டூழியங்கள் நிகழ்த்தப்பட்டன. போர்நிறுத்தத்தை நாங்கள் கடைப்பிடித்த நாட்களில், சிறீலங்காப் படையினர் பல அட்டூழியங்களைச் செய்துள்ளனர். இதன் பின்னணியில் இருந்தவர்கள் யார்? சமாதான முயற்சியில் நம்பிக்கை இல்லாத -விருப்பமில்லாத சிறீலங்காப்படை அதிகாரிகளே இதனைச் செய்வதற்குக் காரணமாயிருந்திருக்கின்றார்கள்.

## ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்பு எங்கள் நல்லெண்ணத்தை சிறீலங்கா உதாசீனம்

**- கரிகாலன்**

நாங்கள் மீண்டும் போர்நிறுத்தமொன்றைப்பிரகடனம் செய்தால், அதனைச் சிறீலங்கா படையினர் கடைப்பிடிப்பார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கின்றது. எனவே சிறீலங்கா இந்த ஒருதலைப்பட்ச போர்நிறுத்த காலத்தில் நடந்த இராணுவ அட்டூழியங்கள் பற்றி விசாரணை நடத்தவேண்டும்.

இது நியாயமான கோரிக்கையாகும். சிறீலங்காவின் புதிய அரசின் பிரதிநிதிகளுக்கும் எமது பிரதிநிதிகளுக்குமிடையே இங்கு

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்...



அடிமை விலங்கொடித்த விடியலின் பிறப்புக்களே! விழிகளை விரிப்பது நாளைய விடியலுக்கா?

# சந்திரிகா அரசிற்கு எதிராக மன்னார் மக்கள் ஆர்ப்பாட்டம்

சந்திரிகாவின் புதிய அரசு தங்களுடைய பட்டினிச் சாவுக்குக் காரணமாக இருப்பதாகக் கூறி மன்னார் மீனவர்கள் சிறீலங்காவின் அரசு அதிபர் அலுவலகத்திற்கு முன்பாக திரண்டுவந்து மறியல் போராட்டத்தில் இறங்கினர். "பஞ்சம் கொடுமையானது, பட்டினிச் சாவு அதனிலும் கொடியது" "உணவின்றித் தவிக்கிறோம், உழைக்கவிடு" "உலர் உணவு வேண்டாம், உழைத்து உண்ண விடைகொடு" "எங்களைச் சோம்பேறிகளாக்காதே, எங்கள் தொழிலைச்செய்ய அனுமதி" போன்ற பல்வேறு கோசங்களுடனும், சுலோக அட்டைகளுடனும் மக்கள் மறியல் போராட்டம் நடத்தினர். இப்போராட்டத்திற்கு மன்னார் மாவட்ட மீனவர் சம்மேளனத்தின் தலைவர் அருட்திரு ஜே. பி. தேவராஜ் அடிகள் தலைமை தாங்கினார்.

இது ஒருபுறமிருக்க, யாழ். மாவட்டத்தில் பொருட்கள் கையிருப்பில் இல்லாததினால் உலர் உணவு விநியோகமும் தாமதமடையும் என சிறீலங்காவின் யாழ். செயலக ஊழியர் ஒருவர் அறிவித்துள்ளார்.

வடபகுதிக்கு அண்மைய நாட்களாக கப்பல் செல்லாததினால் மா, சீனி என்பனவற்றுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. ஒரு கிலோ சீனி 45 ரூபாவாகவும், ஒரு கிலோ மா 20 ரூபாவாகவும் விலையுயர்ந்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர், வடபகுதி மக்களின் சாதாரண தேவைகளைக்கூட ஏறெடுத்துப் பார்க்காதவகையில், சிறீலங்காவின் புதிய அரசு இயங்கத் தொடங்கியுள்ளதென, வடபகுதியின் கல்விமான்களும் மதத்தலைவர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர். ■

# சிறீலங்காவின் புதிய திட்டத்தால் திருகோணமலை நச்சுத்தன்மையாகலாம்

சிறீலங்கா அரசு 120 கோடி டொலர் அமெரிக்க உதவியுடன், 950 மெகா வாட்ஸ் மின்சக்தியை வெப்பசக்தி உலை (Thermal) மூலம் பெறுவதற்கான திட்டம் ஒன்றை, திருகோணமலையில் செயற்படுத்த ஏற்பாடு செய்துவருகின்றது.

இந்த வெப்பசக்தி ஆலையை திருகோணமலையில் அமைப்பதற்கு சூழலியலாளர்கள் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளனர். இதன்மூலம் இந்த உலைக்கு அருகிலுள்ள காடுகளும், கடலில் உள்ள மீன்படு பகுதிகளும் நச்சுத்தன்மைக்கு உள்ளாகும் பேராபயம் உள்ளதென வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர். ஆயினும் சிங்கள வர்த்தக சமூகம், இவ்வேலையை உடனே தொடங்காவிட்டால், எதிர்வரும் ஆண்டுகளில் வரட்சி ஏற்படுமானால் மின்சாரப்பிரச்சினை ஏற்படும் எனக் கூறி, சிறீலங்கா அரசை இந்த ஆலையை உடன் அமைக்கும்படி தூண்டிவருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ■

# சிறீலங்காவின் கெடுபிடியால் யாழ் மாவட்டச் சிசுக்கள் மரணம்

☆ பிரித்தானியா அனுப்பிய உபகரணம் பழுதடைந்தமைக்கு சிறீலங்காவே பொறுப்பு

யாழ். மாவட்டத்தில் பேறு காலத்திற்கு முன்பாகப் பிறக்கும் சிசுக்களைப் பராமரிப்பதற்கென, பிரித்தானிய அரசு இரு கண்ணாடி குழந்தைப் பராமரிப்புப் பெட்டிகளைக் கொடுத்து உதவியது. ஆயினும் சிறீலங்காவின் கெடுபிடிகளால் கொழும்பில் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்ட உபகரணங்கள், யாழ். மருத்துவமனையை வந்தடையும் பொழுது பழுதடைந்து போயிற்று. இதனால் யாழ். மாவட்டத்தில் நிறைகுறைந்து பிறக்கும் சிசுக்களின் மரணம் அதிகரித்துள்ளது. இந்த மனிதாபிமானமற்ற படுபாதகச் செயலுக்கு சிறீலங்கா அரசே முழுப்பொறுப்பு. பிரித்தானிய அரசு இவ்விடயம் குறித்து சிறீலங்காவை வினவி எச்சரிக்கவேண்டிய தேவை உள்ளதென, அனைத்துலக மனிதாபிமான நிறுவனங்கள் குரல் எழுப்பி வருகின்றன. ஆயினும் சிறீலங்காவின் சந்திரிகா அரசு , சிறீலங்காவின் செயலால் பழுதடைந்த இந்த உபகரணங்களுக்கு மாற்று உபகரணங்கள் வழங்குவதற்கான எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை.

இதற்கிடையில் சிறீலங்கா யாழ். மாவட்டத்தின் பொதுச் சுகாதாரத்தில் காட்டிவரும் அலட்சியம் காரணமாக அங்கு தொற்றுநோய்கள் அதிகரித்துள்ளன. இவ்வாண்டின் சித்திரை மாதம் முதல் புரட்டாதி வரையிலான ஆறுமாதத்தில் 465 பேர் வயிற்றோட்ட தொற்றுநோயாலும், 282 பேர் நெருப்புக் காய்ச்சலினாலும், 25 பேர் செங்கண்மாரியினாலும் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் என புள்ளிவிபரங்கள் வெளியாகியுள்ளன. ■

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இரவு பகலாக எறிகணை வீச்சு வடமராட்சி கிழக்கில் இடம்பெயர்வு

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி சிறீலங்கா இராணுவ முகாமில் இருந்து குடியிருப்புப் பகுதிகள் மீது, ஆட்லறி எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இரவு பகலாக இத் தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன.

மண்டலாய், ஊரியான் குடியிருப்புகள் மீதே இத் தாக்குதல்கள் அதிகமாக இடம்பெறுகின்றன. இப் பகுதிகளில் இருந்த மக்கள் இடம்பெயர்ந்து சென்றுவிட்டதினால் உயிர் ஆபத்துக்கள் தவிர்க்கப்பட்டன.

இத்தாக்குதல் சம்பவத்தையடுத்து உடுத்துறை பகுதிக்கு அப்பால் உள்ள மக்களும் இடம்பெயர்ந்துள்ளனர். கடலில் கடற்படையினரின் ரோந்து சேவைகளும் காணப்படுகின்றன. ■

# தொடரும் கடும் மழையினால் குடாநாட்டில் தொற்று அபாயம்

## குழந்தைகளுக்கு வயிற்றோட்ட நோய் பரவல்

யாழ். மாவட்டத்தில் கொடிய தொற்றுநோய்களின் பெருக்கம் அதிகரித்துள்ளது. அண்மைக் காலமாகப் பெய்துவரும் அடைமழை காரணமாக, குடியிருப்புப் பகுதிகளில் நீர்த்தேக்கம் ஏற்பட்டுள்ளது. இதன்காரணமாக வாழ்விடங்களில் தொற்றுநோய்கள் தீவிரமாகப் பரவத் தொடங்கியுள்ளன.

சமீபநாட்களில் யாழ். மாவட்டத்தில் வயிற்றோட்டம், நெருப்புக் காய்ச்சல், தடிமன் ஆகிய தொற்றுநோய்களின் பரவல் அதிரித்துள்ளது.

குறிப்பாகக் குழந்தைகள் நூற்றுக் கணக்கில் இந்தக் கொடிய நோய்களினால் பாதிப்படைந்து, யாழ். மாவட்ட அரச -தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை பெரியவர்கள் பலரும் இந்நோய்க்கு உள்ளாகியுள்ளனர் என எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்நோய்க்கு கடுமையாக பாதிப்படைந்தவர்களில் சிலர், இறந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ந்து பெய்துவரும் கடும் மழையினால், ஏதிலி (அகதி) முகாம்கள் மற்றும் தாழ்நிலக் குடியிருப்பு பகுதிகளில் வெள்ளம் தேங்கியுள்ளது. இங்கு கிணறு, மலசலகூட வசதிகள் அற்ற நிலை தொடர்கின்றது.

தூய்மையான நீரில்லை. மலசலங்கள் கிணற்று நீருடன் கலபடும் தன்மையும் ஏற்பட்டுள்ளது. இதனாலும் நுளம்புபோன்ற நோய்க் காவிகளின் பெருக்கத்தினாலும், இந்த அபாய நோய்கள் மக்கள் மத்தியில் தீவிரமாகப் பெருகத் தொடங்கியுள்ளன.

வயிற்றோட்டம் போன்ற நோய்களிலிருந்து தப்பித்துக்கொள்ள, சுடவைத்து ஆறிய நீரைப் பருக வேண்டும் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ■

# எறிகணையை சம்மட்டியால் அடித்தவர் வயிறு பிளந்து மரணமானார்

## வேறொரு சிறுவனுக்கும் காயம்

நிலத்தில் கிடந்த எறிகணையை எடுத்து சம்மட்டியால் அடித்த சிறுவன், வயிற்றுப் பகுதியில் படுகாயமடைந்து குடல் வெளியில் வந்த நிலையில் மரணமானார். அருகில் இருந்த சிறுவன் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதன்போது ராசு சிவகரன் (வயது 14) என்பவர் மரணமானார். இவரது உறவினர் சிறிகாந்தராசா தினேஸ் (வயது 3) காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் உரும்பிராய் கிழக்கு யோகபுரம் பகுதியில், தமது வீட்டுக்கு அருகில் உள்ள பனை வளவில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன், எறிகணை ஒன்றைக் கண்டெடுத்து வீட்டிற்குக் கொண்டு வந்தார் என்றும், பின்னர் அதனை சம்மட்டியால் ஓங்கி அடித்தார் என்றும் கூறப்பட்டது.

எறிகணை பெரும் சத்தத்துடன் வெடித்துச் சிதறியதையடுத்து அயலவர்கள் ஓடிவந்து பார்த்த போது, சிறுவன் வயிற்றுப்பகுதியில் பலத்த காயமடைந்து இரத்த வெள்ளத்தில் கிடந்தார் எனவும், அவரது குடல் வெளியில் காணப்பட்டது எனவும், அருகில் மற்றைய சிறுவன் தலையில் காயமடைந்த நிலையில் வீழ்ந்து கிடந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அயலவர்களின் உதவியுடன் சிறுவர்களது பெற்றோர், காயமடைந்தவர்களை உடன் வைத்தியசாலைக்கு கொண்டு வந்தனர். அங்கு ஒருவர் மரணமானார். ■

# சிறீலங்கா விமானப்படை விமானங்களின் அச்சுறுத்தல் மத்தியிலும் தமிழீழத்தில் மாவீரர் நாள் விழாக்கள்

தமிழீழத் தேசிய எழுச்சி நாளான மாவீரர் நாள் தமிழீழப் பகுதியெங்கும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளது. சிறீலங்கா விமானப்படை விமானங்கள், மாவீரர் நாள் விழாக்களைக் குழப்பக்கூடிய வகையில், பெரும் அச்சுறுத்தல்களை மேற்கொண்டன. விமானப்படை விமானங்களின் அச்சுறுத்தல் மத்தியிலும், எமது இனத்தின் விடுதலைக்காகவும் கௌரவத்திற்காகவும் பாதுகாப்பிற்காகவும் தமது இனிய, இளைய உயிர்களை அர்ப்பணித்த நம் மறவர்களைக் கௌரவித்து வணக்கம் செலுத்துவதற்காக, தமிழீழமக்கள் அனைவரும் மாவீரர் துயிலும் இல்லங்களில் ஒன்று திரண்டிருந்தனர்.

மாவீரர் நாளை முன்னிட்டு தமிழீழ பகுதியெங்கும் விழாக்கோலம் பூண்டிருந்தது. வீதிகள், பொதுவிடங்கள் யாவும் அலங்கரிக்கப்பட்டு மாவீரரின் உருவப் படங்கள் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன. வீதிகளில் அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டு மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. தமிழீழமெங்கும் பரவலாக எழுச்சிக்கூட்டங்கள் நடாத்தப்பட்டதோடு, மதவழிபாட்டுத் தலங்களில் மாவீரர் நினைவாக விசேட பூசைகளும் பொதுமக்களால் செய்யப்பட்டன. ■

# பக்கம் பக்கமாக சைக்கிள் ஓட்டுவோர் மீது நடவடிக்கை

பக்கம் பக்கமாகச் செல்லும் துவிச்சக்கரவண்டிகள் செலுத்துனர் மீது சென்ற மாதம் ஒன்பதாம் நாள் முதல் காவல் துறையினர் ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் என தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் அறிக்கையொன்றின் மூலம் அறியத்தந்துள்ளார்.

அந்த அறிக்கையின் விபரம் வருமாறு; "கடந்த சில மாதங்களாக யாழ். குடாநாட்டுப் பிரதேசத்தில் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இதனால் ஏராளமானோர் காயப்பட்டும், சிலர் மரணத்தைத் தழுவியும் உள்ளனர். எமது மக்களின் உயிர்களையும், உடைமைகளையும் பாதுகாக்கும் பாரிய பொறுப்பு எம்மைச் சார்ந்தது. இவ்வாறு எமது மக்களின் உயிர்கள் அநியாயமாக இழக்கப்படுவதை எம்மால் பார்த்துக் கொண்டு இருக்கமுடியாது. நாம் இவ் வீதி விபத்துக்களை தடுக்கும் பொருட்டு, கடந்த காலங்களில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். செய்தித்தாள்கள், வானொலி மூலமாகவும் பிரசாரங்களை மேற்கொண்டோம்.

இவற்றை முற்றாகத் தடுத்து நிறுத்தும்பொருட்டு பாடசாலைகள், பொது நிறுவனங்கள் ஆகியவற்றில் வீதி விபத்துக்கள் பற்றிய கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றோம். இருந்தாலும் அண்மைக்காலங்களில் வீதி விபத்துக்கள் அதிகரித்த வண்ணம் உள்ளன. இவ்விபத்துக்களுக்கான காரணம் பற்றி ஆய்வுகள் மேற்கொண்டபொழுது, பின்வரும் காரணங்களைக் காணக்கூடியதாக உள்ளது.

1. தற்போதைய சூழ்நிலையில் துவிச்சக்கரவண்டிகளின் பாவனை அதிகமாகவுள்ளமை.

2. இவ் வண்டிகளைச் செலுத்தும் செலுத்துனர்கள், வீதிப் போக்குவரத்து விதிமுறைகள் பற்றி நன்றாக அறிந்திருக்காமை.

விபத்திற்கான முக்கிய காரணங்களில், துவிச்சக்கரவண்டிகளில் பக்கம் பக்கமாகச் செல்வதும், கை கோர்த்தவண்ணம் கதைத்தபடி செல்வதும் குறிப்பிடத்தக்கதாகும். இதன் காரணமாக, இவ்வாறான துவிச்சக்கரவண்டி செலுத்துனர்கள் பாதையில் வரும் பாதசாரிகள் பற்றியோ அல்லது வாகனங்கள் பற்றியோ உணரமுடியாத நிலையில் உள்ளனர்.

எனவே எமது மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு பக்கம் பக்கமாகச் செல்லும் துவிச்சக்கரவண்டிகள் செலுத்துனர் மீது 09.11.94 முதல் காவல்துறையினர் ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் என்பதை அறியத்தருகின்றோம்." ■

# மேஜர் கணேசுக்கு மாலை அணிவித்து அஞ்சலி

தமிழீழ விடுதலைப் போரில் தனது இன்னுயிரை ஆகுதியாக்கிய மேஜர் கணேஸ் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவை முன்னிட்டு, திருநெல்வேலிச் சந்தியில் அமைந்துள்ள அவரது திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து வணக்கம் செலுத்தப்பட்டது.

05.11.1994 அன்று மாலை 4.40 மணியளவில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஈகச்சுடரை திருமலை மாவட்டத் தொடர்பகப் பொறுப்பாளர் திரு. ரஞ்சி அவர்கள் ஏற்றிவைத்தார்.

மாவீரனின் சகோதரன் உருவப் படத்திற்கு மலர் மாலையை அணிவித்தார். இதனைத் தொடர்ந்து திருமலை மாவட்ட மாவீரர் செயற்பாட்டுக்குழு உறுப்பினர்களும் போராளிகளும் மலர் வணக்கம் செலுத்தினர். ■

# வெற்றிபெற்ற மாணவனுக்கு தலைவர் பரிசு வழங்கினார்

காந்தருபன் அறிவுச்சோலையின் முதலாவது ஆண்டு நிறைவுவிழா 01.11.1994 அன்று வெகுசிறப்பாக நடைபெற்றது. மாலை 6 மணிக்கு காந்தருபன் அறிவுச்சோலையில் தொடங்கிய இந்நிகழ்வில், தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் கலந்து கொண்டு, வாழ்த்துச் செய்தியை வழங்கினார்.

தலைவர் அவர்கள் 'இளங்கதிர்' எனும் பெயரில் வெளியாகும் காந்தருபன் அறிவுச்சோலையின் எட்டாவது மாதக் கையெழுத்துப் பிரதியை, அறிவுச்சோலைப் பொறுப்பாளர் திரு. ரமேஸ் அப்பா அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டார். மேலும் தலைவர் அவர்கள், தியாகி திலீபனின் நினைவுக் கட்டுரைப் போட்டியில் முதலிடம்பெற்ற செல்வன் தவக்குமாருக்கு பரிசு வழங்கிக் கௌரவித்தார். இதனைத் தொடர்ந்து காந்தருபன் அறிவுச்சோலை மாணவர்கள் கலை நிகழ்ச்சிகளை வழங்கியதோடு, காந்தருபன் அறிவுச்சோலை வாழ்த்துச்செய்தியும் வாசிக்கப்பட்டது. ■

# மண்டைதீவு படையினர் தினமும் துப்பாக்கிச்சூடு

மண்டைதீவுப் பகுதியில் உள்ள சிறீலங்கா படையினரின் நிலைகளில் இருந்து, தினமும் யாழ். கரையோரப் பகுதிகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் கலிபர் தாக்குதல் என்பன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விட்டு விட்டும் தொடர்ச்சியாகவும் மேற்கொள்ளப்படும் இத் தாக்குதல்கள், இரவில் நடாத்தப்படுவது தினசரி நிகழ்வான போதிலும் சிலவேளைகளில் பகலிலும் மேற்கொள்ளப்படுகின்றது. கரையோரப் பகுதிக் கடலில் தொழிலில் ஈடுபடும் மீனவர்களை இலக்கு வைத்தும், மேற்படி தாக்குதல்கள் நடாத்தப்படுகின்றன. ■

# சவுக்கு நடுகைத் திட்டம் வைபவரீதியாக தொடக்கம்

மணற்காட்டுப் பகுதியில் அண்மையில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி திரு. சூசை அவர்களினால், 200 ஏக்கர் சவுக்குமர நடுகைத் திட்டம் வைபவரீதியாகத் தொடக்கிவைக்கப்பட்டது.

இத்திட்டத்துடன் சேர்த்து 50 ஏக்கர் தென்னங்கன்று நடுகைத் திட்டத்தையும், யாழ். மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி அவர்கள் தொடக்கிவைத்தார்.

200 ஏக்கர் சவுக்கு, 50 ஏக்கர் தென்னங்கன்று நடுகைத் திட்ட நிகழ்வு சூழல், பாதுகாப்பு நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்விற்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சூழல் பகுதி பொதுமுகாமையாளர் திரு. மு. உமைநேசன் (சஞ்சை) அவர்கள் தலைமை தாங்கினார்.

இந்நிகழ்வின் தொடக்க நிகழ்வாக, மங்கள விளக்கை யாழ். மாவட்ட பதில் அரச அதிபர் திருமதி பத்தினியம்மா அவர்கள் ஏற்றிவைத்தார்.

தலைமை உரையினைத் தொடர்ந்து, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் திரு. வி. செம்பியன் அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார். இதனை அடுத்து யாழ். செயலகத் திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் அவர்கள் உரை நிகழ்த்தினார்.

இறுதியாக மரம் நடுகை நிகழ்வு நடைபெற்றது. முதலில் சவுக்கு மர நடுகையும் அடுத்து, தென்னங்கன்று நடுகையும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் அரச உயர் அதிகாரிகளும் பெருமளவு பொதுமக்களும் கலந்துகொண்டு மரக்கன்றுகளை நாட்டிவைத்தனர். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கௌரவத்துடன் கூடிய சமாதானம்

சிறீலங்காவின் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கா மக்களுக்கு விடுத்த செய்தியில், "எங்கள் சமாதான முயற்சி தொடரும்; அது மோதலில் சம்பந்தப்பட்டுள்ள இரண்டு பகுதியினருக்கும் கௌரவத்துடன்கூடிய சமாதானமாக அமையவேண்டும்" எனக்கூறினார். இதற்கு மதிப்பளித்து, தமிழீழ விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமான போர்நிறுத்த அறிவிப்பைவிடுத்து, சமாதான முன்னெடுப்புக்கான பாதைகளை உறுதிப்படுத்த விரும்பினர்.

ஆயினும் இவ் நல்லெண்ண அடையாளத்தை உதாசீனப்படுத்திய சிறீலங்காப் படையினர், இராணுவ அட்டூழியங்களை இந்த ஒருதலைப்பட்சமான போர்நிறுத்த காலப்பகுதியில் வேகப்படுத்தினர். குடாநாட்டில் சாவகச்சேரி மீது குண்டுவீச்சு நடாத்தப்பட்டதுமல்லாமல், எல்லைக் கிராமங்களிலும் தென்தமிழீழத்திலும் கடல்வழி -வான்வழித் தாக்குதல்களுடன்கூடிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதனால் அப்பாவிப் பொதுமக்களின் உயிர், உடல், உடைமைகள் அழிக்கப்பட்டதுடன், தமிழீழ விடுதலைப் புலிகளின் உளவுப்பிரிவைச் சேர்ந்த மல்லி அவர்களையும் தமிழீழம் இழந்தது. மனிதநேய நோக்கின்றி இயங்கிய சிறீலங்காப் படையினரின் செயலால், மல்லியினுடைய தலையில்லாத உடலே மீட்கப்பட்டது. இதனால் தமிழீழத்தின் தன்மான உணர்வுகள் வேகத்துடன் எழுந்துகொண்டிருந்த வேளையில், "ஒருவாரகால போர் நிறுத்தத்தை விடுதலைப் புலிகள் பிரகடனப்படுத்தி, உத்தியோகபூர்வமாக அறிவித்தால், தாம் இருவாரகால போர்நிறுத்தத்தைப் பிரகடனம் செய்வதாக" சிறீலங்கா அரசு, தலைவர் பிரபாகரன் அவர்களுக்குக் கடிதம் எழுதியது. விடுதலைப் புலிகளின், ஒருதலைப்பட்சமான போர்நிறுத்த காலத்தில் படையினர் நடாத்திய அட்டூழியங்களுக்கு, பெயரளவிலான கவலையோ -மன்னிப்போகூட சிறீலங்காவின் அரசால் தெரிவிக்கப்படவில்லை; மாறாக படையினரின் அட்டூழியங்களை அனைத்துலக சமூகத்தின் முன்பாக நியாயப்படுத்தக்கூடிய வகையில், ஒருதலைப்பட்சமான போர்நிறுத்த அறிவித்தல்பற்றி தமக்குத் தெரியாது என, உண்மைக்கு மாறானவற்றைத் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளது சிறீலங்கா அரசு. இதன்மூலம், சமாதான முயற்சிகளைக் குழப்ப விரும்பும் படையினரின் நடவடிக்கைகளுக்கு சட்டவலுவினை அளிக்கின்றது; சட்டப்பாதுகாப்பினைக் கொடுக்கின்றது.

இந்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள், "படையினர் கடைப்பிடிப்பார்களென சிறீலங்கா உறுதிசெய்தாலே போர் நிறுத்தம்" என்கின்ற ஆழமான பதிலை அளித்து, தமிழீழ மக்களின் தேசியப் பாதுகாப்புக்கான தமது கடமையை வெளிப்படுத்தியுள்ளனர். அத்துடன் தமிழீழத்தின் அரசுநோக்கிய அரசாக (Defacto Government) உள்ள விடுதலைப் புலிகள் தமது மக்களின் நலன்களை மையப்படுத்தி போர்நிறுத்தம், வடபகுதிக்கான பொருண்மியத் தடையினை முற்றாக நீக்குதல், மக்களின் நடமாடும் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் பூநகரி சிறீலங்காப்படை முகாமை அகற்றுதல் எனும் கோரிக்கைகளை சிறீலங்காவிடம் முதற்சுற்றுப் பேச்சுவார்த்தையின்போது வலியுறுத்தினர். இதன்மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழ மக்களின் அரசு என்பதை உலகுக்குத் தெளிவாக உணர்த்தியுள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் படை வலிமைக்கும், அரசியல் சாணக்கியத்திற்கும் முன்னால் நிலைநிற்கமுடியாத சிறீலங்கா, கால இழுத்தடிப்பு எனும் உத்தியின் மூலம், சிக்கலை தீர்வுகாணாச் சிக்கலாகவிடவே முயற்சி செய்கின்றது. சிறீலங்கா அரசு முன்னைய படை அதிகாரிகளின் அமைப்பில் எதுவித மாற்றத்தையும் செய்யவில்லை; அதேவேளை தனது நழுவல் நிலைக்குப் படை அதிகாரிகள் மீது பழிபோடும் உத்தியைக் கையாள்கின்றது.

இதேவேளை தமிழர்களுக்கு நிர்வாகத்தில் அதிக பங்களிப்பைக் கொடுத்தல், தமிழர்களின் பொருண்மியத்தைத் தாங்களே அபிவிருத்திசெய்யத் துடிப்பதாகக் காட்டுதல், சிங்களக் காவற்றுறையினரின் அதிகாரங்களைக்கூட்டி -படையினராகப் பயன்படுத்தி -பொதுமக்கள் பாதுகாப்பு என்ற போர்வையில் ஆக்கிரமிப்புக்களைத் தொடருதல், முதலான நடவடிக்கைகளின் மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தைத் திசைதிருப்பிப் பின்னர், தமது தீர்வுகளைத் திணித்தல் என்கின்றபோக்கு, சிறீலங்காவின் புதிய அரசில் உள்நோக்காக வளர்க்கப்படுகின்றதா என்ற ஐயம் வலுப்பெற்று வருகின்றது.

சிறீலங்கா எதனைச் செய்தாலும் திருமதி சந்திரிகா அவர்கள் கூறியதுபோல், "கௌரவத்துடன்கூடிய சமாதான முயற்சிகளால் மட்டுமே, இலங்கைத்தீவில் அமைதி திரும்பமுடியும்" என்பது அனைத்துலகிற்கும் தெரியும். சந்திரிகா அம்மையார் சொல்லில் சொல்வதுடன் நிற்காது, செயலில் காட்டவேண்டிய நேரம் இது. திரு. கரிகாலன் அவர்கள் கூறியுள்ளதுபோல், "பொறுத்திருந்து பார்ப்போமே". ■





## யேர்மனியில்
# தளபதி கேணல் கிட்டு நினைவுப்போட்டி
## 1995

ஒரு காலத்தின் பதிவாகிவிட்ட தளபதி கேணல் கிட்டு அவர்களை நினைவுகூரும்முகமாக யேர்மன் கலை பண்பாட்டுக் கழகத்தினர் பேச்சு, கட்டுரை, கவிதை, ஓவியப் போட்டிகளை நடாத்த உள்ளனர்.

நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு எல்லா வயதினருக்குமாக இந்தப் போட்டிகள் 1995 ஆம் ஆண்டு தை மாதத்தில் நடாத்தப்படும்.

விண்ணப்பப்படிவங்களுக்கும் விதிமுறைகளுக்கும் மேலதிக விபரங்களுக்கும் நீங்கள் தொடர்புகொள்ளவேண்டியது:-



Mr. K. Sivanathan,
Stein Str 18,
37441 Bad Sachsa.
தொலைபேசி எண்: 05523 / 8608


# எமது வாழ்வுக்காக மரணிக்கும் மாவீரர்கள்

## புலம்பெயர்ந்து வாழ் தமிழீழ மக்களே!



ஒவ்வொரு வருடமும், நவம்பர் 27 ஆம் திகதியன்று மாவீரர் நாளை, உலகெங்கனும் உள்ள தமிழீழ மக்களாகிய நாம் கொண்டாடுகின்றோம். வீடுகளிலும், பொது இடங்களிலும் மாவீரர் படங்களுக்கும், சிலைகளுக்கும் விளக்கேற்றி,, மலர்சாத்தி, நறுமணப்புகைகளைக் கொழுத்தி அஞ்சலிக்கின்றோம். எம் உயிரோடும், உணர்வோடும் கலந்துவிட்ட அம் மாவீரர்களை நினைவுகூர்ந்து, எம் இதயக் கோவிலில் வைத்துப் பூசிக்கின்றோம்.

இம் மாவீரர்கள் பற்றி, எம் மக்கள் மட்டுமல்ல உலகமே அறிந்துகொண்டுள்ளது. ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உழைக்கும் விடுதலைப் போராளிகளுக்கு இம் மாவீரர்களது வாழ்க்கை ஆதர்சமாய் இருந்துவருகின்றது. அவர்கள் படைத்த வீர சாதனைகள் பற்றி உலக ஏடுகள் எழுதிக்கொள்கின்றன. காலம், அவர்கள் வரலாற்றைப் பதிவுசெய்து கொள்கின்றது.

இம் மாவீரர்களால், தமிழர்களின் புகழ் அகிலத்தின் நாலா திசைகளிலும் பரவுகின்றது. தமிழரின் தரம் உலக அரங்கில் உயருகின்றது. விடுதலைக்காகப் போராடும் வீர மக்கள் என்று மட்டுமல்ல, வெற்றிகரமாக முன்னேறும் வினைத்திறன் படைத்தவர்கள் என்ற மகிமையும் சேருகின்றது. மூத்த குடி என்ற பழம்பெருமை மட்டுமல்ல, புதிய உலகின் முன்னோடிகளாக முனைப்புற்று வருபவர்கள் என்ற உண்மையும் இம் மாவீரர்களால் வெளிப்படுகின்றது.

இம் மாவீரர்கள் அற்புதமான மனிதர்கள். மானிட வாழ்வின் அபூர்வ பிறவிகள். மனித நேயம் மிக்க அதிமானிடர்கள். தம் மக்களுக்காக தம்மை முழுமையாக அர்ப்பணித்தவர்கள். எமது தேசிய நீரோடையின் ஊற்றுக் கண்கள். சந்ததி வாழ, தம் சொந்த பந்தங்களைத் துறந்தவர்கள். செத்துக் கொண்டிருந்த எம் தேசியம் உணர்வுபெற வேண்டும் என்பதற்காக, தம் இறுதி மூச்சுக்களால் உயிர் கொடுத்தவர்கள். தமிழ் அன்னையைப் பாதுகாக்க, தம் உடல்களைக் காவலரண்களாக்கி சல்லடைக் கண்கள் ஆகியவர்கள். மண்விழிக்கத் தங்கள் கண்களை மூடியவர்கள். தேசிய ஆன்மாவின் எழுச்சிக்காக எழுந்து நின்று போராடியவர்கள். போராட்டக்களத்தில் வீரர்களாக வீழ்ந்தவர்கள். எம் மண்ணோடும், மக்களோடும் இரண்டறக் கலந்துவிட்டவர்கள். எங்கள் ஒவ்வொருவரின் சுவாசத்திலும் இருப்பவர்கள். எங்கள் செயல்களில் மிளிர்பவர்கள். எங்களுக்கு ஆசானாக, தாய், தந்தையாக, தோழர்களாக, வழிகாட்டிகளாக வாழ்பவர்கள்.

எம் மண்ணில் எழுந்துவரும் காற்றின் குளிர்மையாய் வருடுபவர்கள். ஓடிவரும் நீரின் இனிமையாய் தாகம் தீர்ப்பவர்கள். எங்கள் மண்ணின் ஒவ்வொரு அணுத்துளியிலும் துடித்துக் கொண்டிருப்பவர்கள். பகையை அழிக்க எழும் நெருப்பு, அவர்களது இதயக் கனலாய் மூளுகிறது. அவர்களது எண்ணக்கருக்களால், மண்ணில் புதுமை பூக்கின்றது. அவர்களது குருதிக்கலவையால் கிழக்கே வானம் சிவந்து, விடியலின் வருகையைக் காட்டுகின்றது.

உயிர் அணுக்களின் பிளப்பாக, சத்திய ஆவேசத்தின் நெருப்பாக, விடுதலைச் சக்தியின் வெடிப்பாகப் பகை அழிக்கும் கரும்புலித் தாக்குதல்கள், உலகப் போராட்ட வரலாற்றில் ஒரு மாறுபட்ட வடிவமாக, வீரத்திற்கும், தியாகத்திற்கும் ஒரு புதிய வரைவிலக்கணமாக விளங்குகின்றன.

நவீன உலகம் தேசங்களாகவே உருப்பெற்று, வளர்ச்சி பெற்று வருகின்றது. அந்த நியதிக்கு அமைய தமிழ்த் தேசியமும் வளர்ச்சியும், எழுச்சியும் அடைந்து வருகின்றது. முழு உரிமைகளையும் உள்ளடக்கிய இத்தேசிய விடுதலையின் ஊடாகவே தனிமனித சுதந்திரமும் கிட்டும் என்பது மறுக்க முடியாத உண்மை. வேறு தேசியங்களுக்குள் நின்று கொண்டு, தனிமனிதனாகவோ, ஒரு சிறு குழுவாகவோ விடுதலை அடைந்துவிடலாம் என்பது வெறும் பகற்கனவு. தமிழ்த் தேசியம் என்பது பெரும் சமுத்திரம். பழமையும், புதுமையும், ஆழமும், அகலமும், அளப்பெரிய செல்வமும் நிறைந்த மாகடல். அதன் விஸ்தீரணமும், சக்தியும், அதன் எதிர்கால வளர்ச்சியும் மிகப் பெரியவை. அபாரமானவை.

இம் மாபெரும் தேசிய எழுச்சியில், அனைவரும் கலந்து நின்று போராடுதலுமே அனைவரது வாழ்வுக்கும், வளத்துக்கும் அடிப்படை. தமிழ்த் தேசிய விடுதலை இன்றேல் வாழ்வில்லை. இதுவே மாவீரர்களது வாழ்வும் மரணமும் எமக்குக் கூறும் பாடம்.

**"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"**

லோறன்ஸ் திலகர்,
மத்திய குழு உறுப்பினர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

www.tamilarangam.net



## அமைதி வழியில்

# தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வா?

## அன்றேல்

## புதிய முறையில்

# சிங்கள இறைமைத் திணிப்பா?

பற்றிமாகரன்

இலங்கைத்தீவின் விடுவிக்கப்பட்ட தமிழீழப் பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நடைபெற்ற சிறீலங்கா ஜனாதிபதித் தேர்தலில், பொதுசன ஐக்கிய முன்னணி வேட்பாளரான சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கா 19 இலட்சத்து 93 ஆயிரத்து 922 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்றுள்ளார். இவருடன் போட்டியிட்ட ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரான வஜிரா சிறிமா திஸநாயக்கவுக்கு 27 இலட்சத்து 15 ஆயிரத்து 283 வாக்குகள் கிடைத்துள்ளன. சுயேட்சை வேட்பாளராக போட்டியிட்ட கட்சன் சமரசிங்கவுக்கு 58 ஆயிரத்து 886 வாக்குகளும், சிங்கள பூமிபுத்ர கட்சி வேட்பாளரான டாக்டர் சரத் சந்திர விஜேதுங்கவுக்கு 32 ஆயிரத்து 651 வாக்குகளும், சுயேட்சை வேட்பாளரான ஏ. ஜே. ரணசிங்கவுக்கு 22 ஆயிரத்து 752 வாக்குகளும் கிடைத்தன.

இத் தேர்தல் வெற்றி குறித்து கருத்து வெளியிட்ட சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கா, "மக்கள் இனவாதத்தை நிராகரித்து அமைதியை விரும்புவது இன்றைய தினம் தெளிவாகிவிட்டது; எனது வெற்றி இந் நாட்டுமக்களுக்குக் கிடைத்த வெற்றி. இன ஐக்கியத்தையும், சமாதானத்தையும் கட்டி எழுப்புவதற்கென எமக்கு வாக்களித்த மக்களது எதிர்பார்ப்புக்களுக்குக் களங்கம் ஏற்படாத வகையில் எமது ஆட்சி அமையும்" என உறுதிமொழி அளித்தார்.

இந்நிலையில் திருமதி சந்திரிகா பிரதமராக பதவியேற்றவுடன், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு, முன்னாயத்தங்கள் செய்வதற்கு சிறீலங்கா அரசு அதிகாரிகள் குழுவொன்றை யாழ்ப்பாணத்திற்குத் தூதாக அனுப்பினார். அத் தூதுக்குழு கொழும்பு திரும்பி 2 ஆம் கட்ட பேச்சுவார்த்தைக்கு ஆயத்தமாகும் பொழுது, கொழும்பில் நடந்த ஒரு சம்பவத்தைக் காரணமாக வைத்து குறித்த நாளில் பேச்சுவார்த்தை நடைபெறவில்லை. இதுவரை, நாள் குறிக்கப்படாமல் பேச்சுவார்த்தை நடைபெறும், நடைபெறும் என்ற வாய்ச்சொற்களுடன் காலம் நீடித்துச் செல்கிறது.

இந் நிலையில் திருமதி சந்திரிகா அவர்கள் புத்தளத்தில் ஆற்றிய உரைகளில், "ஐக்கிய இலங்கை ஒன்றைக் கட்டியெழுப்ப வேண்டும்; 1977 இல் ஒரு நாடாக இருந்த இலங்கை, இப்போது இரு நாடுகளாகப் பிரிந்துள்ளது. இதனை நாம் ஒன்றாக்குவோம். தெற்கில் உள்ள மக்கள் அனுபவிக்கும் வசதிகளை வடக்கு மக்களும் அனுபவிக்க வேண்டும் என்பதே எமது விருப்பமாகும். அதற்காகவே பொருளாதாரத்தடைகளுக்கான கட்டுப்பாட்டையும் நீக்கினோம்" எனக் கூறியுள்ளமை கவனமாக ஆராயப்பட வேண்டிய ஒன்று.

"ஒரு நாடாக இருந்த இலங்கை. இப்போது இருநாடுகளாகப் பிரிந்துள்ளது" என சிறீலங்காவின் ஆட்சித் தலைவியே கூறுவது சர்வதேசத்தவர்களின் கண்களுக்கு தமிழீழ அரசாங்கத்தின் உண்மைநிலையினை (De Facto) நன்கு தெளிவுபடுத்துகிறது. உண்மையை உண்மையாகவே கூறி, இலங்கைத் தீவின் அரசியல் யதார்த்தத் தன்மையை விளக்கினமைக்கு அவருக்கு நன்றி கூறலாம்.

ஆனால் அடுத்த வரியில் "இதனை நாம் ஒன்றாக்குவோம்" என்கிறார். இதன் மூலம் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கா தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு பற்றி சிந்திக்கிறாரா அன்றேல் சிங்கள இறைமை தமிழீழத்தில் செயலிழந்து நிற்கிறது; அதனை எவ்வாறு ஆயினும் திணிக்க வேண்டுமெனத் திட்டமிடுகின்றாரா என்ற கேள்வி எழுகிறது.

அதேவேளை இரு நாடுகளையும், இரு தேசியங்களையும் உள்ள ஒரு தீவாக இலங்கைத் தீவைக்கருதி அத்தீவின் சமூக பொருளாதார -அரசியல் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது பற்றி பரந்த மனத்துடன் சிந்திக்கின்றாரா என்ற ஒரு நப்பாசையும் எழத்தான் செய்கிறது.

ஆயினும் இதற்குப் பதில் அடுத்த வரியில் கிடைக்கிறது. "தெற்கில் உள்ள மக்கள் அனுபவிக்கும் வசதிகளை வடக்கில் உள்ள மக்களும் அனுபவிக்க வேண்டும்; இதற்காகவே பொருளாதாரத் தடைகளுக்கான கட்டுப்பாட்டையும் நீக்கினோம்" என்றும் கூறியுள்ளார். இதன் மூலம் சந்திரிகா தமிழ்த்தேசியம், தமிழர் பிரச்சினை (Tamils Question), தமிழீழ உண்மை நிலை அரசு (De Facto Government) இவைகளையும் தமிழர்களின் விடுதலைப் போராட்ட நோக்கையும் பற்றிச்சிந்திக்கவில்லை; அவற்றுக்கான விடை காண்பதைப் பற்றியும் கருதவில்லை என்று எடுத்துக் கொள்ளலாம்.

மாறாக, பொருளாதார வசதிகளை (Economical Liberation) ஏற்படுத்துவதன் மூலம் வடக்கையும், தெற்கையும் இணைக்கலாம் என எண்ணுகிறார் போல் தோன்றுகிறது. இதனைத்தான் 1970 -1977 காலகட்டத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டாட்சியும் செய்தது. அதாவது மிளகாய் -வெங்காயம் -பதநீர்க் கைத்தொழில் போன்ற பொருளாதார முயற்சிகளை ஊக்கப்படுத்தி அதன்மூலம் சிறீலங்காவின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதுடன், இப் பொருளாதார முயற்சிகளில் ஈடுபடுபவர்கள் தங்களை ஆதரித்து, பொருள் வழி ஆசைகளுக்காக தமது தேசியத் தன்மைகளை விட்டுக் கொடுப்பர் என்பது அன்றைய சுதந்திரக்கட்சியின் நோக்காக இருந்தது. இதுவே தமிழினத்தைக் காட்டிக்கொடுக்கும் அரசியல் தலைமைகளின் உருவாக்கலுக்கும் வழிசமைத்தது. பொலிஸ், இராணுவத்தின் கடமைகளைச் செய்தது. இதற்காக பொலிஸ் பலப்படுத்தப்பட்டது. இதுவே தமிழர்களின் ஆயுதபுரட்சிக்கு வித்திட்டது.

இன்றும் சந்திரிகா பொருளாதார நலன்களை அதிகரிப்பதன் மூலம் வடக்கில் உள்ள மக்களிடம் நம்பிக்கையையும், பொருள் வழி சார் நிலைப்படுத்தலையும் பெற்றுக்கொள்ளலாம் என நினைக்கிறார் போலும். இதனாலேயே அரசியல் விடயங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து தீர்வுகள்பற்றி சிந்திக்காது; முதலில் மின்சாரம் உட்பட மக்களது பொருளாதார முயற்சிகளுக்குத் தேவையான உதவிகளை அளித்துவிட்டு பின்னர் தாம் விரும்பியவாறு, ஒருநாடாக்கும் வகையிலான அரசியல் தீர்வை திணித்தால் விடுதலை உணர்வு மழுங்கடிக்கப்பட்டு விடுதலை உணர்வுள்ளோர் தனிமையாக தாம் தமது நாட்டை ஒன்றாக்கும் பணியைச் செய்யலாம். இதற்கு விடுதலைப் புலிகள் இடையூறு செய்வார்களாயின், இந்தப் பனிப்போர் காலக் கட்டத்தில், தனது படைகளைப் பலப்படுத்திக்கொண்டால் மீளவும் இராணுவத்தீர்வை நோக்கி நகர்ந்து அதனை இலகு படுத்திக் கொள்ளலாம் எனத் தப்புக் கணக்குப் போடுகிறாரோ தெரியவில்லை. ஆனால், நடைமுறைச்சம்பவங்கள், அதாவது யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ளாது சிறீலங்கா படைகளின் தமிழின அழிப்பு நடவடிக்கைகள் தொடர்வதை அனுமதித்தல் என்பது சந்திரிகாவுக்கு உண்மையில் சமாதான தீர்வில் நம்பிக்கையுண்டா என்ற சந்தேகத்தையே எழுப்புகிறது.

எது எப்படியிருப்பினும் ஒன்று மட்டும் உண்மை; தமிழீழம் இன்று சந்திரிகா கூறுவது போல், உத்தியோகப்பற்றற்ற தனிநாடாகி விட்டது. அங்கு வாழும் மக்களுக்கு. சுதந்திர ஆட்சியின் பெருமை விளங்கும். தன்மை புரியும். இதனை நிலைநாட்ட தம் இன்னுயிர்களையே உயிராயுதமாய்ப் பயன்படுத்தும் மாவீரத் தெய்வங்கள் நிறைந்த தேசம் அது. ஆயினும் இலங்கைத்தீவின் சமூக - பொருளாதார -அரசியல் உறுதிப்பாட்டிற்காக, மற்றொரு தேசிய இனமான சிங்களத் தேசிய இனத்துடன், தமது தாயக உரிமை இழக்கப்படாத, ஒரு தீர்வுக்கு வர தமிழீழ மக்கள் விரும்புகிறார்கள். இதனை நன்கு புரிந்து கொண்டால் மட்டுமே, சிறீலங்காவின் புதிய ஜனாதிபதியால் ஒரு அமைதித் தீர்வை கொண்டு வர முடியும். தமிழீழ மக்களின் தலைமையின் வலிமையைத் தப்பாக கணக்கிட்டு, சலுகைகள், பதவிச்சிலாகைகளால் மக்களை பேதப்படுத்தி நாட்டை ஒன்றாக்கலாம் என நினைத்தால் அது கனவாகவே முடியும். ஆகவே புதிய ஜனாதிபதி ஆகாயக் கோட்டைகளைக் கட்டாது நடைமுறைச்சாத்தியமான தீர்வுகளை முன் வைக்க காலந்தாழ்த்தாது முயலவேண்டும். இதுவே இதற்குப் பொருத்தமான நேரமாகும். ■

# புதிய உலக ஒழுங்கில்...

இப்போது அம்பலப்படுத்திவிட்டன. அண்மைக்காலம்வரை அரிஸ்டீட்டை ஒரு மனநோயாளி என்றும், நம்பமுடியாதவர் என்றும் மொன்றியல் நகரில் மனநோய்க்கான மருத்துவம் பெற்றவர் என்றும் சி. ஐ. ஏ. பொய்யாகக் கூறியதன் உண்மைநோக்கம் இப்போது புலனாகிவிட்டது. அரிஸ்டீட்டை மீண்டும் சனாதிபதிப் பதவியில் கிளிண்டன் அமர்த்தாமல் பார்ப்பதே இவர்கள் நோக்கம். இதுபற்றி அரிஸ்டீட் கருத்துத் தெரிவிக்கையில், இது ஒன்றும் புதிதல்ல; மாட்டின் லூதர் கிங்கையும் மனநோயாளி என்றே சி. ஐ. ஏ. கூறியது. நான் ஒரு உளவியலாளன் என்கின்ற முறையில், இவர்கள் நோக்கம் எனக்குப் புரிகின்றது. ஒருவரது குணவியல்புகளைக் கொல்லல்(Character Assassination) என்பது இதுதான்" என்றார்.

சி. ஐ. ஏ. செய்தது இதுதான்; 1991 ஆம் ஆண்டு அரிஸ்டீட் பதவி விலக்கப்பட்டபின், அவரது செல்வாக்கைக் குறைக்கும் முகமாக அவரது மக்கள் இயக்கத்திற்குப் புறம்பாக, இன்னொரு அமைப்பை உருவாக்கியதுதான். தனக்கு முக்கிய தகவல்களைத் தரும் தனது ஊதியம் பெறும் பட்டியலில் இருந்த இமானுவேல் கொன்ஸ்ரான்ட் என்பவரைக்கொண்டு, FRAPH என பிரெஞ்சுப் பெயரால் சுருக்கி அழைக்கப்படும் கெயிற்றியின் வளர்ச்சிக்கான முன்னணி (Front for Advancemention Progress of Haiti) என ஒரு போலி அமைப்பு கட்டப்பட்டது. தன்னையொரு பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற அறிவுசீவிபோலக் காட்டிக்கொண்ட கொன்ஸ்ரான்டின் இவ்வமைப்பு, உண்மையிலே ஆயுதம் தாங்கிய குண்டர்களைக்கொண்ட அமைப்பு. அரிஸ்டீட்டின் ஆதரவாளர்களைக் கொல்வதும் கெயிற்றிய மக்களை அச்சுறுத்துவதும் அமெரிக்கத் தலையீட்டிற்கு எதிரான போலி ஆர்ப்பாட்டங்களைச் செய்வதுமே இவர்கள் பணி. இதற்காகப் பெருமளவு பணம் சி. ஐ. ஏயால் வழங்கப்பட்டது. இப்பணம் கெயிற்றியின் மனித உரிமைமீறல் செயல்களுக்கு பயன்பட்டதுமன்றி, அமெரிக்காவுக்கு எதிராகவே பயன்பட்டிருப்பது அம்பலமான பின், சி. ஐ. ஏயின் நிலையே இன்று அமெரிக்காவில் கேள்விக்குறியாகிவிட்டது. அதன் தலைவர் ஜேம்ஸ் வூல்ஸ்லி (James Woolsey) இன் பதவிக்காலம் இப்போது எண்ணப்படுகின்றது. அமெரிக்காவின் உயர்மட்டக் குழுவொன்று கட்டுமீறிப் போய்விட்ட சி. ஐ. ஏயின் எதிர்காலம் குறித்து ஆராய்கின்றது.

இக் குழு அனேகமாக ஆண்டு தோறும் 3 பில்லியன் டொலர் செலவிடும் 20, 000 பேருக்குமேல் ஆளணிகொண்ட இந்த உளவு நிறுவனத்தின் பணிகளை, வெவ்வேறு அமெரிக்க அமைப்புக்களுக்குப் பிரித்துக்கொடுக்கவேண்டும் என பரிந்துரைக்கும் என நம்பப்படுகின்றது. இவ்வாறாக சி. ஐ. ஏயின் போக்கு இன்று அமெரிக்கச் செய்தித்தாள்களால் கடும் கண்டனத்திற்கு உள்ளாக்கப்படுவதோடு, பெருத்த அவமானம் என்றும் கருதப்படுகின்றது. சி. ஐ. ஏயோ அரிஸ்டீட் ஒரு மனநோயாளி என்றே திரும்பவும் வலியுறுத்துவதோடு, கொன்ஸ்ரான்ட் தந்த தகவல்களின் அடிப்படையிலே அமெரிக்கப் படை எளிதில் கெயிற்றி செல்ல முடிந்தது என்றும் பலதரப்பட்டோர் தமக்கு தகவல் தருவோராக இருப்பர் என்றும் அவர்களின் செயல்களுக்கும் தமக்கும் சம்மந்தமில்லை எனவும் கூறிவருகின்றது.

## பழிவாங்கோம் ஆனால் மறக்கமாட்டோம்

இச்சிக்கல்கள் ஒருபுறம் இருக்க, நாடு திரும்பிய அரிஸ்டீட் முன், கெயிற்றியை மீண்டும் புதிதாகக் கட்டியெழுப்பவேண்டிய பணி காத்து நிற்கின்றது. "முன்னர் நடந்த கொடுமைக்காக நாம் பழிவாங்கப்போவதில்லை; ஆனால் அவற்றை நாம் மறக்கவும் போவதில்லை" எனக்கூறும் அரிஸ்டீட் 7000 பேர்கொண்ட கொடிய இராணுவத்தைக் கலைத்துவிட்டு, புதிதாக 1500 பேர்கொண்ட புதிய அணியொன்றை அமெரிக்க உதவியோடு உருவாக்கி வருகின்றார். அவ்வாறே தனியான காவற்றுறையும் புதிதாக உருவாக்கப்பட வேண்டும். அதேவேளை கெயிற்றியில் கடந்த 3 ஆண்டுகளாக கொடுங்கோலராகச் செயற்பட்ட லெப். ஜெனரல் ராவுல் செட்ராசும், அவரது இராணுவ மேலாளர் பிரிகேடியர் ஜெனரல் பிலிப்ஸ் பியாம்பேயும், காவற்றுறைப் பொறுப்பாளர் கேணல் மைக்கல் பிரார்ங் கோசும் நாடு விட்டுச் சென்றாலும் இவர்களால் பல ஆயிரக்கணக்கில் ஆயுதங்கள் வழங்கப்பட்ட அடியாட்கள் மறைந்து திரிவதும் இராணுவத்தினரின் கனரக ஆயுதங்கள் மறைக்கப்பட்டுவிட்டதும் அரிஸ்டீட்டின் எதிர்காலம் எத்தகையது என்கின்ற கேள்வியையும் எழுப்புகின்றது.

ஆனால் **அரிஸ்டீட்டிற்கு இவை பற்றிக் கவலையில்லை; அவரது கவலை வேலையற்ற 80 விழுக்காடு மக்கள் பற்றியும் கெயிற்றியின் பொருண்மிய மேம்பாடு பற்றியதாகவுமேயுள்ளது. கெயிற்றியின் 70 விழுக்காடு மக்கள் எழுத்தறிவற்றவர்கள். 80 விழுக்காடு மக்களுக்கு தூய்மையான குடிநீர் வசதி கிடையாது. மாதம் 1000 குழந்தைகள் ஊட்ட உணவின்மையால் மடிகின்றனர். பெரும் பகுதி மக்கள் வெளிநாட்டு மனிதாபிமான அமைப்புக்களின் உதவியிலே தங்கியிருக்கின்றனர். அதேசமயம் நாட்டின் பணவீக்கமோ சென்ற ஆண்டு 48 விழுக்காடு; நாணயம் சென்ற ஆண்டு 60 விழுக்காடாக மதிப்பிறங்கியது. இவ்வாறு** கெயிற்றியின் **சீரழியும் பொருண்மியத்தைக் கட்டும் பணியில் அரிஸ்டீட் முழுமூச்சாகச் செயற்படவேண்டும்.** அவருக்குத் தாராளமாக வெளிநாட்டு உதவிகள் கிடைக்கும் என நம்பப்படுகின்றது. இதற்கிடையில் கிளிண்டனோ தனது படைகளை மதிப்போடு, உயிர் இழப்புமில்லாமல் திரும்ப அழைப்பதிலே கண்ணும் கருத்துமாக இருக்கின்றார். அடுத்த ஆறு மாத காலத்திற்குள் ஐ. நாவினால் அனுப்பப்படவேண்டிய 6000 பேர்கொண்ட அமைதிப் படையிடம் தனது பொறுப்புக்களை ஒப்படைத்து விலக, அவர் இப்போதே தயாராகிவிட்டார். ஏனென்றால் அமெரிக்க மக்கள், முன்னைய அமெரிக்க ஏகாதிபத்தியக் கனவுகள் காண தமது தலைவர்களை இப்போது விடுவதில்லை. எனவே அரிஸ்டீட்டினதும் கெயிற்றி மக்களினதும் எதிர்காலம் ஒளிமயமாகலாம். ஒளிமயமாக வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. ■

நன்றி: 'ஈழநாதம்'

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புலிகள் இன்றி தீர்வு என்பது முட்டாள் தனமானது

## - ஜனாதிபதி சந்திரிகா -

விடுதலைப் புலிகள் இன்றி, நாட்டில் நடந்துகொண்டிருக்கும் 11 ஆண்டுகால உள்நாட்டுப் போருக்குத் தீர்வு காணமுடியும் என நினைப்பது முட்டாள்த்தனம் என சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா பிரதமராக இருந்தபோது கூறினார். ஆனால் புலிகளுடன் இரண்டாவது கட்டப் பேச்சுவார்த்தைகளில் இறங்குவது பிரச்சினையை விலைக்கு வாங்குவதுபோல் இருக்கும் என திருமதி சந்திரிகா காமினியின் கொலைக்கு பின் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

நிலைமை உணர்ச்சி பொங்கிய நிலைமையாக இருப்பதாகவும் இது ஐ. தே. கட்சி ஆதரவாளர்களின் செயல்களினால் மோசமாக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

திசாநாயக்காவைக் கொல்வதற்கு விடுதலைப் புலிகளுக்குப் பணம் கொடுத்ததாக, ஐ. தே. க. ஆதரவாளர்கள் நாடெங்கும் கையெழுத்துச் சுவரொட்டிகளை போடுவதாக அவர் குற்றம் சாட்டினார்.

இந்நிலைமையில்அமைதிஏற்படும் வரை பேச்சுவார்த்தைகளை ஒத்திபோடுவதே பொறுப்புள்ள ஒரு அரசின் பணியெனவும் அவர் தெரிவித்தார்.

அரசியல் வன்முறைகளற்ற சமுதாயத்தைக் கட்டி எழுப்ப தமது அரசு முயற்சிகள் எடுத்தும்கூட, வன்முறைகள் நிகழ்ந்துகொண்டிருப்பது குறித்து அவர் கவலை தெரிவித்தார். ஐ. தே. கவிற்கு ஒரு வன்முறைக் கலாச்சாரம் இருப்பதாகவும் ஐ. தே. க. கடந்த காலங்களில் அரசியல் ஆதாயத்திற்காக அரசியல் கொலைகளில் ஈடுபட்டது தெரிந்ததே என்றார் சந்திரிகா.

மேலும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை நேரடியாகச் சந்தித்தே எமது பிரதிநிதிகள் பேச்சுக்களை நடாத்தி வருகின்றனர். அவர்கள் இப்போழுது சமாதானத்தை ஏற்கத் தயாராக இருக்கின்றனர் எனவும் தெரிவித்தார். ■

# புலிகள் சிறியரக நீர்மூழ்கிகள் மூலம் கடற்படை முகாம்களைத் தாக்கலாம்

பிரதான கடற்படை, விமானப்படைத் தளங்களை புலிகள் தாக்கத் திட்டமிட்டு வருவதாக பாதுகாப்புப் புலனாய்வு வட்டாரங்களை மேற்கோள் காட்டி சண்டே லீடர் தெரிவித்துள்ளது.

புலிகளின் கடற்புலிகள், சிறியரக நீர்மூழ்கிப் படகுகளைக் கொண்டு கடற்படைத் தளங்களையும், யுத்தக் கப்பல்களையும் தாக்கத் திட்டமிடுவதாகவும், இவ்வாறான தாக்குதலுக்குப் பயன்படும் படகுகளை புலிகள் பரீட்சித்து வருவதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளதாக சண்டே லீடர் மேலும் தெரிவித்துள்ளது.

இதேபோல் பலாலி விமானப்படைத் தளத்தையும் தாக்க புலிகள் முயல்வதாகவும், பறக்கும் விமானம் ஒன்றிலிருந்து, அதி சக்தி வாய்ந்த குண்டுடன், புலிகளின் கரும்புலிப் படையினர் குதித்துத் தாக்கலாமென அச்சம் நிலவுவதாகவும், இவ்வாறு ஜப்பானின் 'கமிகாசி' தற்கொலைப் படையினரும், தங்களுடைய எதிரணி நிலைகள் மீது தாக்குதல் நடத்தியதையும் அது மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. ■

# சிறீலங்கா சிறைகள் மோசமானது சொந்த அனுபவத்தில் கண்டேன்

## □ யாழ் வந்த "ராவய" பத்திரிகையாளர்

"அனைத்து சிறைக்கைதிகளும் விடுதலை செய்யப்படவேண்டும்; சிறீலங்காச் சிறைச்சாலைகள் மிகவும் கேவலமானவை; சிறீலங்காச் சிறையில் வைத்து 1983 ஆம் ஆண்டு 53 கைதிகள் கொல்லப்பட்ட சம்பவம் மிகவும் கொடூரமானது; சிறீலங்காச் சிறைச்சாலைகள் நரகலோகத்திற்குச் சமமானவை; இதை நான் எனது சொந்த அனுபவத்தில் உணர்ந்துள்ளேன்".

இவ்வாறு தெரிவித்துள்ளார், யாழ். வந்த சிங்களச் செய்திதாளான 'ராவய'வின் செய்தியாளரான நந்தன என்பவர். சிறீலங்காச் சிறைகளில் வாடும் தமிழ் இளைஞர்கள் பற்றி நீங்கள் என்ன குறிப்பிட விரும்புகின்றீர்கள் எனக்கைதிகள் விடுதலையின்போது, கடற்புலிகளின் அரசியற்றுறை அலுவலகத்தில் சந்தித்துக் கேட்டதற்கு:

"அனைத்து சிறைக்கைதிகளும் விடுதலை செய்யப்படவேண்டும்; சிறீலங்காச் சிறைச்சாலைகள் மிகவும் கேவலமானவை. 1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் போது, 53 கைதிகள் கொல்லப்பட்டனர். இது மிகவும் கொடூரமான ஒரு சம்பவம். அரசிற்காக் கொலைசெய்தவர்கள், சிறைச்சாலைகளில் பல சலுகைகளை அனுபவித்தார்கள்; விரைவில் விடுதலை செய்யப்பட்டார்கள். சிறீலங்காச் சிறைச்சாலைகள் நரகலோகத்திற்குச் சமமானவை. அதை நான் எனது சொந்த அனுபவத்தின் மூலம் உணர்ந்துள்ளேன்.

தற்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் இந்தக் கைதிகள் விடுதலை, சமாதானத்திற்கு உரம்சேர்க்கும் என நான் நம்புகின்றேன். இதேபோல சிறீலங்காச் சிறைகளில் வாடும் அனைத்துத் தமிழ் இளைஞர்களும் விடுதலை செய்யப்படவேண்டும் எனவும் நாம் விரும்புகின்றோம். அத்துடன் இந்த சமாதான முன்னெடுப்பு வெற்றியளித்து, அமைதி ஏற்படவேண்டும் என நான் பிரார்த்திக்கின்றேன்" என்றார். ■

அயல் நாட்டுச் செய்திகள்

# போருக்கு 5 கோடி ரூபா நாளாந்தம் செலவீடு

"வடக்கு - கிழக்கில் நடைபெறும் போரினால் அரசிற்கு நாளாந்தம் ஐந்துகோடி ரூபா செலவு ஏற்படுகின்றது" என, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சுயாதீன தொலைக்காட்சிச் சேவையின் தலைவருமான குணசேகரா தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி பட்டணசபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர், "வடக்கு -கிழக்கில் நடைபெறும் போரானது 11 ஆண்டுகளாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது; இந்தப் போருக்கு அரசு நாளாந்தம் ஐந்து கோடிரூபாவினை செலவிட்டுவருகின்றது. இதுவரை காலமும் இந்த அர்த்தமற்ற போருக்கு அரசு எத்தனை கோடி ரூபாவினை செலவிட்டுள்ளது என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இந்தப் போரினால் நாடூராவும் ஏதிலிகள் (அகதி) தொகை அதிகரித்தவண்ணமே உள்ளது. தற்போது ஏழரை இலட்சம் மக்கள் ஏதிலிகளாக உள்ளனர்" எனவும் குறிப்பிட்டார். ■

# இராணுவ முகாம்களின் முன் தாக்குதலற்ற பிரதேசம்!

## - போர் நிறுத்தத்திற்கு இராணுவதரப்பு நிபந்தனை

போர்நிறுத்தம் ஒன்று அமுலாக்கப்பட முன்னர் வடக்கு -கிழக்கிலுள்ள இராணுவ முகாம்களின் முன்னணி நிலைகளின் முன் தாக்குதலற்ற பிரதேசம் அல்லது அமைதிப்பிரதேசம் என்று அறிவிக்கப்படவேண்டும் என இராணுவ அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

இதனை புலிகளுடனான பேச்சுக்களில் ஈடுபடும் அரசு குழுவிடம், இராணுவத் தரப்பு அறியத் தந்திருப்பதாக சண்டே லீடர் செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி குறிப்பிட்ட பிரதேசத்தினுள் எந்தவொரு ஆயுதம் தரித்தவர்களும் செல்ல அனுமதிக்கப்படக் கூடாது எனவும், இப்பிரதேசத்துள் படையினர் காவல் வலையமொன்றை அமைப்பதற்கோ தேடுதல் செய்வதற்கோ அதிகாரம் வழங்கப்படவேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் போர்நிறுத்தம் பற்றிக் கலந்துரையாடப்படும் போது, இவ்விடயத்தை அரசு தரப்புக் குழு முன்வைக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

# இராணுவ தீர்விற்கு அனுமதி அளிப்போம்

## ▩ அமைச்சர் அனுருத்த ரத்வத்த

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பது அரசின் அடிப்படையான கொள்கை என்று, பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார். சமாதான பேச்சுவார்த்தைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. இயன்றளவு விரைவாக அவை மீண்டும் ஆரம்பிக்கப்படும். தற்போதைய நிகழ்வுகள் பலவற்றை மேற்கோள்காட்டி ரூபவாகினியைச் சேர்ந்த தயாமகேந்தகுணதிலக்க வினவியபோது:

"பேச்சுவார்த்தைகள் தோல்வி அடைந்தால் உரியமாற்றுத் திட்டம் ஒன்றின் பிரகாரம் தீர்வு காணப்படும்" என்று ரத்வத்த தெரிவித்தார்.

"ஆரம்பத்தில் சமாதான வழிகளில் முயற்சி எடுக்கிறோம்; ஏதாவது ஒரு காரணத்தினால் அம் முயற்சி வெற்றி அளிக்காவிட்டால் முப்படைகளுக்குப் போதிய பலத்தை வழங்கி அவர்களின் ஒத்துழைப்புடன் வெகு விரைவில் யுத்தத்தின் மூலம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்போம்" என்று தாங்கள் தெளிவாக உறுதியளித்ததாக அமைச்சர் பதிலளித்தார்.

யுத்த நடவடிக்கை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்ற பூரண நம்பிக்கை எமக்கு உண்டு எனவும் அமைச்சர் கூறினார். ■

# சிறீலங்காவின் போக்கு மாறுகிறது

## நீதிமன்றங்களுக்குப் புதிய பணிப்புரைகள்

சிறீலங்காவின் புதிய அரசு, தான் மனித உரிமை மீறல்களைக் குறைப்பதாகக் கூறி, விசாரணையின்றி காவலில் இருப்பவர் நிலை தொடர்பாக விசாரணைசெய்ய, இளைப்பாறிய நீதியரசர் ஜே. எப். கசா தலைமையில் ஆணைக்குழுவொன்றை நியமித்தது. இவ் ஆணைக்குழுவின் சிபார்சின்படி, தடுப்புக்காவல் உத்தரவுகளை விலக்கிக் கொள்வதென்றும், தகவல் கொடுக்கத் தவறியது, உணவு வழங்கியமை போன்ற குற்றச்சாட்டுக்களை விலக்கிக் கொள்வதென்றும் புதிய அரசு அறிவித்தது. இதன் பிரகாரம் பல காலங்களாக விசாரணையின்றி காவலில் இருநத தமிழ் இளைஞர்களுள் சிலர் விடுதலை செய்யப்பட்டும் வந்தனர். இதனால் பல சட்டத்தரணிகள் தங்கள் வழக்காளிகளுக்கு, குற்றத்தை ஒப்புக்கொண்டு இந்த பதிய அணுகுமுறையின் கீழ் விடுதலைக்கு விண்ணப்பிக்குமாறு சட்ட ஆலோசனைகள் அளித்து பலர் விண்ணப்பித்தும் விட்டனர்.

இந்நிலையில் சிறீலங்கா அரசு மீண்டும் குத்துக்கரணம் அடித்துள்ளது. திடீரென குறைந்தபட்ச தண்டனை விதிப்பதை நிறுத்துவது என்றும், வழக்குகளை வாபஸ் பெறுவதில்லை என்றும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சிறீலங்கா அரசு பணிப்புரைகளை விடுத்துள்ளது. தடுப்புக்காவல் உத்தரவுகளை விலக்கிக் கொள்ளும் நடைமுறை நிறுத்தப் பட்டுவிட்டதினால் மீளவும் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள், காரணம் ஏதுமின்றி கைது செய்யப்பட்டு சிறைகளில் சித்திரவதைப்படும், அடிப்படை மனித உரிமை மீறலை சிறீலங்காவின் புதிய அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது. சிறீலங்காவின் இப்போக்கு மாற்றமானது, பௌத்த சிங்கள பேரினவாத அமுக்கக் குழுக்கள் தொடர்ந்தும் சிறீலங்காவின் மேலாண்மைச் சக்திகளாக விளங்குவதை மீண்டும் தெளிவுபடுத்தியுள்ளது. ■

# சமாதான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும்

## ✫ சமாதான செயலணி கோரிக்கை

சமாதானத்தை விரும்பும் குடிமக்களையும், அமைப்புக்களையும் உள்ளடக்கிய 'சமாதான செயலணி', சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு அவசரமான முன்னுரிமை வழங்கப்பட்டு பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும் என்றும் அது கேட்டுள்ளது.

அண்மையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு உருவான வாய்ப்புகளைத் தவறவிடக்கூடாது என்றும், சமாதானத்தை விரும்பும் மக்களின் பேரவா மதிக்கப்படல் வேண்டும் என்றும் இந்தச் செயலணி கேட்டுள்ளது.

இந்தவேளையில் சமாதான நடவடிக்கைகளில் ஏற்படுகின்ற தடங்கல்கள், நாட்டுமக்களை மீண்டும் முட்டுக்கட்டை நிலைக்கு இட்டுச் செல்லும் என்றும், யுத்தத்தில் மாற்ற முடியாத தத்துவங்களுக்கும், அழிவுகளுக்கும், சீர்கேடுகளுக்கும் அது காரணமாக அமைந்து விடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

www.tamilarangam.net



# ஈழத்து சஞ்சிகைகளின் வளர்ச்சியும் பின்னடைவும்

ஒரு சந்தோசமான செய்தி! ஈழத்தில் ஆரம்பிக்கப்பட்ட சில சஞ்சிகைகள் நீண்டகாலமாக தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கின்றன!

மல்லிகை முப்பது ஆண்டுகளைப் பூர்த்திசெய்துகொள்ளப் போகிறது. சிரித்திரன், தாயகம், நான் போன்ற சஞ்சிகைகளும் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கின்றன.

இச்செய்தி எமக்கு ஒரு ஆச்சரியமான சந்தோசத்தை மனதில் கிளர்த்துகின்றது.

இனியொரு வேதனையான செய்தி!

மே முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட 'புதினம்' என்ற இருவாரச் செய்தித்தாள் ஆறு செய்தித்தாள்களுடன் அமரத்துவமாகிவிட்டது.

இது ஆச்சரியமற்ற சோகம் மிகுந்த செய்தி

காரணம் இந்த மண்ணில் புதிய, சஞ்சிகைகளின் பிறந்ததினம் குறிக்கப்படும்போதே, அதன் மரணநாளும் கணிக்கப்பட்டுவிடும்.

சும்மா சொல்லக்கூடாது. ஈழத்தில் இலக்கியப் பிரசவத்திற்காக உருவான சஞ்சிகைகளின் தொகையை பட்டியலிடத் தொடங்கினால், எமக்கு ஒரு நாள் போதாது. அந்தளவு எண்ணிக்கையில் இங்கு சஞ்சிகைகள் வெளிவந்துள்ளன.

> "சஞ்சிகைகள் வாசகரை எட்டக்கூடிய வகையில் எளிமைப்படுத்தி அமைக்கப்படுவதோடு, வாசகர் வாங்கக்கூடிய விலையிலும் விற்பனை செய்யப்படுதல் வேண்டும்."

ஒரு ஆண்டு, சில ஆண்டு, ஒரு இதழ், சில இதழ்களுடன் அந்தச் சஞ்சிகைகள் ஆயுளைப் பூர்த்திசெய்துகொண்டுள்ளன.

சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னரும் புதினம் என்ற பத்திரிகை கலை இலக்கியத்திற்காக ஆரம்பிக்கப்பட்டது. சில இதழ்கள் வெளிவந்த நிலையில் அது நின்றுபோனது. அதுவும் ஒரு 'வரதர்' வெளியீடுதான்.

**'வெளிச்சம்' 28 ஆவது இதழை வெளிக்கொணர்ந்திருக்கின்றது. 'சாளரம்' நான்காவது ஆண்டில் காலடி எடுத்துவைத்துள்ளது. 'நங்கூரம்' சில தினங்களுக்கு முன்னர் தான் இரண்டாவது ஆண்டைப் பூர்த்திசெய்தது.**

இவை இந்த மண்ணில் எதிர்நீச்சல்போட்டு வெளிவந்துகொண்டிருக்கும் சஞ்சிகைகள் 1940 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட பல சஞ்சிகைகள் இருந்த வடு தெரியாமல் மறைந்துபோயுள்ளன.

தமிழ்நாட்டில் மணிக்கொடி சஞ்சிகையினால் 'மணிக்கொடி காலம்' என்ற இலக்கிய காலம் பதிவுசெய்யப்பட்ட மாதிரி, ஈழத்தில் 'மறுமலர்ச்சி' என்ற சஞ்சிகை வெளிவந்து, மறுமலர்ச்சிக் காலத்தை உருவாக்கியது.

தமிழ்நாட்டு சஞ்சிகைகளுக்கு சவால்விடும் அளவிற்கு, காத்திரமான இலக்கிய சிருஸ்டிப்புகளை பிரசுரித்தது. இன்றுள்ள

> சஞ்சிகைகளின் தரத்தை நிர்ணயிப்பதிலும் வாசகர் தொகையைப் பெருக்குவதிலும் முரண்பட்ட நிலை தொடர்கிறது.

பல இலக்கியவாதிகள் மறுமலர்ச்சியைப் பற்றிப் பேசிக்கொள்வதுடனும், அது அமரத்துவமாகிவிட்டதை எண்ணி வேதனைப்படுவதுடனும் சரி.

ஏனெனில், ஈழத்தில் இலக்கிய சஞ்சிகைகளின் வரலாறு இதுவாகத் தானிருக்கின்றது. விதிவிலக்காக ஒரு மல்லிகையைப் பார்க்கின்றோம். அதுவும் சிற்றிதழ் என்ற தரத்தில்தான் வெளிவந்து கொண்டிருக்கின்றது.

40 களில் மறுமலர்ச்சியும், 50 களில் தேன்மொழியும், 60 களின் நடுப்பகுதியில் வசந்தமும், வெள்ளியும் வெளிவந்தன. 70 களில் விவேகி, தாமரை, பூரணி, அலை, சுடர், இனமுழக்கம், அகிலம், கீற்று ஆகியவை வெளிவந்தன.

80 களில் சமர், செவ்வந்தி, வாகை, களம், நாங்கள், எக்காளம், புதுசு, கிருதயுகம், மாருதம், அமிர்தகங்கை, மாற்று, விளக்கு, மேகம், மகாவலி, மக்கள் இலக்கியம் ஆகிய சஞ்சிகைகள் வெளிவந்தன.

70 களில் வெளிவரத் தொடங்கிய அலை, 80 களின் இறுதிவரை வெளிவந்தது. 80 களின் இறுதியில் வெளிவரத்தொடங்கிய 'உள்ளம்' 90 ஆம் ஆண்டின் ஆரம்பம் வரை தொடர்ச்சியாக வந்தது.

இங்கே குறிப்பிடப்பட்டுள்ள சஞ்சிகைகளை விட இன்னும் பல இலக்கிய, அரசியல், பல்சுவை விசயங்களை உள்ளடக்கிய சஞ்சிகைகள் வெளிவந்த வேகத்திலேயே ஆயுளைக் குறுக்கிக் கொண்டன.

இதை இந்த மண்ணின் விதி என்று உறுதியாகச் சொல்ல முடியாது. ஏனெனில் தமிழ் நாட்டிலும் இதே நிலை உள்ளது.

மணிக்கொடிக்கும் இதே நிலை தான்.

காத்திரமான இலக்கியப் படைப்புக்கள், இலக்கியம் சார்ந்த கட்டுரைகள், ஆக்கபூர்வமான அறிவியல் கட்டுரைகள் மணிக்கொடியின் தாரகமந்திரமாக இருந்தன.

இதேமாதிரி, தமிழ் நாட்டில் பலராலும் பெருமையுடன் பேசப்பட்ட இலக்கிய இதழ் சரஸ்வதி; விஜயபாஸ்கரனை ஆசிரியராகக் கொண்ட இந்தச் சஞ்சிகை, நான்காவது இதழுடன் மறைந்துபோனது.

இதேபோல நடை, எழுத்து, கசட தபற ஆகிய சஞ்சிகைகளும் மறைந்து போனவற்றில் குறிப்பிடத்தக்கன.

காத்திரமான சஞ்சிகைகள் அல்லது பத்திரிகைகள் இங்கு தொடர்ச்சியாக வெளிவராமைக்கான காரணங்கள் பற்றி ஆராய்வோம்.

பலர் மத்தியிலிருந்தும் வெவ்வெறான கருத்துக்கள் வெளிவருகின்றன.

**'நமது இலக்கிய வரலாற்றினைப் பார்த்தால், சஞ்சிகைகளின் தோற்றம், மறைவுக்குறிப்புகளே அதிகமாக உள்ளன. இது பெருமைப்படும் விடயமல்ல; பெரும் வேதனையை உருவாக்கும் ஒரு செயற்பாடு' என 80 இன் இறுதிப்பகுதியில் வெளிவந்த 'உள்ளம்' இதழ் ஒன்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தச் சஞ்சிகை இதற்குப் பின்னர் ஒரிரு இதழ்களை மட்டும் வெளியிட்டுவிட்டு மறைந்து போனது.**

> இந்த நிலையில்தான், சஞ்சிகைகளின் பின்னடைவைத் தடுத்து, அதன் வளர்ச்சியை ஊக்குவிக்கலாம்

வாசகனுக்கும் சஞ்சிகைகளுக்குமிடையே நெருக்கமின்மையே இந்த மறைவுச்சம்பவங்களுக்கு ஒரு காரணம் எனப் பேசப்படுகின்றது.

மக்கள் நெருங்கி வந்து சஞ்சிகைகளை வளர்த்தெடுப்பதில் துணைபுரிவதில்லை என்ற கருத்தும் உண்டு.

எப்படியான ஆதரவு வழங்க வேண்டும்? குறிப்பிட்ட சஞ்சிகைகளை பணம்கொடுத்து வாங்கிப் படிக்கவேண்டும். மற்றையவர்களுக்கும் அறிமுகப்படுத்தவேண்டும்.

முதலில் வாசகன் வாங்கக்கூடிய விலையில் சஞ்சிகைகள் விற்பனை செய்யப்படுகிறனவா என்பதை ஆராயவேண்டும். ஒரு சஞ்சிகையின் தொழில்நுட்பச் செலவைக்கூட வாசகனின் தலையில் கட்டுவதற்கு முனைகிறார்கள் என்ற கருத்தும் உண்டு.

அடுத்தது, இலக்கியம் சம்பந்தமான விசயங்களை மட்டும் பிரசுரிப்பதனாலும் அதன் விற்பனை சுருங்கிப்போக வாய்ப்புண்டு.

சாதாரண வாசகனை சஞ்சிகை எட்டச்செய்யும் நடவடிக்கையில் இறங்குவதில்லை, அவர்களுக்குரியதாக எளிமைப்படுத்தி அமைக்கப்படுவதில்லை.

இவை ஒரு சஞ்சிகையின் நீண்ட ஆயுளைக் குறைத்துவிடும் என்பதில் சந்தேகமில்லை.

தொடர்ந்து 30 ஆண்டுளாக வெளிவரும் மல்லிகை, தற்போது 1000 பிரதிகள்தான் விற்பனை செய்யப்படுகின்றது. 1970 இல் தொடங்கி 15 ஆண்டுகளாக வெளிவந்த 'அலை' 500 பிரதிகள்தான் விற்பனைசெய்யப்பட்டது.

குறிப்பிட்ட சில வாசகர்கள் மட்டும் இவற்றைத் தொடர்ந்து வாசிக்கின்றார்கள்.

> அதேவேளை "வாசகரும் சஞ்சிகைகளைப் பணம் கொடுத்து வாங்கிப் படிப்பதோடு அதனை மற்றையவர்களுக்கும் அறிமுகப்படுத்தி சஞ்சிகைகளை வளர்த்தெடுப்பதில் துணைபுரிதல் வேண்டும்."

காரணம், இந்த இதழ்கள் நாடளாவிய ரீதியில் பரவலாக்கப்படவில்லை. அதாவது கிராமங்களுக்கு எடுத்துச் செல்லப்படவில்லை.

இலட்சியநோக்கமும் ஆர்வமும் கொண்ட சிலரின் செயற்பாடுகளே இச்சஞ்சிகைகளின் அடித்தளம். இவைகளுக்கு நிறுவனப் பலம் இல்லை. இந்த நிலையில், இச்சஞ்சிகைகள் அமரத்துவமாகிப்போவதைத்தவிர, வேறுவழியில்லை என்று கருத்து முன்வைக்கப்படுகின்றது.

மணிக்கொடியிலிருந்து தமிழில் சிறு செய்தித்தாள்களே இலக்கியப் பணிபுரிகின்றன என்று பலரால் சொல்லப்படுவதுண்டு.

**தமிழீழத்திலிருந்து**
**வவுனியா திலீபன்**

நிறுவனபலத்தை அடித்தளமாகக்கொண்ட சஞ்சிகைள், செய்தித்தாள்கள் பணம்சேர்க்கும் நோக்கிலேயே கவனமாக இருக்கின்றன.

ஆனந்தவிகடன், குமுதம், கல்கி, இதயம்பேசுகிறது, ஆகிய சஞ்சிகைகள் பெரும் நிறுவனப் பலத்துடன் இலக்கிய வளர்ச்சிக்கு உதவும் சஞ்சிகைகளாகத் தம்மை வெளிப்படுத்திக் கொண்டு, மேலோட்டமான கருத்துக்களை வாசகன் மத்தியில் பரப்பி, விற்பனையை அதிகமாக்கியுள்ளன.

இதேசமயத்தில், தமிழ்நாட்டிலிருந்தது வெளிவரும் சிற்றிதழ்கள் இலட்சிய நோக்கம்கொண்ட இளைஞர்களால் ஆழமான விசயங்களைச் சுமந்து வெளிவருகின்றன.

கோமல் சுவாமிநாதனை ஆசிரியராகக்கொண்ட சுபமங்களா இரண்டும் கலந்த கலவையாக வெளிவந்துகொண்டிருக்கின்றது. அதனுடைய இலட்சியதாகம் என்னவோ தெரியவில்லை. ஆனால், நிறுவனத்தாரின் கொள்கைக்கேற்ப அது தன்னை மாற்றியமைப்பினும் வியப்பிற்கு இடமில்லை.

ஏனெனில் -

வாசகரால் உருவாக்கப்பட்டு, தரமான இலக்கிய சஞ்சிகை எனப்பெயர்பெற்ற ஆனந்தவிகடனின் இன்றையநிலை ஆராயவேண்டியது ஆகிவிட்டது.

எமது வாசகர்களில் பலர் பரம்பரைப்பழக்க தோசத்திலிருந்து இன்னும் விடுபடவில்லை. பெற்றோர்கள், பெற்றோர்களின் பெற்றோர்கள் எதைவாங்கி சுவாரஸ்யமாக வாசித்தார்களோ, அதையே தாமும் வாசிக்கவேண்டும் என்ற நோக்கில் செயற்படுகின்றார்கள்.

இந்திய ஜனரஞ்சகச் சஞ்சிகைகளினால், ஆரோக்கியமான கலை, இலக்கிய முயற்சிகள் பாழாகின்றன.

1977 ஆம் ஆண்டு இலங்கையில் ஆட்சியமைத்த ஜே. ஆரின் ஐ. தே. க. அரசின் தாராள பொருண்மியக் கொள்கையினால், ஈழச்சஞ்சிகைகளின் வளர்ச்சி எந்தளவிற்கு பாதிப்படைந்தனவோ அந்தளவிற்கு ஈழத்துப் படைப்புக்களின் வருகையும் பாதிப்படைந்தது.

தென்னிந்திய சஞ்சிகைகள் இங்கு தாராளமாக இறக்குமதி செய்யப்படுவதற்கு முன்னர், எமது சஞ்சிகைகளின் விற்பனை உயர்வடைந்தே காணப்பட்டது என்ற கருத்துண்டு.

இப்போது தரத்தை நிர்ணயிப்பதிலும் வாசகர் தொகையைப் பெருக்குவதிலும் முரண்பட்ட நிலை நீடிக்கின்றது.

**தமிழக சஞ்சிகைகள் சுவைஞனைத் தமது போக்கிற்கேற்ப இழுத்துச்சென்றுள்ளன. இதனால்தான் ஈழத்துச் சஞ்சிகைகளுடன் வாசகர் முரண்பட வேண்டிய நிலை வந்தது எனவும் நியாயம் சொல்லப்படுகின்றது.**

**தொடர்ச்சி 10 ஆம் பக்கம்...**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ஜொனி மிதிவெடிகள்

## பெயரிடலும் வரலாறும்

**1987** அக்டோபர் 10.

இந்தியப்படையுடன் போர் தொடங்கிவிட்டது.

அடுத்தநாள் -

கொக்குவில் பிரம்படி வீதியில், தலைவரின் பாசறையை இலக்குவைத்து, இந்தியப்படையின் சிறப்புக் கொமாண்டோக்கள் தாக்குதலைத் தொடுத்தனர். அவர்களின் முயற்சி வெற்றிபெறவில்லை. ஆனாலும், தலைவர் தனது பாசறையை இடம்மாற்றிக் கொண்டார்.

'ஒப்பரேசன் பவான்' என்ற பெயரில், புகழ்பெற்ற யாழ்ப்பாணச் சமரை இந்தியப்படைகள் தொடர்ந்தன.

"ஓரிரு நாட்களுக்குள் எல்லாம் முடிந்துவிடும்" என்றார்கள் இந்தியத் தலைவர்கள்.

ஆனால், யாழ்ப்பாணச் சமர் ஒருமாதம் நீடித்தது.

போரைத் தொடர்ந்து வழிநடாத்துவதற்காக, தலைவர் தளத்தை மாற்றிக்கொண்டார். சில வாரங்கள் கழித்து, இந்தியத் தளபதிகளும் இதை அறிந்துகொண்டுவிட்டனர்.

ஆனால், யாழ்ப்பாணத்தைவிட்டு தலைவர் எங்கு சென்றிருப்பார் என்பது, இந்தியத் தளபதிகளுக்குப் புதிராகவே இருந்தது.

வன்னிக்குச் சென்றாரா?

அல்லது மன்னார்ப் பெருங்காட்டிற்குச் சென்றுவிட்டாரா?

அல்லது கொக்கிளாய் ஆற்றைக் கடந்து, திருகோணமலைக்குச் சென்றாரா?

அல்லது அங்கிருந்து மட்டக்களப்பு மாவட்டத்திற்குள் சென்றுவிட்டாரா?

வரைபடத்தை விரித்துவைத்துவிட்டு, இந்தியத் தளபதிகள் குழம்பத்தொடங்கினர்.

தலைவரின் இருப்பிடத்தைக் கண்டறிந்து சொல்வதில், சிங்களப் புலனாய்வுத்துறையும் பெருமுயற்சி செய்தது. ஆனாலும், தலைவரின் இருப்பிடம் தொடர்பான ஊகங்களைத்தவிர, சான்றுகளைப் பெறமுடியவில்லை.

தலைவரைத்தேடி இந்தியப்படைகள் வன்னிப் பெருநிலப்பரப்பிலும், தென்தமிழீழத்திலும் மோப்பம் பிடித்துத்திரிந்தன.

இதேவேளை தமிழ்நாட்டில் தங்கியிருந்த கிட்டண்ணை, இந்தியப்படையுடன் போர் நிறுத்தம் ஒன்றைக்கொண்டுவந்து, பேச்சுவார்த்தை நடாத்த முயன்றபடி இருந்தார்.

இந்திய அரசின் சம்மதத்தைப் பெற்று, லெப். கேணல் ஜோனியை தலைவரிடம் அனுப்பி, அவரின் கருத்துக்களையும் -பணிப்புக்களையும் பெற கிட்டண்ணை முடிவெடுத்தார்.

கிட்டண்ணையின் வேண்டுகோளை இந்தியப்படை ஏற்றது. ஆனால், ஜோனி இரகசியமாகத் தமிழீழத்திற்குச் செல்வதை அது தடுத்தது.

ஜோனி செல்லவிரும்பும் இடத்திற்கு தாங்களே கூட்டிச்சென்று பாதுகாப்பாக விட்டுவிடுவதாக இந்தியத் தளபதிகள் பாசாங்கு செய்தனர்.

ஜோனியின் பயணத்தைப் பயன்படுத்தித் தலைவரின் இருப்பிடத்தை அறிந்துகொள்ள அவர்கள் திட்டமிட்டனர்.

இந்தியத் தளபதிகளின் நோக்கம் தெரியாத ஒன்றல்ல. ஆயினும், அவர்களது கட்டளையை ஏற்கவேண்டிய தேவையும் நிர்ப்பந்தமும் இருந்தன.

இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

இந்தியப்படை வவுனியாவரை ஜோனியைக் கூட்டிச்சென்று விட்டுவிடுவது என்றும், அதன்பின் ஜோனி தானாகவே தலைவரைத் தேடிச்சென்று சந்தித்து, மீண்டும் வவுனியா இந்தியப்படை முகாமுக்கே திரும்பி வந்துவிடுவது என்றும், இணக்கம் காணப்பட்டது.

இந்தியத் தளபதிகளும் இதற்கு இணங்கினர்.

ஜோனியை வவுனியா கொண்டு சென்று இறக்கிவிட முன்னரே, வன்னிப் பெருநிலத்தில் ஜோனியின் பயணத்தைக் கண்காணிக்க இந்தியத் தளபதிகள் ஏற்பாடுகளைச் செய்தனர்.

ஜோனி வவுனியா கொண்டுவந்து விடப்பட்டார்.

தேசவிரோதக் கும்பல்களினதும், அவர்களது உளவாளிகளினதும் மற்றும் பதுங்கியிருக்கும் இந்தியச் சிப்பாய்களினதும் கண்களில் படாது சுற்றிச்சுழன்று, தலைவரின் இருப்பிடத்திற்கு விரைந்தார்.

தலைவரைச் சந்தித்தார் - கிட்டண்ணையிடம் சொல்லவேண்டிய விடயங்களை மனதில் பதித்தார். மீண்டும் வவுனியா நோக்கிப் பயணத்தைத் தொடங்கினார்.

பயணத்தின் ஒரு கட்டத்தில் புதுக்குடியிருப்புக்கு வந்து, அங்கிருந்து சைக்கிள் மூலம் விஸ்வமடுவரை செல்ல முயன்றுகொண்டிருந்தார்.

தேவிபுரத்திற்கு அருகே உள்ள காட்டாறு ஒன்றிற்குள், ஜோனியின் பயணப்பாதையை அறிந்துகொள்ளப் பதுங்கிக்கிடந்த இந்தியச் சிப்பாய்களின் துப்பாக்கி வீச்செல்லைக்குள், ஜோனியின் சைக்கிள் சென்றுவிட்டது.

**"ஜோனி மீண்டும் வவுனியா திரும்பும்வரை வன்னிப்பெருநிலத்தில், இராணுவ நடவடிக்கைகள் எதனையும் செய்யமாட்டோம்" என்ற, இந்தியத் தளபதிகளின் வாய்மொழி வாக்குறுதியையும் மீறி, ஜோனி சுட்டுக்கொல்லப்பட்டார்.**

**ஒரு கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்தும் தந்திரோபாயத்தை இந்தியத் தளபதிகள் கடைப்பிடித்தனர்.**



**ஜோனியின் பயணத்தைப் பயன்படுத்தி, தலைவரின் இருப்பிடத்தைச் சரியாகக் கண்டறிவது ஒன்று; மற்றையது புலிகளின் தளபதியைத் தந்திரமாக கொன்றுவிடுவது.**

இரண்டையுமே இந்தியத் தளபதிகள் அடைந்துவிட்டனர்.

வவுனியாவுக்கு மேற்குப்புறத்தில் இருக்கும் மன்னாரிலோ அல்லது கொக்கிளாய் வாவிக்கு அப்பாலுள்ள தென்தமிழீழத்திலோ தலைவர் இல்லை; அவர் மணலாற்றுக் காட்டிற்குள்தான் பாசறை அமைத்து இருக்கின்றார் என்பதை ஜோனியைத் தடயமாகவைத்து அறிந்துகொள்ள, இந்தியத் தளபதிகளுக்கு வெகுநேரம் பிடிக்கவில்லை.

'இராசா' கண்டுபிடிக்கப்பட்டுவிட்டார். ஆகவே, இராசா இனி நகரமுடியாது என்று நினைத்துக்கொண்டு, இந்தியப் படைகள் 'செக்மேற்' சொன்னார்கள்.

ஜோனி சுட்டுக்கொல்லப்பட்டதும் அடுத்து என்ன நடக்கவிருக்கின்றது என்பதை தலைவர் ஊகித்தறிந்து கொண்டுவிட்டார்.

இன்னும் சில வாரங்களில், இந்தியப்படைகள் மணலாறுமீது ஒருபெரும் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வார்கள் என்று தலைவர் எதிர்பார்த்தார்.

வெள்ளம்போல் காட்டுக்குள் நுழையப்போகும் இந்தியச் சிப்பாய்களுடன் மரபுவழிச்சமரை நடாத்துவது எளிதல்ல என்பதும், தலைவருக்குத் தெரியும். அதற்காகப் பின்வாங்கிச்செலலவும் -அவர் விரும்பவில்லை. ஏனெனில், அது புலிகள் இயக்கத்தை இராணுவரீதியாக அழித்துவிடும் என்று, அவர் உறுதியாக நம்பினார். தமிழீழத் தேசியத்திற்குக் கவசமாக இருக்கும் புலிகளின் இராணுவபலம் சிதைக்கப்பட்டால், தமிழினம் அரசியல்ரீதியாக ஒடுக்கப்பட்டுவிடும் என்று தலைவர் அஞ்சினார்.

ஆகவே, **இந்தியப்படையுடனான போரை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச்செல்லவேண்டிய வரலாற்றுக் கடமை தன்மீதே இருக்கின்றது என்பதை நன்குணர்ந்த தலைவர் அவர்கள், 'சாதிக்க' அல்லது 'சாக' முடிவெடுத்தார்.**

மணலாற்றைத் தளமாக்கிய அடுத்த கணத்திலிருந்தே, ஒரு பெரும் காட்டுச் சமருக்காகக் காட்டையும் -போராளிகளையும் ஏற்கனவே தலைவர் தயார்படுத்தியிருந்தார்.

இப்போது, முல்லைத்தீவு மாவட்டத்திலும் -மணலாற்றுக் காட்டிற்குள்ளும் இருந்த சில நூறு புலிவீரர்களை, ஒரு பெரும் சண்டைக்குத் தயாராக்கினார்.

காட்டிற்குள் நுழையப்போகும் இந்தியப்படைகளின் சுதந்திரமான நகர்வைக் குழப்புவதன் மூலம் சில இராணுவ சாதனைகளைப் படைக்கமுடியும் என்றும், இவ்விதம் பல இராணுவ சாதனைகள் நிகழ்த்துவதன் மூலம், இந்தியப்படையின் இராணுவ நடவடிக்கையை முறியடிக்கமுடியும் என்றும், தலைவர் எண்ணினார். இந்த இராணுவ சாதனைகள் ஒரு உளவியல் போருடன் கலந்து செய்யப்படுமானால், அது இரட்டிப்புப் பலனைக் கொடுக்கும் என்றும் அவர் எதிர்பார்த்தார்.

ஒரு தரைப்படை வீரனைக் கனவிலும் அச்சுறுத்துவது மிதிவெடிகளும் -பொறிவெடிகளும், கண்ணிவெடிகளும்தான். இப்படியான சந்தர்ப்பங்களில், தூக்கிய ஒரு காலைக் கீழேவைக்கும் ஒவ்வாரு சந்தர்ப்பத்திலும் ஒரு படைவீரன் செத்துப்பிழைக்கின்றான். இந்த மிதிவெடிகளை, எறும்புக்கூட்டம்போல வரவிருக்கும் இந்தியச் சிப்பாய்களுக்கு எதிராகப் பயன்படுத்தினால் நல்ல பலனைக் காணலாம்.

ஆனால் உயர் தொழில்நுட்பத்துடன் உற்பத்திசெய்யப்பட்டு, இறக்குமதிசெய்யப்படும் இத்தகைய மிதிவெடிகளுக்கு நாம் எங்கேபோவது?

தலைவரது கனவிலும் - நினைவிலும் இந்தக் கேள்வியே உதித்து விடைதேடப் போராடியது.

ஒருநாள் அதிகாலை, நான்கு நான்கரை மணியிருக்கும் -

காட்டுப் பாசறையில், தனது படுக்கையில் இருந்தபடி சிந்தித்துக்கொண்டிருந்த தலைவர் அவர்கள் திடீரென எழுந்து, சில நூறுயார் தள்ளி இருந்த பாசறையில் தங்கியிருந்த இராணுவ தொழில்நுட்பப் பிரிவின் பொறுப்பாளர்களைத் தேடிச்சென்றார்.

தனது மனதில் தோன்றிய மிதிவெடித் தயாரிப்புப் பொறிமுறை பற்றி, அவர்களுக்கு அப்போதே விளக்கிக் கூறினார்.

காட்டிலேயே கிடைக்கக்கூடிய மரந்தடி -ரின்பால்பேணி மற்றும் 'றபர்பான்ட்' என்பவற்றைக்கொண்டு, சிறுபிள்ளைகள் விளையாடும் 'கெற்றப்போலின்' தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி, மிதிவெடிகளை தயாரிக்கமுடியும் என்று தலைவர் விளக்கி, நம்பிக்கையூட்டிக்கொண்டிருந்தார்.

பரீட்சார்த்த முயற்சிகள் தொடங்கின.

சிறுதொகையில் வெடிமருந்தும், 'பென்ரோச்' பற்றரியும், 'டெற்றோனேற்றரும்' தவிர, மிகுதி அனைத்துப் பொருட்களும் உள்ளூர்ப்பொருட்கள்.

இறுதியில் முயற்சி வெற்றிகண்டது.

இப்போது, இந்தியப்படைகள் மணலாற்றுக் காட்டைச்சூழ பல்லாயிரக்கணக்கில் விரைவாகக் குவிக்கப்பட்டனர். அதற்கு **'ஒப்பரேசன் செக்மேற்'** எனப்பெயரிட்டனர்.

மெதுவான வேகத்தில் மிதிவெடித் தயாரிப்புத் தொடங்கியது.

**அந்த மிதிவெடிக்குத் தலைவர் பெயரிட்டார் -**

**ஜோனி மிதிவெடி.**

இந்தியப்படைகள் காட்டுச்சமரைத் தொடங்கின.

**தொடர்ச்சி 10 ஆம் பக்கம்...**

> **"தமிழீழத் தேசியத்திற்குக் கவசமாக இருக்கும் புலிகளின் இராணுவபலம் சிதைக்கப்பட்டால், தமிழினம் அரசியல்ரீதியாக ஒடுக்கப்பட்டுவிடும்".**
> **- தமிழீழத் தேசியத் தலைவர்**

www.tamilarangam.net

# அனைத்துலக நா

# மாவீரர் நாள் நிக

## அவுஸ்திரேலியா - மெல்பேர்ணில்

## மாவீரர் நாள்



மாவீரர் நாளிற்கு வருகை தந்த மக்களில் ஒரு பகுதியினர் - யேர்மனி

தமிழீழ விடுதலைக்காகத் தம் இன்னுயிரை ஈந்து, விடுதலை வித்தான மாவீரர்களை நினைவு கூர்ந்து கௌரவிக்கும் தினமான மாவீரர் நாள், நவம்பர் 26 ஆம் நாள் சனிக்கிழமை, மெல்பேர்ண் நகரில் வெகு சிறப்பாக நடை பெற்றது. சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட புலம் பெயர்ந்த தமிழீழ மக்கள் விழாவில் கலந்து கொண்டு, காவிய நாயகர்களுக்கு உணர்வு பூர்வமாகத் தமது அஞ்சலியைச் செலுத்தினார்கள்.

மாவீரர் விழாவிற்கான நுழை வாசல் யாழ். கோட்டையின் அமைப்பை ஒத்து அலங்கரிக்கப் பட்டிருந்தது. உயரே புலிக் கொடி பறந்து கொண்டிருந்தது. உள்ளே அமைக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லத்தில், ஒவ்வொரு பெரிய தாக்குதல் நடவடிக்கைகளின் போதும் உயிர்த் தியாகம் செய்தவர்களுக்காக, தாக்குதல் வாரியாகச் சமாதிகள் அமைக்கப்பட்டிருந்தன. மாவீரர் நினைவுத் தூபியும், மாவீரர்களின் நிழற்படங்களும் மண்டபத்து வெளிவாயிலை அலங்கரித்தன.



'ஒளி கொடுத்த உத்தமர்கள்' எனும் நாட்டிய நாடகத்தில் ஒரு பகுதி - அவுஸ்திரேலியா -

மாலை 6.30 மணிக்கு, தேசியக் கொடிக்கான கீதம் இசைக்கப் பட, அவுஸ்திரேலியப் பொறுப்பாளர் திரு த. ஜெயக்குமார் அவர்கள் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றி வைத்து நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்தார். முதலாவதாக மாவீரர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், தீபமேற்றி அஞ்சலி செலுத்தி முடிந்ததும், திரு எஸ். சீவநாயகம் அவர்கள் உரை ஆற்றினார். கடந்த காலங்களில், மாறி மாறி அரசாண்ட சிங்களக் கட்சிகளினால் தமிழினத்திற்கு இழைக்கப்பட்ட அநீதிகளையும், மீறப்பட்ட ஒப்பந்தங்களையும் சுட்டிக்காட்டிய அவர், "கௌரவத்துடன் கூடிய நியாயமான சுதந்திரம் நிரந்தரமாகக் கிடைக்கும் வரை, தமிழினம் விழிப்புடன் இருக்கவேண்டும்" என்றும் கூறினார்.

அடுத்த நிகழ்ச்சியாக, சிட்னி நகரைச் சேர்ந்த இளம் தமிழர் ஒன்றியத்தைச் சேர்ந்த சிறார்கள், "மானம் காத்த மறவர்கள்" என்ற தலைப்பில், கடந்த கால அரசியல் தலைவர்கள் எவ்வாறு தமிழ் இனத்தை ஏமாற்றினார்கள் என்பதையும், போராளிகள் எவ்வாறு விடுதலைக்காகப் பாடுபடுகிறார்கள் என்பதையும், மிகவும் சுவைபட நாட்டுக் கூத்தைத் தழுவிய பாணியில் நடித்துக் காட்டியது மிகவும் ரசிக்கக் கூடியதாக இருந்தது.

அடுத்து இடம் பெற்ற, தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரின் கலை, பண்பாட்டுக் குழு அளித்த 'விடிவு' என்ற நிகழ்ச்சி ஒரு வித்தியாசமான அம்சமாக அமைந்தது. தமிழீழத்தில் நடைபெறும் எறிகணைத் தாக்குதல்களையும், விமானத் தாக்குதல்களையும் பின்னணி இசை உருவாக்கிக் காட்ட, வந்திருந்த சபையோரையே நாடகத்தின் தளமாக்கி, மூன்று தலைமுறைகளைச் சேர்ந்த தமிழீழத்து பெண்கள் தமது எண்ணங்களை, உணர்வுகளை வெளிக் கொணர்ந்தமை எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்தது.

தொடர்ந்து, பலாலி இராணுவத் தளத்தின் மீதான கரும்புலிகளின் தாக்குதலின் நேரடி ஒளிப் பதிவு நாடா (உயிராயுதம்) காண்பிக்கப்பட்டது. கரும்புலி கென்னடி உட்பட மற்றைய மாவீரர்களின் மகத்தான தியாகத்தினை, செயற்கரிய செயலை வெண்திரையில் கண்டபோது, வீரத்தின் வரைவிலக்கணம் இது தான்! என்ற எண்ணமே தோன்றியது.

இடைவேளையின் பின்னர், கரும்புலி மேஜர் காந்தரூபனின் வாழ்வின் நிகழ்வையும் -நினைப்பையும், "ஒளி கொடுத்த உத்தமர்கள்" என்ற தலைப்பில் மெல்பேர்ண் நகரத்து மூன்று நாட்டியக் கல்லூரிகள் இணைந்து நாட்டிய நாடகமாக வழங்கினார்கள். 'நேற்று' எவ்வாறு அநாதரவாக இருந்த காந்தரூபன் 'இன்று' கரும்புலியாகி சிங்களக் கடற்படையை அதிர வைத்ததையும், மாவீரர்களின் தியாகத்தால் 'நாளை' பூரண சுதந்திரம் கிடைத்த மகிழ்ச்சியில், காந்தரூபன் அறிவுச்சோலைச் சிறார்கள் ஆடிப்பாடி மகிழ்வதையும் சித்தரித்து, ஈற்றில் 'தமிழீழ அரசு' உருவாகுவதாகக் காட்டப் பட்டபோது, மேடையிலும், சபையிலும் பூமாரி பொழியப்பட்டது. அப்போது மகிழ்ச்சிப் பிரவாகத்தில் மக்கள் எழுப்பிய

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

## யேர்மனியில்

## ஆறாயிரத்திற்கும் அதிகமானோர் கலந்துகொண்ட

## மாவீரர் நாள்

### 26. 11. 1994

சனிக்கிழமையன்று, யேர்மனியில் கிறிபீல்ட் நகரில் Glockens-pitz இல் அமைந்துள்ள மண்டபத்தில், தமிழீழ விடுதலைப் புலிகள் மாவீரர் நாளை கலை நிகழ்ச்சிகளுடன் நடாத்தினர்.

'மாவீரர் நாள்' என எழுதப்பட்ட பிரமாண்டமான வளைவு வாசலை அலங்கரிக்க, மாவிலை -குருத்தோலைத்தோரணங்கள் தெரு ஓரங்களை அழகுபடுத்திநிற்க, மண்டப நுழைவாயிலை வெட்டியெடுக்கப்பட்ட விவரண அலங்கார ஓவியங்கள் பிரமாண்டமான தோற்றத்தோடு நிறைத்து நின்றன. மின்விளக்கு அலங்காரங்களுடன், மாவீரர் ஓவியங்களும் தமிழீழத்தின் கட்டுமான விவரண அமைப்பும் வரவேற்பு மண்டபத்தை ஆக்கிரமித்து நின்றன. மாவீரரின் தூய நினைவுகளைக் கொண்டுவந்த இந்தச் சூழலில், தமிழ் மாணவர் அமைப்பின் உறுப்பினர்கள் வணக்கம் கூறி வரவேற்க, சரியாக பிற்பகல் 4 மணிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் யேர்மன் பிரதிநிதி திரு. சிவநேசன் அவர்கள் தமிழீழ தேசியக் கொடியையேற்ற, அமைப்பின் செயற்பாட்டுப் பிரதிநிதிகளும் உப அமைப்பின் பொறுப்பாளர்களும் அருகில் நிற்க மக்கள் அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினர்.

தொடர்ந்து அமைதிவண்க்கம் செய்யப்பட்டது. அதனை அடுத்து மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தீபமேற்ற - அமைப்பில் செயலாற்றும் அனைத்து உறுப்பினர்களும் தீபாராதனை செய்ய, அந்த நிசப்தத்திற்கு மத்தியில்,

ஓ... எங்களுக்குள் நிறைந்துள்ள மாவீரரே! உங்களை நாங்கள் அண்மித்து, உள்வாங்கி உயிர்ப்புக்கொள்ளும் கணங்கள் இவை.

அண்டங்களை அதிரவைக்கும் நீங்கள் மௌனமாய் உரையாடும் மணித்துளிகள் இவை.

எங்களுக்குள் உங்கள் காற்றைச் சுவாசிக்கும்போது, விடுதலை வீச்சு எங்களை நிறைக்கின்றது.

இதுவரை மண்ணில் மனிதர்களைத்தான் பார்த்திருப்பதாக நாங்கள் எண்ணினோம்.

ஆனால்,
உங்கள் தியாக மரணங்களின் பின்னர், தெய்வங்களோடும் நாம் உறவாடினோம் என்ற உண்மையைப் புரிந்துகொண்டோம்...
போன்ற வார்த்தைகள் உரையாடப்பட்டன.

சிறுவர்களின் உணர்ச்சிமிக்க உரைகள் கரகோசங்களுக்கு மத்தியில் பாராட்டப்பட்டன. தேனிசைச் செல்லப்பா குழுவினரின் பாடல்கள் அடங்கிய இசைத்தட்டும், 'கஸ்தூரியின் ஆக்கங்கள்' என்ற நூலும், 'கேணல் கிட்டு ஒரு காலத்தின் பதிவு' என்ற நூலும் வெளியீடு செய்யப்பட்டன. 'வெட்டி வீழ்த்துவோம்' என்ற இசைப்பாடல் தொகுப்பு கதைவடிவம்பெற்று, கலை, பண்பாட்டுக் கழக நட னப்படைப்பாக மேடையேறியது. உணர்ச்சிகரமான இந்த படைப்பை அடுத்து, யேர்மன் த. வி. பு. பிரதிநிதி அவர்கள் உரையாற்றினார். அவர் தமது ரையில்,

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

## சுவிசில்

## மாவ

தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளையினரால் மாவீரா தினம், கார்த்திகை 27 இல் சூரிச் மாநிலத்தில் ALBISGUET-LI மண்டபத்தில் அரங்கம் கொள் ளாத சனத்திரள் மத்தியில் கொண்டாடப்பட்டது. இம்மாவீரா



மாவீரர் நாள் நிகழ்வில் இடம்பெற்ற நடனக்காட்சியில் ஒரு பகுதி - சுவிஸ் -

www.tamilarangam.net

# …களில் நடைபெற்ற
# …ழ்வுகள் - 1994

## …பிரான்சில்
## …மாவீரர் எழுச்சி விழா


**27. 11. 1994**

ஞாயிற்றுக்கிழமையன்று, தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரான் சுக்கிளை ஒழுங்குசெய்திருந்த இந்த மாவீரர் எழுச்சி விழா வில், சுமார் 1500 இற்கு மேற் பட்ட மக்கள் கலந்துகொண்டு, மண்ணுக்காய் மரணித்த மாவீரர் சுவடுகளை தொழுதுநின்றனர். மேடையிலே அமைக்கப்பட்டி ருந்த மாவீரர் நினைவுத் தூபிக்கு, மக்கள் மலர் அஞ்சலி செலுத்தி, நிகழ்ச்சியைத் தொடக்கிவைத்தனர். மாவீரர் நினைவு சுமந்து இசை அலை யுடன் மிதந்துவந்த கவிதைவரி கள் மக்கள் நெஞ்சங்களைத் தொட்டசைக்க, ஒவ்வொருவராக எழுந்துவந்து மலரஞ்சலி செய்த காட்சி அனைவரது நெஞ்சங்க ளையும் கசியச்செய்தது.

சோதியா கலைக் கல்லூரியின் கீழ்ப்பிரிவு மாணவிகள் வழங்கிய 'தமிழ் வாழ்த்துப் பா' தொடக்க நிகழ்வாக அமைந்தது. வண் ணச் சிரட்டைகளை கரமேந்தி, 'வாழ்க தமிழ்மொழி...' என்று தாய்மொழி போற்றிய சின்னப்பூக் களின் அபிநயம் அழகுற அமைக் கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக் கது. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற கவிதாஞ்சலி, கருத் தாஞ்சலியாகி சபையோரை சிந் திக்கத் தூண்டியது. தொடர்ந்து இரண்டு இளைய கரங்கள் மீட் டிய ஓகன் வாத்திய இசையில் எழுந்த எழுச்சிக்கானங்கள், எதிர்காலத்தின் சிறந்த இரு இசைக்கலைஞர்களை மக்க ளுக்கு இனங்காட்டிநின்றன.

அதனைத்தொடர்ந்து பாரிஸ் தமிழர் மறுமலர்ச்சிக் கழகம் வழங்கிய 'ஆழியின் ஓசைகள்' என்னும் நாடகம் இடம்பெற்றது. மீண்டும் சோதியா கலைக்கல் லூரியின் மேற்பிரிவு மாணவிக ளின் 'பாரில் தமிழர்படும் வேத னைகள்...' என்ற பாடலுக்கான நாட்டியம் பாராட்டுதலுக்குரிய தாகவே அமைந்தது. நீலச் சேலை அணி, கடலில் புலிக ளின் காவியம் சொல்லி அபிந யத்தவிதம் நன்றாக அமைந்தது. சிறுவர் சிறுமியரின் மாவீரர்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...



'ஒருபிடி மண்' இசை நாடகத்தின் ஒரு காட்சி - பிரான்ஸ் -



'மீன்மகள் பாடுகிறாள்' எனும் கிராமியப்பாடலின் அபிநயக் காட்சி - இலண்டன் -

மாவீரர் நாள் (27.11.94) அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, நெதர்லாந்து, இத்தாலி, சுவீடன், டென்மார்க், நோர்வே, சுவிஸ், யேர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் தமிழ் மக்களால் உணர்வுபூர்வமாகக் கொண்டாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இங்கு வெளியிடப்படும் நாடுகளின் மாவீரர் நாள் நிகழ்வுகளைத் தவிர்ந்த, ஏனைய நாடுகளின் மாவீரர் நாள் நிகழ்வுச் செய்திகள் அடுத்த இதழில் வெளியிடப்படும் என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.

## …வீரர்நாள்

…தினத்தில் பல மாநிலங்களையும் சேர்ந்த சுமார் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழீழ மக்களும், கணிசமான சுவிஸ் மக்களும், கலந்து கொண்டனர்.

விழா மண்டபத்தின் நுழைவாயி லில் மாவீரர் துயிலும் இல்லம் பிரமிக்கத்தக்க வகையில் அமைந்திருந்தது. இதன் நடுவே மாவீரர் சமாதி போல் அமைக் கப்பட்டு, அதன் மேல் புலி வீரன் ஒருவன் வீரச்சாவடைந்த சக போராளி ஒருவனைத் தூக் கிக் கொண்டு நிற்பது போலவும், சமாதியின் மேல் ஈகைச்சுடர் ஒன்று அமையப் பெற்றும் துயி லும் இல்லமானது சுமார் 12 அடி உயரமுள்ள ஆறு தூண்களாலும், வளைவுகளாலும் அமைக்கப்பட் டிருந்தது.

விழாவின் ஆரம்ப நிகழ்வாக தமிழர்களின் பாரம்பரிய இசை வடிவங்களில் ஒன்றான "பறை" மூலம் எழுப்பப்படும் இசை போன்று எழுச்சி இசை ஒன்று ஒலிக்கப்பட்டது. இதையடுத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் பிரதிநிதி திரு. நடராஜா முரளிதரன் அவர்களால் தமிழீ ழத் தேசியக் கொடி மக்கள் யாவரும் எழுந்து நின்று மரி யாதை செலுத்த "ஏறுது பார் கொடி ஏறுது...." எனும் தேசி யகீதம் இசைக்க ஏற்றிவைக்கப் பட்டது. இதனைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் போராட்டத் தில் உயிர்நீத்த அனைத்துப் பொதுமக்களிற்கும், மாவீரர்களுக் குமாக இரண்டு நிமிட அமை திவணக்கம் செலுத்தப்பட்டதை தொடர்ந்து, மண்டப மின்விளக் குகள் யாவும் அணைக்கப்பட, மக்கள் யாவரும் எழுந்து நின்று மெழுகுதிரியை ஏற்றி, தலைக்கு மேல் உயர்த்தியபடி இருண்ட மண்டபத்தினுள் தீபவணக்கம் செலுத்திய போது, நாமெல்லாம் தமிழீழத்தில் அமைக்கப்பட்டிருக் கும் மாவீரர் துயிலும் இல்லங்க ளில் நிற்கின்றோமா என்ற பிர மிப்பை ஏற்படுத்தியது. தீபவ ணக்கத்தைத் தொடர்ந்து மக்கள் அனைவரும் அணிவகுத்து நிற்க மாவீரர் சமாதியின் மேல் இருந்த ஈகைச்சுடர் ஏற்றப்பட் டது. தொடர்ந்து மக்கள் அனைவரும் மாவீரர் சமாதியில்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

## இலண்டனில்
## தமிழீழத் தேசியக்கொடி வணக்கத்துடன்
# மாவீரர் நாள்

**27. 11. 94**

ஞாயிற்றுக்கிழமையன்று இலண் டன் வோல்தம்ஸ்ரோ நகர மண் டபத்தில் மாலை 6.15 மணிக்கு தமிழீழத் தேசியக் கொடியேற் றலுடன் மாவீரர் நாள் நிகழ்வு கள் ஆரம்பித்தன. மண்டபத்தில் இருந்த அனைத்து மக்களும் எழுந்து நின்று கொடி வணக்கம் செலுத்த, "ஏறுது பார் கொடி, ஏறுதுபார்...." என்ற கொடி வணக்கப் பாடல் பின்னணியில் ஒலிக்க, மாவீரர் இரத்தத்தால் உருவான தமிழீழத் தேசியக் கொடி மெல்ல மெல்ல எழுந்து உயர்ந்து நின்ற காட்சி மிகவும் உணர்வுபூர்வமாக அமைந்தது. தேசியக் கொடியை மன்னார் பெற்றெடுத்த மாவீரர் மேஜர் வசந்த் அவர்களின் சகோதரன் ஏற்றி வைத்தார். கொடிக் கம்பத் திற்கு அருகாக அமைக்கப்பட் டிருந்த உயரமான தமிழீழ உரு வப்படம், மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த காட்சி, தமிழீழத்தில் நடைபெறும் ஒரு கொடியேற்றத்திற்கு வணக்கம் செலுத்துவது போலிருந்தது.

கொடி வணக்கத்தைத் தொடர்ந்து இரு நிமிட நேரம் தலை சாய்த்து மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. குனிந்த தலைகள் மலரஞ்சலிக் காக நிமிர்ந்து கொண்டன. "மொழியாகி எங்கள் மூச்சாகி, நாளை முடி சூடும் தமிழ் மீது உறுதி..." என்ற மாவீரர் பாடல் பின்னணியில் இசைத்து நிற்க, உறுதியின் உறைவிடத்திற்கு விளக்கேற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. மண்டபத்தில் இருந்த அனைத்து மக்களும், அமைதியாக வரிசையில் சென்று மலரஞ்சலி செலுத்தி மாவீரரை வணங்கிய காட்சி, "உங்கள் பணியை நாம் உறுதியுடன் சுமந்து செல்வோம்" என்று சத் தியம் செய்தது போல் அமைந் தது.

கலை நிகழ்வின் முதற்கட்டமாக அமைந்த, 'சப்தசுவரா' குழுவி னர் இசைத்த தமிழீழ விடுத லைப் பாடல்கள், எழுச்சி கானங்களாகி பார்வையாளர்க ளின் பாராட்டுதலைப் பெற்றன. அடுத்ததாக, இடம் பெற்ற, திரு. கேமராஜா வடித்த, 'விடுதலைக்காய் விதையானவர் கள்' என்ற தலைப்பிலான கவிதை மாவீரர் தியாகத்தை சொல்லி நின்றது.

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...




'களத்தில்' சிறுவர் நாடகத்தில் பங்குபற்றிய மழலைகள்... - இலண்டன் -

www.tamilarangam.net



# விடுதலைப் புலிகள் அறிவிப்பு...

நடந்த முதல் சுற்றுப்பேச்சின் போது, நாங்கள் மூன்று விடயங்களை முன்வைத்தோம். ஒன்று போர்நிறுத்தம், இரண்டு வடபகுதிக்கான பொருண்மியத்தடையை முற்றாக நீக்குதல், மூன்று எமது மக்கள் எமது மண்ணுக்கு வந்து போவதற்கு வசதியாக பூநகரியிலுள்ள இராணுவமுகாமை அகற்றவேண்டும் எனக்கேட்டோம்.

ஆனால் சிறீலங்காவோ தனது பாதுகாப்புப் படையினர்மேல் பழியைப்போட்டு, இதற்கு இணங்க மறுத்துவிட்டது. இதற்கு சிறீலங்கா பாதுகாப்பு படையினர் விரும்புகிறார்களில்லை என்று காரணம்கூறி அந்த விடயங்களைப் பின்போட்டுவிட்டது.

ஆயுதக் கொள்வனவால் தரகுப்பணம் சம்பாதித்து, பணக்காரராகிய படை அதிகாரிகள் சிறீலங்கா பாதுகாப்புபடையில் இருக்கும்வரை, சமாதான முயற்சிகளுக்கு ஊறுவிளைவிப்பவர்களாகவே இருப்பார்கள். அத்தோடு பொருண்மியத்தடை அமுல் காரணமாக பணக்காரராகிய நடுத்தரப்படையினரும் வவுனியாவில் உள்ளார்கள். இவர்கள் சிறீலங்கா பாதுகாப்புப் படையில் இருக்கும்வரை, சமாதான முயற்சிகளுக்குக் குந்தகமாகவே இருப்பர். எனவே சந்திரிகா அரசு இவர்களை இனங்கண்டு அப்புறப்படுத்தவேண்டும்; அவ்வாறு அப்புறப்படுத்துவதன் மூலம் முப்படைகளின் பொறுப்பையும் சந்திரிகா அரசு தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டும்; அப்பொழுதுதான் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லமுடியும்.

எங்களைப் பொறுத்தமட்டில் நாங்கள் பேச்சுவார்த்தைக்குத் தயாராகவே இருக்கின்றோம். எமது கதவு திறந்தேயிருக்கிறது. போர் நிறுத்தம் பிரகடனப்படுத்தப்பட்டால், அதனைச் சிறீலங்கா பாதுகாப்புப்படையினர் கடைப்பிடிப்பார்கள் என சிறீங்கா அரசு உறுதிப்படுத்தினால், நாங்கள் போர் நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்த என்றும் தயாராகவே இருக்கின்றோம்" என, கலாநிதி அன்ரன் பாலசிங்கம் விளக்கிக் கூறினார்

அதேவேளை நெடுங்கேணிப் பகுதியில் உள்ள மருதோடையில், சிறீலங்கா இராணுவத்தினர் நடாத்திய அட்டூழியத்தனமான தாக்குதலுக்குப் பலியான, விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவைச்சேர்ந்த மூத்த உறுப்பினர் மல்லியின் அஞ்சலி வைபவத்தில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைத் துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன் அவர்கள், "எமது நல்லெண்ண அடையாளங்கள் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் சிறீலங்கா அரசின் மத்தியில் உரிய வரவேற்பைப்பெறவில்லை; அவற்றை சிறீலங்கா அரசு உதாசீனம் செய்கின்றது; இதனால் சிறீலங்காவிடம் இருந்து எமக்கு நல்லெண்ண சமிக்ஞைகள் கிடைக்கவில்லை; இவை சமாதான முயற்சிகளுக்குச் சாதகமானவையல்ல; நாம் சமாதான வழியில் தீர்வுகாண விரும்புகின்றோம். எதனையுமே பொறுத்திருந்தே பார்ப்போம்" என்றார்.

இதற்கிடையில் கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகளின்படி சிறீலங்கா இராணுவம், சிறீலங்கா அரசிற்கு முன்நிபந்தனைகள் மூன்றை பேச்சுவார்த்தை தொடர்பாக வலியுறுத்திவருவதாகத் தெரிகின்றது.

1. குறித்த காலத்துக்குள் பேச்சுவார்த்தையை முடிக்கவேண்டும்.
2. படைமுகாம்கள் எதுவும் மூடப்படக்கூடாது.
3. இராணுவம் ஆக்கிரமித்துள்ள பகுதிகளில் இருந்து பழைய எல்லைகளுக்கு மீளும்படி கேட்கப்படக்கூடாது. என்பவைகளே அவை.

இது ஒருபுறமிருக்க; உலக கத்தோலிக்க மதத்தலைவரான பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் சனவரி மாதத்தில் இலங்கைக்கு விஜயம்செய்ய இருப்பதினால், அனைத்துலக செய்தியாளர்களின் கவனம் இலங்கையின் பக்கம் திரும்பும் எனவும், இந்நேரத்தில் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் அரசாக சிறீலங்காவின் புதிய அரசு தன்னைக் காட்டிக்கொண்டாலேயே, எதிர்வரும் மார்ச் மாதத்தில் நடைபெற இருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் அனைத்துலக நாடுகளின் பாரிஸ் கூட்டத்தில், பொருண்மிய வெற்றிகளைப் பெறலாம் எனவும் சிறீலங்கா அரசின் ஆலோசகர்கள் கருதுவதாகத் தெரிகின்றது.

இதனால் நத்தார், புத்தாண்டு நாட்களுக்கிடையில் சிறீலங்கா அரசு, இடைநிறுத்தப்பட்டுள்ள விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளை மீளவும் தொடங்க முயலும் எனவும் அவதானிகள் கருதுகின்றனர். ■

# காதலித்து கைவிடுதல் குற்றமே தமிழீழ நீதிமன்றுகளில் அதிகம்

**காதல் தொடர்பான தமிழீழ சட்டப்பிரிவு தொடர்பாக விடுதலைப் புலிகள் நீதி, நிர்வாகத்துறை நடுவப்பணியகம் விடுத்த அறிக்கையை இங்கு தருகின்றோம்.**

இன்றைய நவநாகரிக உலகில் ஒரு ஆணும் பெண்ணும் இன, மொழி, சாதி, சமய வேறுபாடு இன்றியும் வயது வேறுபாடு இன்றியும் ஒரு பெண் அல்லது ஆண் தமக்கு ஏற்ற ஒரு பெண்ணையோ, ஆணையோ காதலிப்பது சாதாரண நிகழ்வாகும். இந்நிகழ்வினை தமிழீழத்தில் மட்டுமன்றி, வளர்ச்சி அடைந்த நாடுகளிலும், வளர்முக நாடுகளிலும் நாம் சாதாரணமாக அவதானிக்கக்கூடியதாக உள்ளது. பொதுவாக எந்த ஒரு நாட்டிலும் காதலிப்பது குற்றமில்லை. அக்காதலின் முறிவுக்கு உரிய மானநஸ்டத்தையே பெறலாம்; ஆனால் தமிழீழ சட்டத்தைப் பொறுத்தவரை, ஒரு பெண்ணையோ அல்லது ஆணையோ காதலிப்பதாக வாக்குறுதி கொடுத்து, தகுந்த காரணம் காட்டாமல் அவ்வாக்குறுதியை நிறைவேற்றாவிட்டால், அச்செயலானது ஒரு குற்றமாகும். இப்பிரிவானது போர்க்கால சூழ்நிலையிலும், சமூகநிலைமைகளில் இருந்தும் புத்துயிர்பெற்றது. எந்த ஒரு குற்றவியல் வழக்கும் நியாயமான ஐயத்திற்கு அப்பால் (Beyond Reasonable Doubt), எதிரியே அக்குற்றத்தைச் செய்தாரென நிரூபிக்கவேண்டும். இந்தவகையில் வாக்குறுதி முறிவுகளின் அடிப்படையில் எழுகின்ற காதல் பிணக்குகளை குற்றப் பிரிவுகளில் அடக்கி, எதிரியே அவ்வாக்குறுதியை நிறைவேற்றத் தவறினார் என, நியாயமான ஐயத்திற்கப்பால் நிரூபிப்பது எல்லோராலும் முடியாத ஒன்றாகும்.

உலக நீதிக்கோட்பாடுகளின்படி, குற்றவழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் நியாயமான ஐயத்திற்கப்பால் நிரூபிக்கப்படவேண்டும் என்று கூறுவதுயாதெனில், ஆயிரம் குற்றவாளிகள் தப்பினாலும் ஒரு நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது என்ற பொதுக்கருத்தின் அடிப்படையிலே ஆகும். தமிழீழ நீதிமன்றுக்களின் கணிப்பீட்டின்படி ஆயிரம் குற்றவாளிகள் தப்பிக்கவும் கூடாது; ஒரு நிரபராதி தண்டிக்கப்படவும் கூடாது. சமூக யதார்த்தத்தின் அடிப்படையில் காதலித்துக் கைவிடல் எனும் குற்றப்பிரிவு தமிழீழ சட்டத்தில் ஏற்பாடாகவுள்ளபோதிலும், அவ்வுரிமையை மக்கள் உரியமுறையில் கையாள முனைவதில்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் சட்டமானது உரிமைகளை வழங்குகின்றது. அவ்வுரிமைகளில் ஒவ்வொருவரும் அக்கறையுடன் செயற்படவேண்டும். காதலானது பல வடிவங்

> "தமிழீழ நீதிமன்றுக்களின் கணிப்பின்படி ஆயிரம் குற்றவாளிகள் தப்பிக்கவும் கூடாது, ஒரு நிரபராதி தண்டிக்கப்படவும் கூடாது"

களில் இன்றைய சமூகத்தில் காணக்கூடியதாகவுள்ளது. சில காதல்கள் பெற்றோராலோ, அதற்கு உரியவர்களாலோ அங்கீகாரம் பெற்றுத் தொடர்கின்றன.

ஆனால் சில காதல்கள் இதற்கு முற்றிலும் முரண்பாடாக, யாருக்கும் தெரியாமல் அவ்விருவரும் மட்டுமே அறியக்கூடியதாக உள்ளது. இப்படிப்பட்ட பிரச்சினைகளே மிகவும் சிக்கலானதாகும். காதல் தொடர்பில் தமிழீழ சட்டப்பிரிவு திருமண ஏமாற்றம் (அ) எனும் பகுதி, தனது உள்ளடக்கத்தை வெளிக்காட்டுகையில் பின்வருமாறு கூறுகின்றது: காதலித்த பின்னர் கைவிடுவது என்றால் சமுதாயத்திற்கு, குறிப்பிட்ட காதலைப்புரிந்த ஆணும், பெண்ணும் திருமணம் முடித்து வாழப்போகின்றார்கள் என்று நம்பக்கூடியவாறு காதல் புரிந்தவர்களில் ஒருவர், திருமண வாக்குறுதியை மீறினால், அது காதலித்த பின்னர் கைவிடுதல் என்ற குற்றமாகும் -இப்பிரிவானது இப்படி விளக்கியுள்ள போதிலும், எல்லாக் காதலும் சமுதாயம் நம்பும் அளவிற்கு நடந்துள்ளது என நிரூபிக்க முடியாது. இது இன்றைய யதார்த்தமும்கூட. தமிழீழ நீதிமன்றுக்கள் 21. 08. 1993 இல் தொடங்கப்பட்டு, 21. 08. 1994 ஆம் நாள்வரை அவதானித்த வழக்குகளில், காதலித்துக் கைவிடுதல் குற்றமே மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றது. இதன்போது பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் பெண்களே ஆகும். சில பெண்கள் தமது காதலின் அடிப்படையில் காதலன் தன்னை ஏமாற்றுவான் என்று தெரிந்துகொண்டதும், தனது காதலை நிரூபிப்பதற்காக, அனைத்துச் சான்றுகளையும் தன்னகத்தே கொண்டு வந்து, மன்றைத் திருப்திப்படுத்தும் அளவிற்குத் தனது சாதுரியமான அறிவு வன்மையால், தன்பக்கவாதத்தை வெற்றிகரமாகக் கொண்டுநடத்தி, சமுதாயத்திற்கு வழிகாட்டிச் செல்கின்றனர். ஆனால் மறுபுறம் ஒரு ஆடவனால் காதலிக்கப்பட்டு, ஏமாற்றப்பட்டு நீதிமன்றில் வந்துநிற்கும் ஒரு பெண், தனது காதலை நிரூபிக்கும் எந்தவொரு சான்றையோ அல்லது ஊகித்து அறியக்கூடிய அளவிலான கூற்றையோ கூறமுடியாது தவிப்பதை நேரடியாகக் காணக்கூடியதாக உள்ளது. தமிழீழத்தில் பொதுவாகப் பெண்கள் ஆயினும் சரி, ஆண்கள் ஆயினும் சரி தங்களுக்குச் சட்டம் வழங்கிய உரிமையை மிகவும் அக்கறையுடன் கையாள, தமிழீழ சட்டங்களை அறிந்துகொண்டு, செயற்படுதல் அவசியமானது. ■

# ஜொனி மிதிவெடிகள்...

**ஜொனிக்கு நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டு, காட்டுக்குள் நுழைந்த இந்தியப்படைக்கு, 'ஜொனி மிதிவெடிகள்' நம்பிக்கைத் துரோகம் செய்யத்தொடங்கின.**

**ஜொனியின் பயணத்தை நயவஞ்சகமாகப் பயன்படுத்தி 'பாதை' கண்டுபிடித்த இந்தியப்படைகளுக்கு இப்போது, ஜொனி மிதிவெடிகள் பாதத்தைக் கழற்றிக்கொண்டிருந்தன.**

இந்தியப்படைகள் எண்ணியதைப்போல் தலைவரை அழிக்கமுடியவில்லை.

செக்மேற் 1... 2... 3... என இராணுவ நடவடிக்கை தொடர்ந்தது. 100... 200... 300 என இந்தியப்படைகளின் கால்களும் கழற்றப்பட்டன.

'செக்மேற்' அவமானத்துடன் முடிவடைந்தது.

ஜொனி மிதிவெடிகள், புத்துயிர் பெற்று புதுவேகம்கண்டன.

செக்மேற் முறியடிப்பின் முதுகெலும்பு -ஜொனி மிதிவெடிகள்.

ஒரு பெரிய வரலாறு இம்மிதிவெடிகளுக்குள்ளும் இப்பெயர் சூட்டலுக்குள்ளும் ஒளிந்து கிடக்கின்றது!

**நன்றி: 'விடுதலைப் புலிகள்'**

# ஈழத்து...

**'ஈழத்தில் நிறைய இலக்கியங்கள் படைக்கப்படுவதற்குரிய களம் இல்லை' என்ற நிலையைப் போக்கடிப்பதற்கு இன்னும் நிறைய மாத, வார சஞ்சிகைகள் வெளிவரவேண்டும். மேற்குறிப்பிட்ட காரணங்களை ஆராய்வதன் மூலம் இச்சஞ்சிகைகளின் ஆயுளை நீடிக்கச் செய்யலாம்.**

இங்கு இலக்கியச் சஞ்சிகைகள் வைர விழாவை, நூற்றாண்டு விழாவைக்கொண்டாட வேண்டும். இதுதான் இந்தமண்ணின் தாகமாக இருக்கும்.

**நன்றி: 'ஈழநாதம்'**

## தென்தமிழீழத்தில் இயற்கை அனர்த்தங்கள் மத்தியிலும்

# தொடரும் இராணுவ அட்டூழியங்கள்

தென்தமிழீழத்தில் 1963 ஆம் ஆண்டு பெய்தது போன்று பெருமழை பெய்வதாகவும் பல கிராமங்கள் நீரில் மூழ்கியிருப்பதாகவும் போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டிருப்பதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக மட்டக்களப்பில் தொடரும் கடும் மழையின் வெள்ளப்பெருக்கால் வீடு வாசல்களை இழந்த குடும்பங்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தை அண்மித்துள்ளதாக அறியப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட பொதுமக்கள் மேட்டு பகுதிகளில் உள்ள பாடசாலைகள், கோயில்கள் ஆகியவற்றில் தஞ்சம் அடைந்துள்ளனர். உணவுப்பொருட்களுக்கும் மருந்துகளுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர். பொதுமக்களின் ஏராளமான சொத்துக்களும், கால்நடைகளும் வெள்ளத்துடன் அள்ளுண்டு சென்றுள்ளன. மழை தொடர்ந்து பெய்வதால் பல குளங்கள் உடைப்பெடுக்கும் அபாயமும் தோன்றியுள்ளது.

இத்தகைய இயற்கை அனர்த்தங்கள் மத்தியிலும் சிறீலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. சிறீலங்கா இராணுவத்தின் சுற்றிவளைப்புக்கள், தேடுதல்கள், கைதுகள், தாக்குதல்கள் என்பன அதிகரித்துள்ளன. எதுவித காரணமும் இன்றியே சுற்றிவளைப்புக்களும் தேடுதல்களும் அது தொடர்பான மனித வதைகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.


இதனாலும் தென்தமிழீழத்தில் உள்ள பல தமிழ் மக்கள் உடல், உயிர், உடைமை இழப்புக்களுக்கு ஆளாகி வருவதாக அறியப்படுகின்றது. செங்கலடி - தொடுவில்சேனையில் 30. 11. 94 அன்று சிறீலங்கா படையினர், மறைந்திருந்து துப்பாக்கி பிரயோகம் செய்ததில் ஒரு பொதுமகன் கொல்லப்பட்டுள்ளார். விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவரே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என பாதுகாப்பு வட்டாரம் இது தொடர்பாக அறிவித்துள்ளது.

01. 12. 94 இல் கல்முனை நகரம் மிக மோசமாக சுற்றிவளைக்கப்பட்டு பலர் கைது செய்யப்பட்டு இராணுவ முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இவர்கள் விடுவிக்கப்பட்டதாக இதுவரை அறியப்படவில்லை.

இதேவேளை சிறீலங்கா அரசு, ராஜீவ் கொலை விசாரணைக்கு உதவியாக மட்டக்களப்பைச் சேர்ந்த எழுபது வயதுடைய முதியவர் ஒருவரை கைது செய்து, அவருடன் எழு சிறீலங்காப் பொலிசாரையும் இந்தியாவிற்கு அனுப்பி வைத்துள்ளது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




பொழுதுபுலராத அந்நேரத்தில்... இருள் அதிர்ந்தது! தங்கள் கிளைகளோடு கிளம்பிய அரக்கர்கள்; ஆயிரம்... ஆயிரம்... கைகளில் ஆயுதங்களை உயர்த்தியபடி... தீப்பொறிகளை உமிழ்ந்து தள்ளியபடி, பேரிரைச்சல்களை எழுப்பி... ஆகாயத்தும்பிகளின் துணையோடு... தங்கள் அழிப்புவேலையைத் தொடங்கினர்.

"வாறாங்கள்... வாறாங்கள்! தம்பி எழும்படா! தங்கச்சி எழும்படி! ஓடுவம்...! வாருங்கோ ஓடுவம்!"

இவை அன்றோடு வந்துமீளும் அவலங்கள்தான். ஓசைகேட்டு ஓடுவதும்; நிசப்தம் நிலவத் திரும்புவதும்... இந்த எல்லைப்புறவாசிகளான எங்களுக்கு வழக்கமாகிவிட்டது.

அமைதித் தேவதை தன்சேலைத்தலைப்பால் முக்காடிட்டு, மூலையிலே முடங்கிப்படுத்து வெகுகாலமாகிவிட்டது. விரக்தி சுமந்துவாழும் வேதனை நெஞ்சங்கள்... நெடுமூச்சுக்களை இறைத்து அலுத்துவிட்டன. ஊரைவிட்டு வெளியேறி, எங்கோ தொலைந்தவர்களைவிட, எங்களைப் போன்றவர்கள் இன்னும் நிலத்திலே நின்று பிடிக்கிறோம்.

"அவன்களை இஞ்சாலை கடைசி வரை வரவிடம்! பவளம் அக்கா! பயப்பிடாமல் இருங்கோ!" என்ற திலகனின் குரல் அடிக்கடி என் செவிகளில் ஒலித்தது... நம்பிக்கைச் சுரப்பியை நெருடிவிடும் அந்தச் சின்னஞ்சிறிய போராளிக்கு இருக்கும் மனவுறுதி; வயது இருபதைத் தாண்டிவிட்ட தடிக்குமரியான எனக்கில்லையே...? என என்மனம் ஏங்குவதுண்டு.

சூரியனின் வரவுகண்டு, அசுரர்கள் திரும்பிவிட்டார்கள். சுமந்துகொண்டு ஓடிய பொருள், பண்டங்களோடு வீடு திரும்பும் படலத்தில் ஈடுபட்டோம். தங்கச்சி எப்போதும்போல் புத்தகக் கட்டோடு முன்னே போகிறாள்.

"கடவுளே! எப்பதான் இந்தக் கோதாரி அலைச்சல் தீரப்போகுதோ?"

என உரக்கக்கூறி உள்ளம் வெதும்பியபடி, அம்மா தனது வற்றலான உடலைச்சுமந்தபடி பின்னே வருகிறாள்.

வண்டில் மாடுகளை விரட்டிக் கொண்டு அப்பா முன்னேபோக, "வண்டிலைப் பூட்டியாங்க... என்னாலை நடக்கவும் ஏலுதில்லை" என்று போலியோ வந்த தம்பி சிணுங்க, நான் அவனைத் தூக்கி நாரியில் ஏற்றியபடி நடக்கின்றேன்.

சமராடித் திரும்பிக்கொண்டிருந்த போராளிகள் எங்களை அனுதாபத்தோடு பார்க்கின்றார்கள். திலகனின் முகம் தெரிகின்றதா என்று தேடிய எனது கண்களில் பெண் போராளிகளின் மிடுக்குநடை மனத்தை உறுத்துகின்றது.

அரக்கர்கள் வந்துபோன தடம் வழியெங்கும் ஆழப்பதிந்திருந்தது. ஆடு, மாடுகள் கட்டோடு கருகிக்கிடந்தன...! வீடுகள் அழிந்து... இடிந்து... புகை எழும்பி... எரிந்துகொண்டு... சேதத்தை எடுத்துக் கூறமுடியாத வாயடைத்த துயரங்களோடு வந்துசேர்ந்தோம்.

மரணித்துக்கிடந்த மயான அமைதியைக் கிழித்துப்போட்டபடி; அகிலா செய்தி கொண்டோடி வந்தாள். "அக்கா! எங்கடை திலகன் வீரமரணமாம்".

என் இருதயம் அதிர்ந்தது! கைவேறு... கால்வேறாகக் கழன்று விழுந்துவிட்டதுபோல் கதறினேன். மண்ணிலே விழுந்து குழறினேன்... துடித்தேன்... இன்னும் என்னென்ன செய்தேனோ எனக்குத் தெரியாது.

"அக்கா... அக்கா! பவளம் அக்கா!" திலகனின் குரல் ஊசி இழைகளாய் என் உயிர் நரம்பில் ஊடுருவியது. விடுதலை வேண்டி உந்தி எழுந்த அந்தச் சின்னஞ் சிறு சிட்டுக் கடுவன்... வெடிபட்டு வீழ்ந்தான்! என்னால் அந்தத் துயரத்தை மிண்டி விழுங்கி; ஜீரணிக்க முடியவில்லை. அவனின் உடல் காணவேண்டி ஓடினேன்.

சிறிய வெள்ளை நெற்றியின் கீழ்... அந்த அடர்ந்த புருவங்களின் கீழ்... பறந்த அந்தக் கண் வண்டுகள்... இமைகளுக்குள் சிறைப்பட்டுக் கிடந்தன. ரோஜா நிறக் கன்னங்களின் மினுக்கத்தை மரணம் பறிக்கவில்லை. சிவந்த உதரங்கள் இன்னும் சிரித்தபடிதான் இருந்தன.

**தமிழீழத்திலிருந்து**
**ந.கிருஷ்ணசிங்கம்**

திலகனின் புகழ் உடலைப் பிரிந்து வரமுடியாதவளாக... பேழையை மூடி அடைக்கும் வரை, உன்னத ஊர்வலம் முடியும்வரை, விதை குழியில் அவன் உடலைவிதைக்கு மட்டும் என்னை இழந்தவளாக நான் நின்றிருந்தேன்.

என் நெஞ்சத்தை ஆற்ற எனக்கு நெடுநாள் தேவைப்பட்டது. அவ்வப்போது அவனின் முகம் தெரியும் அந்தக் கண்வண்டுகள் நிலை கொள்ளாது பறக்கும். முற்றத்து மாங்காயை எட்டிப் பிடுங்கி தானும் தின்று... எனக்கும் நீட்டும் அவனின் வேகம் தோன்றும். இடது கையைத் தூக்கி மணிக்கூட்டை நோக்கி, பின் சயிக்கிளை உருட்டி... தொங்கி ஏறி, எட்டாத கால்களால் அங்கும் இங்கும் ஆடி அவன் உன்னி உழக்கிப் போய் மறையும் தோற்றம் தெரியும்.

இருளின் சுருதியை இல்லாதொழித்து இருந்தாற்போல் விண்ணெழுந்து வெடிக்கும் தீயின் சுவாலைகள், இப்போதெல்லாம் என் இதயத்தைத் துணுக்குறச் செய்வதில்லை. குண்டுகள்... துப்பாக்கி வேட்டுக்கள் இவற்றோடு; அசுரர்கள் எழுந்து வரும் அவல ஒலிகள் அவ்வளவாக என்னைப் பாதிப்பதில்லை.

மனம் சலிக்காது முகம் சுழிக்காது வேதனைகளை எதிர் கொள்ள என் மனம் முனைந்தது. அழிவுக்கு இடையே எழுந்து ஆக்கத்தை உருவாக்கும் ஊக்கம் வளர்ந்து வந்தது. சூழ்நிலை புரிந்தது! எதிர்காலத்தின் ஒளிக்கீற்று எனக்குள் தெரிந்தது.

விடுதலைவேண்டி வீறாப்போடு பறக்கும் சிட்டுக்களின் சிறகொலி... என்னை வா, வாவென்று அழைத்தது. பயத்தின் பளுவால் மெல்லக் கூனிப்போய்விட்ட எனது முதுகு... என்னையறியாமலேயே நிமிர்ந்துகொண்டது.

"அகிலா நான் இயக்கத்துக்குப் போகப்போறன்!" தங்கையைப் பார்த்து நான் கூறியது அவளுக்குச் சிரிப்பை மூட்டியது.

"பயந்த பீச்சாண்டி! நீ இயக்கத்துக்குப் போகப்போறியோ?"

உரக்கக்கேட்டவளின் உதடுகளைப் பொத்திவிட்டேன்.

விடிவைநோக்கி நான் புறப்படும் பயணத்துக்கு... விடுக்கப்பட்ட அறிவிப்பாக அது அமைந்தது. பந்தபாசங்களால் மயங்கும் மனங்களின் மயக்கங்களைத் தாண்டி, துயில் நீங்கிய நம்பிக்கைச் சுடரைத்தூண்டிவிட்டபடி... உன்னத இலட்சியத்தைத் தேடி அன்றே வீட்டின் படலையைத் திறந்து வெளிப்பட்டேன்.

பயிற்சிகள் முடிந்து முழுமையான போராளி என நிமிர்ந்த நான், இந்த மூன்றாண்டு காலத்தில் அனுபவரீதியாக அறிந்துகொண்டவை... கல்விமூலம் கற்றுக்கொண்டவை எல்லாம் என்னை இனவிடுதலைக்காக விரைவுபடுத்தின.

எமது எல்லைப்புறக் கிராமம் எதிரிகளின் கைகளுக்குள் சிக்குண்டது. கேட்டு வருந்தினேன். எங்கள்வீடு... அயலட்டம்... அம்மன் கோவிலடி... பாடசாலை... அது... இது என்று என் நெஞ்சுள் திரைப்படமொன்று ஓடித்தீர்ந்தது.

ஆழப்புதைந்துபோன உறவுப்பிணைப்புகள் உடைப்பெடுத்து, சிறு கணங்களை விழுங்கிக்கொண்டன. ஒல்லியான தேகமுடைய அம்மாவும் ஒரு காலை இழுத்து, இழுத்து நடக்கும் என்தம்பியும் நீண்டநேரம் நினைவில் நின்றாடி மறைந்தார்கள்.

சிந்தும் ஒவ்வொரு வியர்வைத்துளியும், குருதித்துளியும் தாயக மண்ணுக்காக என்ற நினைவு; உந்தி எழும் உற்சாகப்பெருக்கை, ஒவ்வொரு புதிய நாளிலும் வாரிவழங்கியது. என்றும் உறைந்துபோகாத உணர்வுக் கிளர்த்தல்களோடு எதிரியைக் களங்களில்கண்டு, எங்கள் மண்ணை விடுவித்து வந்தோம்.

சூறைக்காற்றாய் சுழன்றடிக்க, சூழ்துவந்து எமது மண்ணையும் மக்களையும் விழுங்க... அசுரர்கள் போட்ட திட்டத்தை எதிர்கொள்ள, எழுந்த அணிகளுள் ஒருத்தியாகி நான் களத்திலே நின்றேன்.

மேகக்கூரைகளைக் கிழித்தெறிந்தபடி, விமானங்கள் வெளிக்கிளம்பிவந்தன. குண்டுகளைக் கொட்டின! இடிஇடியாக அவை விழுந்தன! கடலெனப் பெருகிவந்த எதிரியைக் காப்பாற்ற வானத்தடுப்பு வலு மும்முரமாகியது.

ஊழிக்காற்றின் 'கோ' வென்ற உறுமலோடு கூரிய துணிவோடு... நேர் எதிர்கொண்டு நாங்கள் மோதினோம்!

சுற்றிவந்த எதிரிப்படை சற்றுப் பின்னோக்கி நகர்ந்து... வீழ்ந்துபட்டு அச்சத்தொனி எழுப்பி... ஏக்கம் கௌவிக்கொள்ள எங்கும் சிதறியது.

உதயசூரியன் முதிர்வடைந்து உச்சியைத் தொட்டவேளையிலும் அடிபாடு முடியவில்லை. என்கண் முன்னே நின்று அடிபட்ட தோழி அலறுவது தெரிகிறது. நெஞ்சால் தவழ்ந்துசென்று, அவளை நிமிர்த்தியபோது...

**உதய சூரியன் முதிர்வடைந்து உச்சியைத் தொட்டவேளையிலும் அடிபாடு முடியவில்லை. என்கண்முன்னே நின்று அடிபட்ட தோழி அலறுவது தெரிகிறது. நெஞ்சால் தவழ்ந்துசென்று, அவளை நிமிர்த்தியபோது...**



புலன்கள் அதிர... மின்னாமல், முழங்காமல் இடியொன்று என்மடியிலே இறங்கியது. அது அகிலா; என் உடன்பிறப்பான அகிலாவே தான்.

வேகமாய் பாய்ந்துவந்த பாசப்பெருக்கோடு... 'அகிலா! அகிலா...' என அழைக்கின்றேன். மெல்ல விழிகளை உயர்த்தி கூர்குறிப்பாய் பார்த்தவள், கணப்பொழுதில் என்னைக்கண்டு பிடித்துவிடுகிறாள்.

"அக்கா!" என்ற முனகலோடு... அவளின் ஆவி பிரிகின்றது.

அகிலாவின் இரத்தம்தோய்ந்த துப்பாக்கியை எடுத்து, என்தோளில் ஏற்றிவிட்டு... தொடர்ந்து அரக்கரைத் துரத்துகிறேன். ■

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இந்திய மேலாதிக்கம் மறு பிரவசமா?

சிறீலங்காவின் உள்நாட்டு விவகாரத்தில் இந்திய மேலாதிக்கத்தினால் ஏற்பட்ட, ஏற்படுகின்ற அழிவுகளை உலக அவதானிகள் அறிவர். இந்நிலையில் சமீபகாலமாக சிறீலங்காவின் புதிய அரசுடன் இந்தியா நட்புறவினூடாக மேலாதிக்கத் தன்மை ஒன்றை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளதென தென்னாசிய அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சரின் மார்கழி 6 ஆம் நாளைய இந்தியப் பயணம், மட்டக்களப்பில் வாழ்ந்த இலங்கைத் தமிழரை சிறீலங்கா கைதுசெய்து -இந்தியாவிடம் விசாரணைக்கு என்ற பெயரில் ஒப்படைத்தமை; முன்னாள் பாராளுமன்றத் தெரிவிக்குழுவின் தலைவரான மங்கள முனசிங்காவை சிறீலங்காவுக்கான இந்தியத் தூதுவராக நியமிக்க எடுக்கும் முயிற்சிகள், சிறீலங்காவில் இந்தியக் கறுப்புப் பூனைகள் பாணியிலான -பிரமுகர்களுக்கான பாதுகாப்பு அணி ஒன்றினை உருவாக்கும் இந்திய முயற்சி போன்றவை மீளவும் தென்னாசியாவின் பிரதேச மேலாண்மையாக இந்தியா தன்னை வெளிப்படுத்தும்போக்கு என அவதானிகள் கருதுகின்றனர். ■

# லெப்.கேணல். 'மல்லி'யின் வீரமரணம்

## சிறீலங்கா படையின் பயங்கரவாதச் செயலே

**- கரிகாலன்**

விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான லெப். கேணல் மல்லி என்பவர் மணலாற்றில் சிறீலங்கா இராணுவம் மறைந்திருந்து தாக்கியதில் வீரமரணமடைந்துள்ளார். இதனையொட்டி முல்லைத்தீவில் நடைபெற்ற அஞ்சலிக்கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர். இந்த அஞ்சலிக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைத் துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன் அவர்கள், விடுதலைப் புலிகள் அறிவித்த ஒரு கிழமை போர்நிறுத்த காலத்தில், சிறீலங்காப்படை மேற்கொண்ட பயங்கரவாதச்செயலே இது என சுட்டிக்காட்டினார். விடுதலைப் புலிகளின் நல்லெண்ண சமிக்ஞைகளை, ஜனாதிபதித் தேர்தலின் பின்னர், புதிய அரசு மதிப்பதாகத் தெரியவில்லை எனவும் மேலும் அவர் தெரிவித்தார்.

"விடுதலைப் புலிகள் ஒருதலைப் பட்சமான ஒருவாரகால போர் நிறுத்தத்தை மேற்கொண்ட போது, சிறீலங்காப் படையினர், பொதுமக்கள் மீதும் போராளிகள் மீதும் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்; ஆனால் இப்போர் நிறுத்த காலத்தில் விடுதலைப் புலிகள் எதுவித தாக்குதலையும் நடத்தவில்லை" என விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் சிறீலங்காப் படையினரின் தாக்குதல் குறித்து கருத்து தெரிவித்துள்ளார்.

லெப். கேணல் மல்லியின் கொலை தொடர்பாக பூரணவிசாரணை மேற்கொள்ளப்படவேண்டுமென, விடுதலைப் புலிகள் சிறீலங்கா அரசிற்கு வேண்டுகோள் விடுத்திருப்பதாகவும் அறியப்படுகின்றது. ■

# பிரான்சில்...

நினைவுப் பேச்சுக்கள் தெளிவாக, சிறப்பாக அமைந்தது. தொடர்ந்து பாரிஸ் கலைக்கோயில் வழங்கிய 'அவன் அமரன்' என்ற நாடகம் மேடையேறியது.

இடைவேளையின்போது மாவீரர் நினைவாக்கங்கள் உள்ளடங்கிய மாவீரர் நாள் சிறப்பிதழ் மக்களுக்கு வழங்கப்பட்டது. இடைவேளையின்பின், மாவீரர் நினைவாக நடாத்தப்பட்ட பல்வேறு விளையாட்டுக்கள் மற்றும் சிறுகதை, கவிதை, பேச்சுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் நடைபெற்றது. பின், சோதியா கலைக்கல்லூரி மாணவிகளின் கரும்புலிகளின் நினைவு சுமந்த நாட்டிய நிகழ்ச்சி இடம்பெற்றது. 'கரும்புலிகள் என நாங்கள்...' என்ற நாதஸ்வர கானத்தின் ஊடே கறுப்புடையில் அணிவகுத்து நின்ற மாணவிகள் சபையோரின் பாராட்டுதலைப் பெற்றுக்கொண்டனர்.

அடுத்ததாக தமிழீழத்தின் மூத்த கவிஞர் முருகையனின் 'மண்ணில் ஒரு பிடி' என்கின்ற இசைநாடகம், தமிழர் கலை, பண்பாட்டுக் கழகத்தின் பிரான்சுக் கிளையினரால் மேடையேற்றப்பட்டு, அனைவரதும் ஏகோபித்த பாராட்டுதலைப் பெற்றுக் கொண்டது. தமிழ் -சிங்கள தேசிய சமூகங்களுக்கிடையிலான தொடர்போராட்ட நகர்வின் உன்னத வெளிப்பாட்டுச் சித்திரமாய் இக்கலை வார்ப்பு அமைந்ததெனலாம்.

மாவீரர் நாள் நிகழ்வின் இறுதியாக 'தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தனப் பேழைகளே... என்கின்ற மாவீரர் துயிலும் இல்லப்பாடல் வெண்திரையில் காண்பிக்கப்பட்டபோது, அனைவரது இதயங்களும் மண்ணுக்காய் வீழ்ந்த மாமனிதர்களுக்காய் அழுதுகொண்டன. மாவீரர்களின் கனத்த நினைவோடு மக்கள் மண்டபத்தைவிட்டு வெளியேற, மாவீரர் நாள் நிகழ்ச்சிகள் சிறப்புற நிறைவுபெற்றன. ■

**- நிலவன் -**

# சுவிசில்...

தீபங்களை ஏற்றுகையில், விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் "விண் வரும் மேகங்கள் பாடும்" என்ற பாடல் உணர்ச்சி மயமாகப் பாடப்பட்டதைத் தொடர்ந்து மாவீரர் கவிதை ஒன்று வாசிக்கப்பட்டது. இத் தீபவணக்கம் சுமார் 50 நிமிடங்கள் நீடித்தது.

வரவேற்புரையைத் தொடர்ந்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் மாவீரர் பற்றிய எழுச்சி கீதங்கள் பாடப்பட்டன. இடையிடையே எழுச்சி நடனங்களும் இடம் பெற்றன. இவ் எழுச்சி நடனங்கள் சூரிச், சுக், பேர்ண், சியோன் மாநிலங்களைச் சேர்ந்த மாணவிகளால் வழங்கப்பட்டது.

தொடர்ந்து கிராமியப் பாடல்கள் பாடப்பட்டன. இலண்டனிலிருந்து வருகை தந்த எங்கள் தாய் மண்ணின் தலைசிறந்த இசையமைப்பாளர்களில் ஒருவரான யாழ். சீலனின் கணனி இசைத் தொகுப்பின் மூலம் எழுச்சிப் பாடல்களை இசையருவியாக தந்து விழாவை சிறப்பித்தார். இவற்றைத் தொடர்ந்து பேசிய செல்வி. சுதர்சினி, "வாழும் போதே வரலாறான வித்துக்கள், விடுதலைப் புலிகள்" என்றார். "மாவீரர் புகழ் பாடுவோம்" எனும் கவியரங்கம் சுவிஸ் பிரதிநிதி தலைமையில் நடைபெற்றது. இதில் திரு. கண்ணதாசன் தனது கவியில் "ஐரோப்பா வாழ் தமிழீழ மக்கள் தென்னிந்திய மோகத்தை விட்டொழித்து தமிழீழ இசைக்கோலங்களை உள்வாங்குதலும், உருவாக்குவதும், ஏற்றுக் கொள்வதும் இன்றியமையாதது" என்ற கருத்தை முன்வைத்தார். திரு. ரங்கன் முதல் மாவீரர் தொடக்கம் இறுதி மாவீரர் வரை கவி பாடினார். இவரது கவிதை வரிகள் பல மக்களின் பாராட்டுதலையும், கைதட்டலையும் பெற்றது. இவ் விழாவில் மீள் வெளியீடுகளாக நான்கு ஒலி இசைத்தட்டுக்கள் (CD) வெளியிடப்பட்டது. இத்துடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரின் அதிஸ்டலாபச் சீட்டும் அதிஸ்டம் பார்க்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் பொறுப்பாளர் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். அவர் தனதுரையில் "இன்றைய சமாதானப் பேச்சுக்கள் சிறீலங்கா அரசினால் இதய சுத்தியோடு முன்னெடுத்துச் செல்லப்படும் என்பதில் எமக்கு நம்பிக்கை இல்லை. விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் சுபீட்சமான, இறைமையுள்ள வாழ்விற்கு உத்தரவாதமான தீர்வையே தமது இலட்சியமாக வரித்துக் கொண்டுள்ளார்கள். அதையே எந்தவொரு பேச்சுவார்த்தையிலும் வலியுறுத்துவார்கள்" எனக் கூறினார்.

இதனைத் தொடர்ந்து தமிழீழத்திலிருந்து க. சிதம்பரநாதனால் எழுதப்பட்ட "மாதொருபாகன்" என்ற நாடகம் மேடையேறியது. இந் நாடகத்தை இங்கு நெறிப்படுத்திய அன்ரன் பொன்ராஜாவும், நடிகர்களும் மக்களின் பாராட்டைப் பெற்றனர். இந் நாடகத்திற்கு யாழ். சீலனின் ஆர்ப்பாட்டமில்லாத பின்னணி இசையும் மக்களை பெரிதும் கவர்ந்தது. நாடக முடிவில் கலைஞர்கள் யாவரும் மேடைக்கு அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். குறிப்பாக விழா மேடையில் பார்வையாளர்களைப் பெரிதும் கவர்ந்த ஆண் பெண் விடுதலையை நவீன ஓவியத்தின் மூலம் கொணர்ந்த ஓவியர் T. S. BOSE அவர்களும், இசை விருந்தளித்த யாழ். சீலன் அவர்களும் கௌரவிக்கப்பட்டனர். பின்னர் அவர்கள் எல்லோரும் சேர்ந்து "புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்" என்ற பாடலை பாட மக்கள் அனைவரும் எழுந்து நின்று கைதட்டி அப்பாடலை அவர்களுடன் சேர்ந்து பாடினார்கள். தொடர்ந்து தேசியக் கொடி இறக்கப்பட்டு விழா இனிதே நிறைவுற்றது. ■

# யேர்மனியில்...

"இமைமூடாது விழிதிறந்து நின்று, நமது மக்களைக் காத்த வித்துக்கள் அல்லவா நமது மாவீரர்கள்; இவர்கள் நமது சொத்துக்கள். இந்த வித்துக்கள் நமது மண்ணிலே விழும்போது எமது தேசம் சிலிர்த்துக்கொள்ளுகின்றது. இவர்கள் கடலிலே கரையும்போது, காற்றும் ஒருகணம் நிமிர்ந்து எழுந்து தலைவணங்கிக் குனிகிறது. அடிமையாக இருந்த எமது தேசமக்களுக்கு ஒளியைக் காட்டிய மெழுகுவர்த்திகள் இவர்கள். கூனிக்குறுகி அடிமையாக வாழ்ந்த எமது தமிழ்ச் சமுதாயத்தை தலைநிமிரச்செய்த பேராசான் எமது தலைவர். அவரது வழிநடத்தலில் தமிழீழ அரசு பல நிர்வாகத்துறைகளை செயற்படுத்தி வருகின்றது" என்று கூறியதுடன், தமிழீழ நிர்வாக செயற்பாடுகளை விபரித்து, அந்த செயற்பாட்டை நிறைவேற்றும் உப அமைப்புக்களையும் அவர்களுக்கு உதவவேண்டிய வெளிநாட்டுத் தமிழர்களின் கடமைகளையும் வலியுறுத்தினார்.

இதனை அடுத்து 'எண்ணிட நெஞ்சம் சிலிர்க்கும்' என்ற தலைப்பில் கவியரங்கம் இடம் பெற்றது.

இடைவேளையின்போது தமிழீழத்தின் இன்றைய நிலையை வெளிப்படுத்தும் ஒலி, ஒளி விவரணப்படங்கள் வரவேற்பு மண்டபத்தில் காண்பிக்கப்பட்டன. வெளியீடுகளை என்றுமில்லா ஆர்வத்துடன் மக்கள் வாங்கியது தமிழீழ விடுதலையின்பால் மக்கள்கொண்டுள்ள எழுச்சியைக் காட்டியது. யேர்மன் த. வி. பு. கலை, பண்பாட்டுக் கழக தமிழீழம் இசைக்குழு புதிதாக எழுதி இசையமைத்த பாடல்களை மாவீரருக்கு அர்ப்பணமாகப் பாடியபோது, மண்டபம் முழுவதும் கரகோசம் ஒலித்தது.

இறுதியாக மேடையேறிய 'சுதந்திர தரிசனம்' என்ற நாட்டிய நாடகம் அனைவரது கண்களையும் கலங்கச்செய்து, மக்கள் மனதில் இடம்பிடித்தது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் தேசியக் கொடியையிறக்க, "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என்ற தாரக மந்திரத்துடன் மாவீரர் நாள் கலை நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

அமைப்பின் செயற்பாட்டு உறுப்பினர்கள், உப அமைப்புக்களின் பொறுப்பாளர்கள் அனைவரும் நள்ளிரவு 12 மணிக்கு, மேடையில் அமைக்கப்பட்டிருந்த மாவீரர் நினைவுத்தளத்தின்முன், இரண்டுநிமிட அமைதிவணக்கம் செலுத்தி, "விடுதலைப் பாதையில் தூய்மையோடும் துணிவோடும் அக்கறையோடும் செயற்படுவோம்" என உறுதியெடுத்தனர். ■

# அவுஸ்திரேலியாவில்...

கரகோசம் பல நிமிடங்கள் வரை நீடித்தது.

இறுதி நிகழ்ச்சியாக 'புலம் பெயர்ந்த மூன்று தமிழீழத்தவர்களது சுயநலச் செயல்பாடுகளை, எவ்வாறு அவர்களது மனச்சாட்சி சுட்டிக் காட்டி அவர்களை நிதர்சனத்திற்குக் கொண்டு வருகின்றது' என்பதை தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் கலை, பண்பாட்டுக் குழுவினர் நடித்துக் காட்டினார்கள். இதன் பின்னர் தமிழீழத் தேசியக் கொடியிறக்கத்துடன் விழா இனிதே முடிவடைந்தது. மாவீரர் நாள் நிகழ்ச்சிகள் யாவும் புதுமையாகவும், விறுவிறுப்பாகவும், உணர்ச்சிகரமாகவும் அமைந்து சபையோரின் பாராட்டுதல்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. ■

# இலண்டனில்...

தொடர்ந்து இடம்பெற்ற நடன ஆசிரியை திருமதி ரஜனி சுரேஸ்குமார் அவர்களின் மாணவிகள், "மீன் மகள் பாடுகிறாள்..." என்ற பாடலுக்கு அமைத்த கிராமிய நடனம், மட்டுநகரின் சிறப்புக்களை மிக அழகாகவும், நேர்த்தியாகவும் வெளிப்படுத்தியது.

அடுத்த நிகழ்வாக பிரித்தானிய 'கம்பன் கழகம்' நெறிப்படுத்தியமைத்த 'களத்தில்' என்ற சிறுவர் நாடகம் இடம்பெற்றது. பால்மணம் மாறாத சிறுவர்கள் அரங்கில் நிறைந்து நின்று நடித்த காட்சி, வருங்காலச் சந்ததியின் நல்வாழ்வுக்காகத் தம் வாழ்வைத் துறந்த மாவீரர்களுக்கு நன்றி செலுத்துவது போலிருந்தது. அத்துடன் வெளிநாட்டில் வதியும் தமிழ் மக்கள், தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்திற்குத் தாம் அளிக்கும் பங்களிப்பு போதுமானதா என்று சிந்திக்கக் கூடிய முறையில், இச்சிறுவர்கள் ஆழ்ந்த கருத்துடன் தமது மழலை மொழியால், அங்க அசைவுகளால் வெளிப்படுத்திக் காட்டியமை பாராட்டத்தக்கது.

இடைவேளைக்கு முன்னதாக, கணனியைப் பயன்படுத்தி தமிழீழத்தில் தயாரிக்கப்பட்ட, "கடலிலே காவியம் படைப்போம்" என்ற 'ஒலி இழைத் தட்டு' வெளியிடப்பட்டது. இதனை நடன ஆசிரியை திருமதி பத்மினி குணசீலன் அவர்கள் வெளியிட, முதல் பிரதியை கற்பிட்டிக்கடலில் சிறீலங்கா கடற்படைக் கப்பலைக் கரும்புலித் தாக்குதல் மூலம் தகர்த்து வீரகாவியம் படைத்த லெப். கேணல் நளாயினி அவர்களின் சகோதரி திருமதி தங்கராணி இந்திரகுமார் பெற்றுக் கொண்டார்.

இடைவேளையைத் தொடர்ந்து இடம்பெற்ற சிறுமி துளசி மகேஸ்வரன் அவர்களின் மாவீரர் புகழ் கூறும் உரை மக்களுக்குப் பலவற்றை விளக்கியது. குறிப்பாக, "எமது உடலோடும், உதிரத்தோடும் கலந்த தமிழை மறந்துவிட்டோம்" எனக் கூறுபவர்களின் இதயத்தை, சிறுமி துளசியின் சொல்லாற்றல் மிக்க உரை ஆழமாகத் தொட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

பல்லிசைக் கலைஞன் இர்பான் அவர்களின் 'புல்லாங்குழல்' இசையில் எழுந்த தமிழீழ விடுதலைப் பாடல்கள் சபையோரின் பெரும் பாராட்டுதலைப் பெற்றன.

புல்லாங்குழல் இசையைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினரான திரு லோறன்ஸ் திலகர் அவர்களின் மாவீரர் நாள் செய்தி வாசிக்கப்பட்டது.

அடுத்ததாக, வோல்தம்ஸ்ரோ கலைக்குழுவினர் நெறிப்படுத்தி வழங்கிய 'மாவீரன் பண்டிதர்'- என்ற நாட்டுக்கூத்து கப்டன் பண்டிதரின் இறுதி விடுதலைப் பயணத்தைத் தத்துவருபமாக சித்தரித்துக் காட்டியது.

தொடர்ந்து திரு கு. ஞானவேல் அவர்களால் நெறிப்படுத்தப்பட்ட 'இனி நெருப்பு எழும்' என்ற ஓரங்க நாடகம் அரங்கேறியது. இந்நாடகம் மிகச் சொற்ப நேரத்தில், தமிழீழ எல்லைப்புற மக்களின் அவலம் நிறைந்த வாழ்வை மிகத் துல்லியமாக விளக்கியது.

இறுதியாக, மண்டபத்தில் இருந்த அனைத்து மக்களும் எழுந்து மரியாதை செலுத்தி நிற்க, தமிழீழத் தேசியக் கொடி இறக்கப்பட்டு இறுதி வணக்கம் செலுத்தப்பட்டது. மாவீரர் நினைவுகளைச் சுமந்தவண்ணம் கனத்த மனத்துடன் மக்கள் மண்டபத்தைவிட்டு வெளியேறிய காட்சி, எமது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு மேலும் உறுதி சேர்ப்பதாக அமைந்தது. மேலும், வருகை தந்திருந்த அனைவரும் உறுதியின் உறைவிடம், மாவீரர் நாள் -27. 11. 94 என்பவற்றைக் குறித்துநின்ற வட்டவடிவிலான சின்னத்தை அணிந்து, விழாவில் பங்கெடுத்துக்கொண்டமை சிறப்பாக அமைந்தது. ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்ட இவ் மாவீரர் நாள் நிகழ்வின் கலைப் படைப்புக்கள் யாவும், பிரித்தானியா வாழ் தமிழ் மக்களால் வழங்கப்பட்டு, விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகத்தினரால் ஒருங்கமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ■

www.tamilarangam.net



# அரசியலமைப்பு

## ஜேயாரால் ஜேயாருக்காக ஜேயாருடைய

### அத்தியாயம் - 3

## ஜனாதிபதிக்கும் நாடாளுமன்றத்திற்கும் இடையில் மோதலுக்கான ஏற்பாடு

நிர்வாகத்துறையின் தலைவராகிய ஜனாதிபதி சட்டத்துறைக்குப் புறம்பான முறையில் தெரிவாக வேண்டுமென்பது, வலுவேறாக்கக் கோட்பாட்டை அடிப்படையாகக்கொண்டதேயாகும். பிரஞ்சு அறிஞரான மொன்ரஸ்கியூ (Montasquieu) விளங்கி வைத்திருப்பதுபோன்ற, 'வலுவேறாக்கம்' சாத்தியமான தொன்றல்ல. சட்டம், நிர்வாகம் ஆகிய இருதுறைகளும் ஒன்றிலொன்று தங்கி நிற்பவையும் ஒன்றுடனொன்று நெருக்கமாகப் பின்னிப்பிணைந்தவையும் ஆகும். நிர்வாகம் நடாத்த சட்டங்கள் தேவை. சட்டங்களை நடைமுறைப்படுத்த நிர்வாகம் தேவை. எனவே இவ்விரு துறைகளிலும் இருவேறுபட்ட கொள்கைகளைக் கொண்ட அணியினர் அல்லது கட்சியினர் தனித்தனியே ஒரே நேரத்தில் ஆதிக்கம் பெறுவராயின், இரு துறைகளுமே செயற்படமுடியாதுபோகும்.

ஐக்கிய அமெரிக்காவில், மொன்ரஸ்கியூ கூறிய அளவிலான வலுவேறாக்கம் இல்லையாயினும், அவ்வாறான ஒரு வலுவேறாக்கக் கொள்கையை மனதிற்கொண்டே அந்த யாப்பு உருவாக்கப்பட்டுள்ளதனால் நிர்வாகத்துறைக்கும், சட்டத்துறைக்கும் இடையே சில வரம்புகள் உள்ளன. எவ்வாறாயினும் ஒரே நேரத்தில் இருவேறுபட்ட கட்சிகள் மேற்குறிப்பிட்ட இரு துறைகளிலும் ஆதிக்கம்பெற்ற பல சந்தர்ப்பங்கள் அமெரிக்காவில் நிலவியுள்ளன. நெருக்கடிகள் ஓரளவு ஏற்பட்டிருந்தாலும் காலகதியில் இருதுறைகளும் ஒன்றுடன் ஒன்று மோதி, அரசியற் சீர்குலைவு ஏற்படாமலும், அதனால் உள்நாட்டுப் போர் வெடிக்காமலும் அரசாட்சி நிகழக்கூடியதாயிற்று. இதற்குப் பல காரணங்கள் உள்ளன.

நீண்டகாலமாக ஜனாதிபதி முறைமை அமெரிக்காவில் நிலவிவருவதால், நிர்வாகத்துறையும் சட்டத்துறையும் ஒன்றையொன்று அனுபவத்திற்கூடாக அனுசரித்துப்போகும் அரசியல் மரபும் இசைவாக்கமும் வளர்ந்துள்ளன. அங்கு குடியரசுக் கட்சி, ஜனநாயகக் கட்சி எனும் இருகட்சிகளும் மட்டுமே அதிகாரத்தைக் கைப்பற்றக்கூடிய கட்சிகளாய் உள்ளன. இவ்விரு கட்சிகளுக்கும் இடையில் அடிப்படைக் கொள்கை வேறுபாடு இல்லை என்பதால், சட்டத்துறையில் ஒரு கட்சி ஆதிக்கம் வகிக்கும்போது, நிர்வாகத்துறையில் உள்ள மற்றைய கட்சிக்கு அது இசைந்துகொடுக்கும் நிலை உள்ளது. அத்துடன் வெள்ளையின ஆதிக்கம் என்ற விடயத்தில் ஒன்றைவிட மற்றையது சற்று நெகிழ்ச்சித்தன்மை உடையதாய் இருப்பினும், அமெரிக்கத் தேசிய வெறியில் இரண்டும் ஒரே கொள்கையைக் கொண்டுள்ளன. அடிப்படைக் கொள்கைகளில் ஏறக்குறைய இரண்டும் ஒன்று என்பதனால், பொது முடிவெடுப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவே உள்ளதனால், மேற்படி இரு துறைகளுக்கும் இடையில் சமநிலை ஏற்படுவது சுலபமாய் உள்ளது.

மேலும் குறிப்பிட்ட பிரச்சினையில், பொதுவான அபிப்பிராயத்தை பத்திரிகைகள் ஏற்படுத்துவதனால் பொதுத்தேவையின் நிமித்தம் ஒரு துறையை இன்னொரு துறை அனுசரித்தே ஆகவேண்டி உள்ளது. அமெரிக்கப் பத்திரிகைகளும் தேசிய வெறி கொண்டவை என்பதில் சந்தேகமில்லை. மேற்படி இரு துறைகளுக்கும் இடையில் பிரச்சினை ஏற்படும்போது, செய்தித்தாள்கள் ஒரு பொதுமுடிவை இரு கட்சிகளுக்கும் இடையில் முன்னிறுத்துவதால், ஒன்றை மற்றையது அனுசரித்து நடக்க வேண்டியதாய் உள்ளது. இவ்வாறான காரணிகளினால் அமெரிக்காவில் நிர்வாகத் துறையும், சட்டத்துறையும் தனித்தனி அலகுகளாய் உருவாகினாலும் இணைந்து செயற்படுவது சாத்தியமாய் உள்ளது. ஆழமாக ஆராயுமிடத்து செயற்பாட்டு அர்த்தத்தில் அமெரிக்காவில் வலுவேறாக்கம் உண்டு என்று சொல்லமுடியாது. ஆனால் இங்கு கவனத்திற்குரிய விடயம் என்னவெனில், வேறு வேறு தெரிவுகள் மூலம் இரு அலகுகளாக உருவாகும் அரசியல் அமைப்பானது, ஒன்றுடன் ஒன்று இணைந்தோ அல்லது, ஒன்றை இன்னொன்று அனுசரித்தோ அங்கு செயற்பட முடிகின்றது என்பதுதான்.

ஆனால், இலங்கையில் அதற்கேற்ற அரசியற் சூழலோ அன்றி அரசியல் மரபோ வளரவில்லை. ஜனாதிபதியும், சட்டத்துறையும் வேறு வேறு தேர்வுகளினால் தெரியப்படுமிடத்து அன்றி இரண்டும் தனித்தனி அலகுகளாக இருக்கக்கூடியதாக உருவாக்கப்படுமிடத்து அவை நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ ஏதோ ஓர் அளவில் வலுவேறாக்கக் கோட்பாட்டுடன் சம்பந்தப்படுகின்றன. இதில் ஒரு குழப்பம் உண்டு. இந்தவகையில் வலுவேறாக்கக் கோட்பாட்டையும் அமெரிக்க அரசியல் யாப்பையும் இணைத்துக் கண்ணுற்றதால், வலுவேறாக்கம் பற்றி இரு வகைப்பாடுகள் வகுக்கப்பட்டன.

அவை அங்கவேறாக்கம், செயற்பாட்டு வேறாக்கம் என அழைக்கப்படுகின்றன. அமெரிக்க அரசியல் யாப்பின்படி நிர்வாகமும் சட்டமும் தனித்தனி அங்கங்களாய் உள்ளன; அவை தனித்தனியே தெரிவாகின்றன. உதாரணமாக பிரித்தானியாவை எடுத்துக்கொண்டால் அங்கு மந்திரி சபை நாடாளுமன்றத்தின் ஒரு நீட்டமாக இருக்கின்றதே தவிர நாடாளுமன்றத்திலிருந்து வேறானதாகவோ அன்றித் தனியானதாகவோ இல்லை. இவ்வாறாக அமெரிக்காவில் அங்கவேறாக்கம் இருந்தாலும்கூட செயற்பாட்டில் ஒன்றுடன் ஒன்று இணைந்தும், ஒன்றின் மீது மற்றையது தாக்கம் புரிந்தும் வருகின்றன. இவற்றுள் நிர்வாகத்துறையானது சட்டத்துறையின் மீது செல்வாக்குச் செலுத்தியும், ஆதிக்கம் செலுத்தியும் வருவதற்கான நடைமுறையே அதிகம். இவ்வாறு பார்க்குமிடத்து நிர்வாகத்துறையும் சட்டத்துறையும் தனித்தனி அங்கங்களாக இருக்கின்றன என்பதற்காக வலுவேறாக்கம் இருக்கின்றது என்று சொல்வதற்கில்லை. ஆனால் இங்கு கவனிக்க வேண்டியது என்னவெனில் தனித்தனியே உருவாக்கப்பட்டுள்ள இரு அங்கங்களும் ஒன்றுடன் ஒன்று மோதி வெடித்துச் சிதறாமல் இயங்கக்கூடிய நடைமுறை உருவாகியுள்ளது என்பதுதான்.

அமெரிக்காவில் இருப்பதுபோல, அங்கவேறாக்க அடிப்படையில்தான் இலங்கையிலும் வலுவேறாக்கம் பிரயோகம் பெற்றுள்ளது. உண்மையில் இது வெறும் அங்கவேறாக்கமே தவிர வலுவேறாக்கமல்ல. அங்கவேறாக்கம் அமெரிக்காவில் செயற்படுவதற்கான வாய்ப்புண்டு; ஆனால் இலங்கையில் அதற்கேற்ற அரசியல் மரபில்லை. இலங்கையில் ஜனாதிபதி மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படுகிறார். இதற்கான தேர்தலும் விதிகளும் தனியானவை. நாடாளுமன்றத்திற்கான பிரதிநிதிகளும் மக்களால் புறம்பான இன்னொரு தேர்தல் மூலம்



தெரிவு செய்யப்படுகின்றனர். இதற்கான தேர்தல் விதிகளும் தனியானவை. இரண்டும் தனித்தனியே ஆறாண்டுகளை ஆயுட்காலமாகக் கொண்டவை. இவ்வாறு இரண்டும் தனித்தனி அங்கங்களாகத் தோன்றுகின்றன. இவ்வாறான இரு அங்கங்களும் ஒன்றுடன் ஒன்று எப்படி உடன்பாடும், இடர்பாடும், வெட்டுப்பாடும் கொள்ளும் நிலை உள்ளது என்பதை நோக்குதல் நலம்.

இவ்விரு துறைகளுக்கும் இடையிலான அதிகாரவைப்புப் பற்றிய பிரச்சினைகளைப் பிறிதோர் இடத்தில் ஆராய்வோம். இவை இரண்டிற்கும் இடையிலான உடன்பாட்டையும் இடர்பாட்டையும் கோட்பாட்டளவிலும் நடைமுறை சார்ந்தும் ஆராய்தல் பொருந்தும்.

இலங்கையில் அரசியல் ஆதிக்கத்தைக் கைப்பற்றக் கூடிய இரு பெரும் சிங்களக் கட்சிகளிடையேயும் தமிழின எதிர்ப்பு, இந்திய எதிர்ப்பு என்பன பொறுத்து சில பொது முடிவுகள் காணப்பட்டாலும் ஏனைய விடயங்களில் ஏதோ ஓர் அளவில் முரண்பாடுகள் உள்ளன. பொதுவாக எதுவும் கட்சிக் குரோத உணர்வுக்கூடாக அணுகப்படுகின்றதே தவிர, அதற்கு அப்பாலான பரந்த நோக்கிலல்ல. இலங்கையில் எதிர்க்கட்சி என்பதன் அர்த்தம் நல்லதோ கெட்டதோ, 'எதனையும் எதிர்த்தல்' என்ற வகையைச் சார்ந்ததாகவே உள்ளது. எனவே இத்தகைய இயல்பு கொண்ட சிங்களக் கட்சிகள் இரண்டும் சட்டத்துறையில் ஒரு கட்சியும், நிர்வாகத்துறையில் மற்றைய கட்சியுமென ஒரே நேரத்தில் ஆதிக்கம் பெறுமிடத்து நடைமுறையில் அவை செயற்படமுடியாது போகும் தன்மையே பெரிதாக உள்ளது.

### சென்ற இதழ் தொடர்ச்சி

இம்முறையானது செயற்பாட்டில் இருந்த கடந்த 17 ஆண்டுகளிலும் இரு துறைகளிலும் ஒரே கட்சியே ஆதிக்கம் செலுத்தியதால், அநேகமாக இரண்டும் செயற்படக்கூடியதாய் இருந்தது. ஆனால் இவ்வாறு எப்போதும் ஒரே கட்சியே இரண்டிலும் ஆதிக்கம் பெறமுடியும் என்று சொல்வதற்கில்லை.

ஜனாதிபதியின் காலமும் நாடாளுமன்றத்தின் காலமும் ஒரே காலத்தில் தொடங்கி ஒரே காலத்தில் முடிபவையல்ல. இரண்டிற்கும் தனித்தனியான கால அட்டவணைகள் உண்டு. அத்துடன் ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைக்கக்கூடியவராக இருப்பதால் நாடாளுமன்றத்தின் காலம் ஸ்திரமற்றது என்பதுடன், ஜனாதிபதி தனக்கென குறித்த ஓர் எதிர்பார்க்கையுடன் நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடாத்தினால், அதன் தேர்தல் முடிவு எதிர்மாறானதாகவும் அமையலாம்.

கட்சி ஒழுக்கங்களுக்கு முதன்மை கொடுப்பதைவிடவும் கட்சி அரசியலில் குடும்பங்களுக்கும் ஆளணிகளுக்கும் முதன்மை கொடுப்பது இலங்கையின் கட்சி அரசியலில் பெரிதும் காணப்படும் ஓர் அம்சமாகும். இதனால் இந்நிறுவனங்களுக்கிடையே பிரச்சினைகள் எழும்போது விட்டுக்கொடுப்பற்ற, 'குடும்ப ஆதிக்க முதன்மை' பெரும் பங்காற்றுகின்றது.

ஜனநாயக மரபுகளைப் பற்றி என்னதான் பேசிக்கொண்டாலும் அது அரசியலில் ஒரு பண்பாடாக மாறவில்லை. உதாரணமாக தன்னை ஒரு பெரும் ஜனநாயகவாதியாகப் பறைசாற்றிக் கொண்ட ஜே. ஆர். ஜெயவர்த்தனா தனது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் திகதியிடப்படாத இராஜினாமாக் கடிதங்களை வாங்கி வைத்திருந்தார். இவ்வாறான ஒரு சம்பவம் அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளில் நடைபெற முடியாது. அவ்வாறு ஒரு நிகழ்வு ஏற்படுமாயின் பத்திரிகைகள் விடாப்பிடியாக ஆட்சியாளனைக் கண்டித்து அவரைப் பதவியிலிருந்து

**தமிழீழத்திலிருந்து**
**மு.திருநாவுக்கரசு**

கவிழ்த்திருக்கும். இவ்வாறாக ஜனாதிபதி முறைமை செயற்பட்ட ஒரு காலத்தில் அதுவும் ஒரே கட்சியே இரு துறைகளிலும் ஆதிக்கம் வகித்த காலத்தில், அத்துடன் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியின் கட்சி ஆறில் ஐந்து பங்கு பெரும்பான்மைப் பலத்துடன் விளங்கிய காலத்தில், சட்ட மன்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கு ஜனாதிபதி இவ்வாறாக திகதியிடப்படாத இராஜினாமாக் கடிதங்களை வாங்கி வைத்திருந்தமையானது, சட்டத்துறையின் உரிமையை மீறுவது மட்டுமன்றி, சாதாரணமாக ஒரு பிரஜையின் அடிப்படை உரிமையை மீறும் செயலாகவும் அமைந்திருந்தது. அதாவது, அரசியலமைப்புத் திட்டத்தில் பெரிதும் வற்புறுத்தப்பட்டிருக்கும் தனிமனிதனின் அடிப்படை உரிமை, சிந்தனைச் சுதந்திரம் என்னும் இரண்டையும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு மீறப்பட்டுள்ளதை மேற்குறித்த நடவடிக்கை வெளிக்காட்டியது.

முதலாவது ஜனாதிபதி பதவியில் இருந்த இரு தடவைகளும் 5/6 பங்கு பெரும்பான்மைப் பலத்தைச் சட்டசபையில் கொண்டிருந்தும், சட்டசபையுடனான மோதலில் தனது வெற்றியை உறுதிப்படுத்தும் நோக்கில் முன்கூட்டியே அவ்வாறு செய்துகொண்டார். ஆனால் இரண்டாவது ஜனாதிபதியாக திரு. ஆர். பிரேமதாஸ பதவி வகித்த காலத்தில் நாடாளுமன்றத்தில் அவர் சாதாரண பெரும்பான்மைப் பலத்தை மட்டுமே பெற்றிருந்த நிலையில், தனது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் ஜனாதிபதி திகதியிடப்படாத இராஜினாமாக் கடிதங்களை வாங்கி வைத்திருக்காத நிலையில், சட்டமன்றத்திற்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான மோதல் மிகவும் கூர்மை அடைந்திருந்தது. அம்மோதலின் உச்சகட்டமாக ஜனாதிபதிக்கு எதிரான குற்றச்சாட்டு மனு ஒன்றினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்காக, சபாநாயகரிடம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுச் சமர்ப்பித்திருந்தனர். இவ்விவகாரத்தில் ஐ. தே. க நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் ஜனாதிபதிக்கு எதிராக அணி திரண்டிருந்தனர்.

இவ்விடயத்தில் சட்டரீதியான பாதையின்படி, ஜனாதிபதி தோல்வி அடைவதற்கேற்ற நிலைமையே பலமாய் இருந்தது. ஆனால் சபாநாயகர் மீது அச்சுறுத்தல்களை ஜனாதிபதி மேற்கொண்டே, தனக்கெதிரான வழக்கைத் தடுத்து நிறுத்த முடிந்தது. அச்சுறுத்தல், மிரட்டல், ஆள்கடத்தல் போன்றவற்றின் மூலமே சிங்களக் கட்சி அரசியலில் செயற்படுவதைக் காணலாம். இந்நிலையில் ஜனாதிபதிக்கும் சட்டமன்றத்திற்கும் இடையிலான போட்டியில் சட்ட வரண்முறைகளுக்கு அப்பாலான அம்சங்கள் அரசியலில் தீர்க்கமான பாத்திரம் வகிப்பதைக் காணலாம். அரசியல் திட்டத்தினை உருவாக்கியபோது சட்டமன்றத்தை மேலாண்மை செய்யக்கூடிய அதிகாரங்கள் ஜனாதிபதிக்கு ஒதுக்கப்பட்டிருந்தும், அரசியல் திட்டத்தை உருவாக்கினவர்களே தமது ஆட்சிக் காலத்தில் அரசியல்சட்ட, சாதாரணச் சட்ட வரண்முறைகளை மீறிச் செயற்படக்கூடிய அளவிற்குத்தான் இலங்கையின் அரசியல் திட்டமும், அரசியல் திட்ட நடைமுறைகளும் அமைந்திருப்பதைக் காணலாம். ஒரே கட்சியே ஜனாதிபதிப் பதவியிலும் நாடாளுமன்றத்திலும் ஆதிக்கம் பெற்றிருந்த சூழலில் நாடாளுமன்றத்திற்கும் ஜனாதிபதிக்கும் இடையில் பெரும் போட்டி ஏற்பட முடியுமென்றால், வேறு வேறு கட்சிகள் ஒரே நேரத்தில் இவற்றில் ஆதிக்கம் பெறும் வேளைகளில் அரசியல் நெருக்கடி எத்துணை பெரிதாய் இருக்கும் என்பதை சொல்லாமலே உணரலாம். ■

**(தொடரும்)**

*மனித உரிமைக்கும் மனித நீதிக்கும் சமாதானத்திற்கும் குரலெழுப்பும் இந்த உலகமானது உரிமைகேட்டு நீதிகேட்டு சமாதான வழியில் தீர்வுகேட்டு நிற்கும் எமது மக்களிற்கு சார்பாகக் குரலெழுப்பவேண்டும். இதுவே உலகத்தின் இன்றைய தார்மீகக் கடப்பாடாகும்.*

**தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தவம்



எமது செய்தித்தாளில் முன்னர் வெளியிடப்பட்ட மேலுள்ள படத்திற்காக, எழுதப்பட்ட கவிதையே இது.

இது –
ஒரு காட்டின் கதை!
மல்லிகை மனசுகள் வாழும்
கூட்டின் கதை...!
யார் சொன்னது...?
சந்தன மரங்களுக்குத்தான்
வாசமுண்டென்று...?
சுற்றித் தெரியும்
இந்தப் பச்சை மரங்களுக்கும்
வாசமுண்டு –
இந்தப் பாசறை மனிதர்களை
நேசிப்பதால்...

பின்னால் தெரியும்
தென்னங் கீற்றுக்களே!
உங்களுக்கு ஒரு செய்தி...
தென்றல் காற்றை பிரசவித்து
ஒரு முறை
எங்களுக்கும் அனுப்பிவிடுங்கள்!
அதில் கலந்திருக்கும்
இவர்களின் மூச்சுக் காற்று பட்டு
நாங்கள்
முக்தி அடைவதற்கு...

வறண்டு தெரிவது – இவர்கள்
முகங்கள் மட்டும்தான்...
இவர்களது உணர்வுகள்...?

தலைக்குமேலே
தனித்து தெரியும்
அந்த துப்பாக்கிகளைப்போல்...
துப்பாக்கிகள் என்றைக்கு
தூங்கியிருக்கின்றன?

அந்த வெள்ளைத்தாளில் தெரியும்
கறுப்பு எழுத்துக்கள் –
நாளைய கல்வெட்டுக்களில்
இவர்களது
வீரக்கதை சொல்லும்...

காடை வீடாக்கும்
கணக்கு தெரிந்தவர்களே!
நாளைய ஒரு பசுமை உலகம்
உங்களால் மட்டுமே உதிக்கும்...

வாள்முனைக்கு மத்தியில்
வேள்வித் தவம் செய்யும்
சரித்திர புருஷர்களே!
உங்கள் கையெழுத்துக்களை கொஞ்சம்
அனுப்பி வையுங்கள் –
என்னுடைய
ஓட்டோகிராஃப் புத்தகத்திற்குள்
பத்திரப்படுத்துவதற்கு...

- செந்திவேல் குமாரவேல் -
(இங்கிலாந்து)

# மாவீரர்களுக்கு அஞ்சலி

மூவிரண்டு வயது ஆகவில்லை எந்தனுக்கு
முந்திவிட்டேன் மாவீரர் அஞ்சலிக்கு!
நாவிலிரண்டு வார்த்தைகள் - நான்
நன்றியுடன் போற்றிடுவேன் நம் வீர நாயகர்க்கு.

ஐயிரண்டு திங்கள் அன்புடனே சுமந்தாள் உன் அன்னை
-அதற்காய்
தமிழன்னையின் விலங்கொடித்து நம் சுமை சுமந்தீரே?
ஆறிரண்டு வயதினில் போரிடென்று - உன்னிடம்
தோளிரெண்டில் துவக்கினைத் துணிவுடன்
தூக்க வைத்ததோ துஸ்டச் சிங்களம்?

ஏழிரெண்டு ஆண்டுகளில் எத்தனை வளர்ச்சி?
எம் இதயங்களில் நீவீர் வாழ்கின்றீர் இதோ சாட்சி!
எண்ணிரெண்டின் கோலங்கள் உங்கள் கண்களிலே - உம்
எண்ணமெலாம் ஈழத்தின் விடியலிலே
ஒன்பதிரெண்டில் ஒருவனின் கைபிடித்து
ஊமையாய் ஒடுங்கிவிடும் பெண்களிடையே
ஓர்மமாய் எதிரியை ஓடவிரட்டி நம் உரிமைக்காய் உயிர்நீத்து
உயர்ந்துவிட்ட உத்தம அன்னையரே!

பத்திரெண்டு ஆண்டுகள் பரபரப்பாய் கழிந்தாலும்
பாரினிலே உங்கள் பெயர் மறைந்திடாது மாவீரர்களே! - நம்
சொத்தென்று காத்து நிற்போம் - தினம்
சுடர்விளக்கேற்றிடுவோம்.

அமுதா புலேந்திரன்
(யேர்மனி)

# எழுந்திடுவீர்

எழுந்திடுவீர்! எழுந்திடுவீர்! கவிகள்!
எரிமலையின்! பிளம்பாக! நீவீர்...!
புனைந்திடுவீர்! புனைந்திடுவீர்! கவிகள்!
மண்ணில்! நெருப்பில்!
புதைந்திட்ட! எரிந்திட்ட!... எம்
மாவீரர்களைப் போற்றி...!
எதிரியின் பாசறை புகுந்து...! தம்மை
எரித்தவர் விடுதலை தந்தார்...! – தம்
இளமைக் கனவினை எரித்து...! தம்
இனத்தின்! விடுதலை கொண்டார்...!
இடர்பட்ட! மக்களைக் காக்க – தம்மை
இடுபட்ட மண்ணுக்குள் தாட்டார்...
புனைந்திடுவீர்! புனைந்திடுவீர்! கவிகள்!
பூகழ்பூத்த மாவீரர் புகழை!
புகழ்பூத்த மாவீரர் புகழை!

- வேலணையூர் பொன்னண்ணா
(டென்மார்க்)

# மாவீரர் நினைவாக...

சிந்தையில் எந்நேரமும் –ஈழ
மந்திரம் சொல்லி
எந்திரமாய் எம் தலைவன் வழி
முந்திய வீரனாம் சங்கரின் சாவை
பந்தியில் முதலாய்க் கொண்டு....
வீந்தைகள் ஆயிரம் செய்து மறைந்திடும்
வீரர்கள் யாவரையும் நினைவில் மீட்டி –தீப்
பந்தங்கள் பிடித்தவர் சாமாதிமுன்
சத்தியம் செய்வோம்
நிச்சயம் நாங்கள் ஈழம் வெல்வோம்

தமிழொளி
இலண்டன்

## கவிதைக் களம்

# வீரஉள்ளம்

பொடி போட்ட மனிதர்கள்
தடை போட்ட போருக்கு
வெடிபோட்டு பின்
அடிபோட்ட நீயும்
சடை போட்ட பெண்மணியா?

கன்னிமகள் நீ உன் காதலையும்
காடையர்கள் கொண்டு வந்த கலங்களையும்
கண்ணிமைக்கும் பொழுதினிலே
கலங்கடித்த பெண்மயிலே!

காட்டாறு போல் உன்
காலங்கள் போய்விட்ட போதிலும்
கண் எதிரே தோன்றும் – நம்
கடல் தீபம் நீயடி

உலரும் நெஞ்சம் உலராது காக்க
தளரும் போரும் தலைநிமிர்ந்து நிற்க
மலராய்ப் பூத்த மல்லிகை மொட்டே – நீ
மண்ணுக்காய் மரித்த வீரம் தான் என்ன!

பூ. பிரபாகரன்
இலண்டன்

# ஓ... திலீபன் உன் நினைவாக!

ஊரெல்லாம் பறை சாற்றும்
ஊரெழுக் கிராமத்தில் உதித்து
உரிமைக் குரல் எழுப்பி
ஊர் உலகம் போற்ற வாழ்ந்தவனே!

தமிழர்க்கு இழைக்கப்படும் கொடுமைகளை
தலை நிமிர்ந்து தட்டிக் கேட்டு
தலைவன் வழியில் பாசறை சேர்ந்து
தலைவன் மனதில் தனியிடம் பிடித்தவனே!

அருவியாய் இருந்து ஆறாக ஓடி
அரசியற் தளபதியாய் உயர்ந்து
அரும் பெரும் சாதனைகள்
அற்புதமாய் செய்தவனே!

அன்றொரு நாள் 87 இல்
அயல் நாட்டுப் படை ஒன்று
ஆகாயம் முதல் பாதாளம் வரை
அற்புதமாய் படை எடுத்ததேன்?

படை எடுத்த பாரதப் படைகள்
பகைவனைப் பாதுகாத்து
பாதகம் புரிந்து நிற்க - அறவழியில்
பலத்துடன் எழுந்தவனே!

ஆகாரம் ஏதுமின்றி அறப்போர் தொடுத்து
அயல் நாட்டு ஆக்கிரமிப்பை
அனைத்துலகும் அறிய வைத்து
அகிம்சையின் விதையானவனே!



உண்மையின் உணர்வொன்று
உரிமைக்காய் உருகிக் கொண்டிருக்க - காந்தியம்
உச்சரிக்கும் இந்திய அரசோ
உறங்கிக் கொண்டதேன்?

தமிழினம் என்றோர்
தனியினம் உண்டென
தரணி எங்கும் முரசறைந்த
தமிழீழத்தின் தியாகச் செம்மல் திலீபனே!

உன் புகழ் பாடி....
உன் வழிதேடியே தீருவோம்!

கிளிநொச்சி ஊரான்
யேர்மன் வாழ் ம. ஜெயதாஸ்

www.tamilarangam.net



# புதிய உலக ஒழுங்கில் புதிய வரலாறு படைக்கும் கெயிற்றி

உலக உலா

"இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் கெயிற்றிமீது படையெடுத்து, அதனை அடிமைப்படுத்தி, பெரும் அட்டூழியங்களைப் புரிந்த அமெரிக்கர், இப்போது கெயிற்றிய மக்களின் நண்பர்களாகிவிட்டனர். கெயிற்றியின் பாலர்களுக்கு இனிப்புக் கொடுக்கின்றனர். அதுபோலவே, கடந்த மூன்று ஆண்டுகளாகக் கெயிற்றியைக் கொலைக்களமாக்கியோர் சட்டரீதியான மன்னிப்பைப்பெற்று, பாதுகாப்பாக நாட்டைவிட்டு வெளியேற அனுமதிக்கப்பட்டுள்ளனர். வரலாற்றின் சக்கரச் சுழல்வில் நாம் காணும் நேர்முரணெதிர் நிலைகள் இவை".

**வ**ரலாற்றின் மிகவிசித்திரமான பக்கங்களாக, இப்போது கெயிற்றியில் நடக்கும் நிகழ்வுகள் அமையப்போகின்றன. சென்ற செப்டெம்பர் 18 ஆம் நாள் அன்று, கெயிற்றி மீது படையெடுப்பு மேற்கொள்ள கடைசி நிமிடம்வரை தயார்நிலையில் வைக்கப்பட்டிருந்த அமெரிக்கப் படைகள், இறுதியில் படையெடுப்பை நிகழ்த்தாமலேயே கெயிற்றியைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துவிட்டன. 1989 ஆம் ஆண்டு பனாமாவிற்குள் படை எடுக்க அனுப்பப்பட்டோரைவிட, சோமாலியாவுக்கு அனுப்பப்பட்டோரைவிட, கூடுதலான (28,800) படை வீரர் (கடலில் தரித்து நிற்போர் உட்பட) கெயிற்றிக்கு அனுப்பப்பட்டனர். முன்பு அமெரிக்க நலன்களுக்கு எதிரான இடதுசாரிப் போக்குள்ளவர் என அமெரிக்காவால் வன்மையாக எதிர்க்கப்பட்ட அரிஸ்டீட், இப்போது அமெரிக்கப் போர்வீரர் பாதுகாப்பில் கெயிற்றியில் பதவியேற்றுள்ளார். இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் கெயிற்றி மீது படையெடுத்து, அதனை அடிமைப்படுத்தி, பெரும் அட்டூழியங்களைப் புரிந்த அமெரிக்கர், இப்போது கெயிற்றிய மக்களின் நண்பர்களாகிவிட்டனர். கெயிற்றியின் இளம் பாலர்களுக்கு இனிப்புக் கொடுக்கின்றனர். அதுபோலவே கடந்த 3 ஆண்டுகளாகக் கெயிற்றியைக் கொலைக் களமாக்கியோர் சட்டரீதியான மன்னிப்பைப் பெற்று, பாதுகாப்பாக நாடுவிட்டு வெளியேற அனுமதிக்கப்பட்டுள்ளனர். வரலாற்றின் சக்கரச் சுழல்வில் நாம் காணும் நேர் முரணெதிர் நிலைகள் இவை.

## ஏழைப் பங்காளன் அரிஸ்டீட்

ஆனால் இவை எப்படியிருந்த போதிலும், மீண்டும் கெயிற்றியின் ஏழை மக்கள் முகத்திலே மகிழ்ச்சி பரவுகின்றது. இருண்டுகிடந்த அவர்கள் வாழ்விலே நம்பிக்கை ஒளியாக அவர்களிடமே மீண்டும் 'புரட்சிகர மத குரு' அரிஸ்டீட் வந்துவிட்டார். அவர்கள் விரும்பித் தெரிவு செய்த 'ஏழைப் பங்காளன்' அரிஸ்டீட் தனது எஞ்சிய 16 மாதகால சனாதிபதி பதவிக் காலத்தை அவர்கள் நலனுக்காகவே பயன்படுத்தப் போகின்றார். 1990 ஆம் ஆண்டு தனது 37 ஆவது வயதில் கெயிற்றியின் வரலாற்றிலே முதல் தடவையாக நடைபெற்ற சனாதிபதித் தேர்தலில், 70 விழுக்காட்டு வாக்குகளைப் பெற்று, சனாதிபதியான அவரை எட்டு மாதகாலமே பதவியிலிருக்க கெயிற்றிய இராணுவம் அனுமதித்தது. இராணுவத்தின் சதியால் நாடுவிட்டு தப்பி கடந்த 3 ஆண்டுகளாக அவர் அமெரிக்காவிலே தனது 'நிர்ப்பந்திக்கப்பட்ட தங்கலை' மேற்கொள்ள நேரிட்டது. அடுத்த சனாதிபதித் தேர்தல் 1995 ஆம் ஆண்டு முடிவில் நடக்கவேண்டும். 1996 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் புதிய சனாதிபதியிடம் பொறுப்பை அரிஸ்டீட் ஒப்படைக்க வேண்டும். இது பற்றி அவரிடமே கேட்கப்பட்டபொழுது, "பதவியிலிருப்பது அல்ல எனக்கு முக்கியம்; அல்லது எனது பதவிக்காலம் எவ்வகையில் கழிந்தது என்பதும் முக்கியமல்ல" என்றார். அரிஸ்டீட்டை நன்கு அறிந்தோர் அவர் கூற்றின் உண்மையை உணர்கின்றனர்.

ஏனென்றால் அவர் வாழ்க்கை அப்படிப்பட்டது. பல நூற்றாண்டு காலமாக அடிமைத்தளையில், மூடநம்பிக்கையின் பிடியில், அடக்குமுறையின் கொடுங்கரத்தில் சிக்கித் தவித்த மக்களை மீட்க வந்த 'மேய்ப்பராக' அவர் கருதப்படுகின்றார். கெயிற்றியின் சேரிப்புற மக்களிடமே வாழ்ந்து அவர்கள் நலனையே முதன்மைப்படுத்திச் செயற்பட்டவர். மரபுமீறி செயற்படுவதாகக் கூறி அவரை திருச்சபை விலக்கிய போதும் மனம் தளராதவர். அமெரிக்காவில் தங்கியிருந்த போது அமெரிக்க அழுத்தங்களுக்குப் பணியாமல் அமெரிக்கரின் மனச்சாட்சியினையே உலுக்கியவர். அமெரிக்க சி. ஐ. ஏ. தொட்டு அவருக்கு எத்தனை எதிரிகள்? எத்தனை கொலை முயற்சிகளில் அவர் தப்பி இருக்கின்றார்? 1990 ஆம் ஆண்டு முடிவில் அவர் சனாதிபதியாகிய பின் பாரிய பொருண்மிய மாற்றங்கள் மேற்கொண்டு கெயிற்றிய பொருண்மியத்தை மறுசீரமைக்க முயன்றவர். அமெரிக்க தலையீட்டைத் தவிர்த்து, தன்னையொரு கியூபாவின் காஸ்ரோவாக, லிபியாவின் கடாபியாக சமப்படுத்தியவர். அதன் காரணமாக 'கம்யூனிச மனநோயாளி' என அமெரிக்க செய்தியேடுகளால் தூற்றப்பட்டவர். ஆனால், தொழிலாளிகளுக்கு வேதன உயர்வு வழங்குமாறு நிர்ப்பந்தித்தபோது கெயிற்றியில், 'கொக்கெயின்' போதைப்பொருள் வணிகத்தை தடைசெய்ய முயன்றபோது கெயிற்றியின் செல்வந்தர்கள், இராணுவத்தோடு சேர்ந்து அவர் ஆட்சிக்கு முடிவு கட்டினர். அமெரிக்காவின் படையெடுப்பை அரிஸ்டீட் என்றும் விரும்பியவரல்லர். அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் பதவியிலிருத்தப்பட்டவர் என்று பெயர் வருவதை அவர் விரும்பியவர் அல்லர். அவர் கெயிற்றிக்கு திரும்பமுன் அவரிடம் இது பற்றி கேட்கப்பட்டபோது, "அமெரிக்கப் போர்வீரர் இப்போது கெயிற்றியில் உள்ளனர், கெயிற்றிய மக்களை உயிருடன் இருக்க உதவுகின்றனர். ஆனால், அங்கு படையெடுப்பு நிகழவில்லை. இந்த யதார்த்தத்திற்கு நன்றி கூறுகின்றேன். ஏனென்றால் இந்த அரசியல் வாழ்வில் நான் உணர்ந்தது என்னவென்றால் பகிரங்கமாக கூறப்படுபவை அறிக்கைகளாக விடப்படுபவை எல்லாமே பொருட்படுத்தப் படுபவையல்ல. நிகழ்ச்சிகளும் செயல்களுமே உண்மையில் கவனிக்கப்பட வேண்டியவை" என்றார். இக்கூற்று அவரது மாறிய மனநிலையையே குறிக்கின்றது. ஏனென்றால் மூன்று ஆண்டுகளாக கெயிற்றி மக்கள் பட்ட அவலம், அவரை ஆதரித்தோர் நாள்தோறும் கொல்லப்பட்ட கொடுமைகள் அவரை இம் முடிவுக்குத் தள்ளியிருக்கலாம். அதைத்தவிர மீண்டும் நாடு செல்ல அவருக்கு வேறு வழியும் இருக்கவில்லை.

## கெயிற்றியின் போராட்ட வரலாறு

கெயிற்றியின் வரலாறு சோகமும், வீரமும் விரவிய கலவை வரலாறு. கொலம்பசால் கண்டு பிடிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட கரிபியன் தீவுக் கூட்டங்களில் ஒன்றாகிய கெயிற்றி. அதனால், ஸ்பெயினின் ஆதிக்கத்திற்குட்பட நேரிட்டது. தம்மை எதிர்த்த கெயிற்றியின் தொன்மைக் குடிகளான செவ்விந்தியரை வேரோடு அறுத்த ஸ்பானியர், ஆபிரிக்க கறுப்பின மக்களை அங்கு அடிமைகளாகக்கொண்டு வந்து சேர்த்தனர். பின்னர் "கால மாற்றங்களினால் ஸ்பெயினிடமிருந்த கெயிற்றி, பிரான்சியர் வசம் 1697 ஆம் ஆண்டு கைமாறியது. பிரான்சியரின் ஆட்சியில் கரும்புத் தோட்டங்களிலே தமது வாழ்நாளை அடிமைக் கூலிகளாகக் கழித்த கறுப்பினமக்கள், 1789 ஆம் ஆண்டு பிரான்சியப் புரட்சியினைத் தொடர்ந்து, தமது அடிமைத்தளைகளை அறுத்தனர். ஆயினும்

**தமிழீழத்திலிருந்து பாலகுமாரன்**

பின், நெப்போலியனின் ஆட்சியின்போது, அடிமைப்படுத்தப்பட்டு அவர்களின் அடிமைத்தளையை அறுத்த வீரன் டூசியன்ட் லொவேச்சு (Toussaint Louverture) கைதாக்கப்பட்டு, பிரான்சிய சிறையிலே இடப்பட்டு அங்கு மரணமானார். எனினும் இம்மக்கள் தமது போராட்டத்தைத் தொடர்ந்தனர். பிரான்சியருக்குப்பெரும் நெருக்கடிகளைக் கொடுத்தனர். பிரான்சு வெளியேறிய பின்னர், 1915 ஆம் ஆண்டளவில் கெயிற்றியில் அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டதைச் சாதகமாகப் பயன்படுத்தி, முதலாம் உலகப் போருக்கு முன்னதாக அமெரிக்கா இங்கு தலையிட்டது. வழமைபோல 'தனது மக்களின் நலன்களைப் பாதுகாக்க' என்றும் அமெரிக்காவுக்கான கெயிற்றியின் கட்டுப்பாடுகளை நிறைவேற்றவும் படை எடுப்பதாகக் கூறி 1934 ஆம் ஆண்டு வரை, தனது கொடுங்கோலாட்சியை அமெரிக்கா இங்கு தொடர்ந்தது. இக்கால கட்டத்திலே கெயிற்றிய மக்களின் தேசிய எழுச்சிப் போராட்டங்களை மிகக்கடுமையாக நசுக்கிய அமெரிக்கர், பல்லாயிரம் மக்களைக் கொன்று குவித்தனர். இக்கால கட்டம் அமெரிக்காவின் வரலாற்றிலே மிகக் கறைபடிந்த, மிகஇழிவான இனவாதக்கொள்கை கடைப்பிடிக்கப்பட்ட காலம் என இப்போது அமெரிக்க வரலாற்றாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதன் பின்னும் கெயிற்றிய மக்கள் வாழ்வில் விடியல் தோன்றவில்லை. கறுப்பின தேசிய வாதத்தைப் பயன்படுத்தி, 1957 ஆம் ஆண்டளவில் பப்பாடொக் (Papadoc) என்றழைக்கப்படும். கொடுங்கோலன் பிராங்கோஸ் டுவாலியர் சதி மூலம் பதவியைப் பறித்து டுவாலியர் குடும்ப ஆட்சியைத் தொடங்கினார். கெயிற்றியின் பாமர மக்களைப் பயமுறுத்த வூடோ (Voodoo) என்றழைக்கப்படும் மேற்கிந்திய கறுப்பின மக்களின் மந்திர தந்திர பில்லி சூனிய பழக்கங்களைப் பயன்படுத்தி, பெரும் பயங்கர ஆட்சியை இம்மக்கள் மேல் கட்டவிழ்த்து விட்டார். 1971 ஆம் ஆண்டு இவர் இறக்க, இவரது மகனும் 'பேபிடொக்' எனப்பட்ட இன்னொரு டுவாலியர் ஆட்சியைத் தொடர்ந்தார். பல்வேறு குழப்பங்கள் மத்தியில் இவர் 1986 ஆம் ஆண்டு நாடு விட்டோடி பிரான்சில் தஞ்சம் புகுந்தார். இதன்பின் பல்வேறு மக்கள் கிளர்ச்சிகளும் அடக்குமுறைகளுமாக கெயிற்றியின் வரலாறு விரிந்தது. பின்னர் பல்வேறு அழுத்தங்களால் 1990 ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்று அரிஸ்டீட் மக்களால் தெரிவான முதல் சனாதிபதியானார். எனவே மீண்டும் கெயிற்றி தனது பழைய இருண்டகாலத்திற்குச் செல்லக் கூடாதென்பதே அரிஸ்டீட்டின் நோக்கம். தான் தொடக்கிவைத்த ஆட்சியால் பாமர கெயிற்றி மக்களின் அரசியல், மனித உரிமைகள் பேணப்படும்; அவர்களுக்கான நல்லாட்சியாகத் தொடரவேண்டும் என்பதே அரிஸ்டீட்டின் இத்தகைய முடிவுக்குப் பிரதான காரணமாகின்றது. எனவே அவரது நோக்கம் மீண்டும் இப்போது நிறைவேறுகின்றது.

## சி. ஐ. ஏயின் திருவிளையாடல்

எனவே இச்சனநாயக இலக்கை அடைவதற்கு, தான் உதவியதன் மூலம் தனது பழைய களங்கத்தை, கறையைத் துடைக்கலாம் என அமெரிக்கா நம்புகின்றது. தான் பதவியிலிருந்தபோது கெயிற்றிய நிலைகண்டு இரங்காதவரான ஜிம்மி கார்ட்டர் பதவி விலகியபின், கெயிற்றி சென்று அமைதி முயற்சிகளில் ஈடுபடுவது இதற்குத் தக்க எடுத்துக்காட்டு. ஆனால் எது எப்படி இருந்தாலும் அண்மைக் காலத்தில்கூட அமெரிக்க சி. ஐ. ஏ. (C. I. A) கெயிற்றி தொடர்பாக மேற்கொண்ட மிகக் கேவலமான செயற்பாடுகள் அமெரிக்கரின் உண்மை முகத்தினை அம்பலமாக்கிவிட்டது. சி. ஐ. ஏயின் போக்கினால் பெரும் அவமானமுற்றதாக இன்றைய அமெரிக்க அரசியல் மாறிவிட்டது. அமெரிக்கச் செய்தித்தாள்கள் பல இவ்விடயத்தில் சி. ஐ. ஏ. நடந்த முறையை

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்...




"முன்னர் நடந்த கொடுமைக்காக நாம் பழிவாங்கப்போவதில்லை; ஆனால் அவற்றை நாம் மறக்கவும் போவதில்லை".

- கெயிற்றிய சனாதிபதி அரிஸ்டீட்

www.tamilarangam.net

# அனைத்துலக நாடுகளில் நடைபெற்ற
# மாவீரர் நாள் நிகழ்வுகள் - 1994


சுவிசில்


அவுஸ்திரேலியாவில்


யேர்மனியில்

## விடுதலைக்காய் விதையானவர்கள்...

துயரிருள் சூழ்ந்திருந்த தாய் முகத்தில்
சுடரேற்ற முளைத்த வெள்ளிகளே – உங்கள்
உயிரீந்தீர், உதிரத்தால் பயிர் வளர்த்தீர்.
உடலதை விதையாக்கி உணர்வு தந்தீர்...
குயிலோசை கேட்காத வசந்தகாலம் அழும்
குரலோடு பொழுதுகள் விடிந்த காலம்
துயிலாது உண்ணாது தேசம் காத்தீர் – எங்கள்
சுற்றத்துள் ஒன்றாகி இணைந்து கொண்டீர்.
காற்றாகி, நீராகி, நிலமாகினீர் – தமிழீழ
களமெங்கும் வழிகாட்ட நடமாடினீர்
நேற்றிருந்து உங்கள் பணி தொடர – இதோ
நீண்டதொரு படையணி வருகுது பாரீர்
தோற்காது ஒருபோதும் பணியாது வலிமை
தோள்களிலே சுமந்து வரும் மனஉறுதி
ஏற்றபடை, உமது தாகம் தீர்க்கும், அது
அமைக்கும் தமிழீழத் தாயகம் காண்.

வேங்கையாய் பாய்ந்தவர் வீழ்களிலே
விடுதலைத் தீயைக் கண்டோம்
பூங்கரங்கள் மீதில் பொறி ஏந்தி
போர்முரசு கொட்டிய படை கண்டோம்
தூங்கிக் கிடந்து உண்டு களிப்பதற்கா
தாய் எம்மைச் சுமந்து நொந்தாள் – புலிகள்
தாங்கும் எங்கள் பாரச்சிலுவையை – நாமும்
தாங்கிச் சுமந்தால் அதுவே இன்பம்.

கே.என். ராஜ்
இலண்டன்


யேர்மனியில்


இலண்டனில்


சுவிசில்


**U.T.O**
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

**L.T.T.E**
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

**W.T.C.C**
Gold Gasse-8, 7000 Chur
SWITZERLAND
Tel/Fax: 077-816609

**T.C.G**
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

**T.C.C**
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F091-611 3179

**T.C.C**
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F 435 81191

**T.C.C**
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

**T.C.C**
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

**T.C.C**
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

**T.C.C**
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943


Printed by Observer Group Newspapers.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்